

தமிழ்த் திருமகன்

கால்டுவெல்

தமிழ்மொழி வரலாற்றில் ஒரு திருப்புமுனை

பேராசிரியர் வெ.சிவப்பிரகாசம்

தமிழ்த் திருமகன்

கால்டுவெல்

தமிழ்மொழி வரலாற்றில் ஒரு திருப்புமுனை

'திராவிட மொழியியலின் தந்தை'

(1814-1891)



'சமூக நீதி எழுத்தாளர்' பேராசிரியர். முனைவர்

வெ.சிவப்பிரகாசம்

கலாம் பதிப்பகம்

நூலின் பெயர்	:	தமிழ்த் திருமகன் கால்டுவெல் தமிழ்மொழி வரலாற்றில் ஒரு திருப்புமுனை
ஆசிரியர்	:	பேராசிரியர். முனைவர். வெ.சிவப்பிரகாசம்
முதற் பதிப்பு	:	ஜீன் 2015
உரிமை	:	பேரா.எஸ்.வளர்மதி நாட்வெஸ்ட் விஜய் அபார்ட்மென்ட், காவேரி பிளாக், 2வது தளம், பிபிளாட், 69, வேளச்சேரிதாம்பரம் ஹை ரோடு, பள்ளிக்கரணை சென்னை - 100 செல்பேசி: 9442523518/ 044-22461356 மின்னஞ்சல்:profdrvsprakash@yahoo.com
வெளியீடு	:	கலாம் பதிப்பகம், 6, இரண்டாவது பிரதான சாலை, சி.ஐ.டி.காலனி, மைலாப்பூர், சென்னை - 600 004, தொலைபேசி: 044 2499 7373 \ 94440 25000.
ஒளியச்சு	:	நெறி, சென்னை - 600 078.
வடிவழகு	:	தமிழ் அலை ஊடக உலகம், சென்னை - 600 086, அலைபேசி : 97862 18777.
பக்கம்	:	104
விலை	:	ரூபாய். 80/-

A. William Rabi Bernard
Member of Parliament
(Rajya Sabha)

Member:
Standing Committee on Agriculture
Consultative Committee on
External Affairs

No. 12, MP's Flat, South Avenue,
New Delhi - 110001
Ph: 011-23795740
e-mail: rabibernard@yahoo.com
No.31, Dr.B. Narasimhan Salai,
T.Nagar, Chennai - 600 017,
Tamil Nadu.
Tel.: 044-28154420
Mob.: 09940695552

10.05.2015

வாழ்த்துரை!

என் அன்புக்குரிய பேராசிரியர் சிவப்பிரகாசம் அவர்கள் பலருக்கும் முன்னோடியாகத் திகழும் இனிய போற்றுதலுக்குரிய பண்புகளைப் பெற்றவர். மிக எளிய குடும்பத்தில் பிறந்து, பல்வேறு இன்னல்கள், போராட்டங்களுக்கு இடையே கல்வி பெற்று, தன்னையும் தான் சார்ந்த பலரையும் உயர்த்திய பெருமைக்கு உரியவர். சமூகத்தின் அவலங்களையும், அநீதிகளையும் கண்டு மனம் வெதும்பி 'மாற்றம் காண வேண்டும்' என்ற உறுதிப்பாடோடு உழைப்பவர். பொறுப்புள்ள தகப்பன், நம்பகத்தன்மை கொண்ட நண்பர். நல்ல மனிதர்.

கிறிஸ்த்துவ பள்ளியில் படிக்காதவராக இருந்தாலும், கிறிஸ்த்துவ சூழலில் வாழாதவராக இருந்தாலும் கிறிஸ்த்துவ சமயத்தின் கருத்துக்களையும், எம்பெருமான் இயேசுவின் புரட்சிகர சிந்தனைகளையும் தாமே படித்து, தெளிந்து கிறிஸ்த்துவம் காட்டும் உண்மைகளை மதிக்கின்ற மனிதராக நண்பர் சிவப்பிரகாசம் அவர்களை நான் பார்க்கின்றேன்.

“உலகெங்கும் சென்று நற்செய்தியை அறிவியுங்கள்” என்று இயேசு பெருமான் இட்ட கட்டளைக்காக தங்கள் வாழ்வை அர்ப்பணித்து அந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக கிறிஸ்த்துவ சமயத் தொண்டர்கள் உலகெங்கும் நற்செய்தியை அறிவித்து வருகின்றனர்.

ஏழைகள் இறைவனின் பிள்ளைகள்
எளியோருக்கு புதுவாழ்வு
பசித்தோருக்கு உணவு
ஒடுக்கப்பட்டோருக்கு உரிமை வாழ்வு
ஏற்றத்தாழ்வுகள் அற்ற சமத்துவ, சமதர்ம சமூகம்
ஆண்டான் என்றும் அடிமைகள் என்றும்
சமூகம் பிரிக்கப்படுவது
இறைவனுக்கு எதிரான பெரும் பாவம்

என்றெல்லாம் பேசுவதை இன்றைக்குக் கேட்பது புரட்சியாகத் தோன்றாது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இந்தக் கருத்துக்களை எடுத்துச் சொல்லி அவற்றை நிலைநாட்டுவதற்காக தனது இன்னுயிரையே சிலுவையில் மாய்த்துக்கொண்ட தலைவர் அவற்றை முதன்முதல் உலகுக்கு அறிவித்தபோது பெரும் சமூகப் பிரளயம் அல்லவா ஏற்பட்டது. இந்த புரட்சிக் கருத்துக்களை உலகில் பரப்ப முயன்று தொடர்ந்து பலரும் பாடுபட்டு வருகின்றனர். அத்தகையவர்கள்தான் மிஷனரிகள். தாங்கள் பணியாற்றச் சென்ற நாடுகளில் எல்லாம் மிஷனரிகள் மக்களிடையே நிலவிய வறுமையையும், அறியாமையையும், ஏற்றத்தாழ்வுகளையும் நீக்க அரும்பாடுபட்டனர். அதற்காக அவர்கள் பல்வேறு போர்க்கருவிகளைத் தேர்ந்து கொண்டனர். அவைதான் கல்வி நிலையங்கள், மருத்துவமனைகள், ஏழையர் இல்லங்கள், இன்னும் பல. மிஷனரிகள் உலகெங்கும் மொழிகளை வளப்படுத்தினர். அறிவிக்கப்படாத உண்மைகளை அறிவித்தனர். பலம் இழந்தவர்களை வலிமையுறச் செய்தனர். எல்லோருக்கும் எல்லாமுமாய் வாழ்ந்தனர். இவை அனைத்தையும் இயேசுவுக் காகவே செய்தனர். இயேசுவின் புரட்சிகரமான அன்பு மக்கள் வாழ்வில் மகிழ்ச்சியைக் கொண்டுவரும் என்பதற்காகவே அனைத்தும் நடந்தன.

இந்திய நாட்டில் மிஷனரிகள் வருகையால் ஏற்பட்ட மாற்றங்கள் எண்ணிலடங்கா. "தென்னிந்திய குலங்களும் குடிகளும்" பற்றி எழுதிய ஆய்வாளர் எட்கார் தர்ஸ்ட்டன் கூறுவதுபோல மிஷனரிகளின் பங்கு, பணி இல்லாத நிலையில் இந்திய நாட்டின் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சாதிகளின் மக்கள் என்னவாகியிருப்பார்கள் என்பதை நினைத்துப் பார்க்க முடியாது.

தமிழ்நாட்டில் தொண்டாற்றிய மிஷனரிகளில் பெரிதும் குறிப்பிடத்தக்க ராபார்ட் கால்டுவெல் அவர்களின் 200வது ஆண்டு விழாவை முன்னிட்டு பேராசிரியர் சிவப்பிரகாசம் எழுதியுள்ள இந்த நூலின் சிறப்புகள் பற்றி பலவற்றைக் குறிப்பிடலாம்.

இயேசுவை இந்தியாவுக்கு அறிமுகம் செய்யவந்த கால்டுவெல் இந்தியாவை, தமிழ்மொழியை, தமிழ் பண்பாட்டை, திராவிட மொழிகளை உலகுக்கு அறிமுகம் செய்து வைத்தார். தன்னையே தந்து தமிழைப் பெற்றார். ராபர்ட் கால்டுவெல் அவர்களைப் பற்றி பேராசிரியர் சிவப்பிரகாசம் எழுதியுள்ள இந்நூல் இந்திய மொழிகளுக்கும், தமிழ் சமூகத்திற்கும் கிறிஸ்த்துவ மிஷனரிகள் ஆற்றிய பணிகளைப் பற்றி பலரும் அறிய உதவுகிறது. பாராட்டி மகிழ்கிறேன்.

M.G. Dawood Miakhan, M.Sc.,
Secretary & Correspondent
The Quaide Milleth College for Men
Chennai – 600 100.

Office:
Flat – B-14, Mahadevan Apartments,
2nd Floor, No.305, T.T.K. Road,
Alwarpet, Chennai – 600 018.
Tel: 2498 6528

30.04.2015

கருத்துரை

தமிழறிஞர் கால்டுவெல்லின் இருநூற்றாண்டு நினைவு விழாவின் நிறைவையொட்டி பேராசிரியர் முனைவர். வெ.சிவப்பிரகாசத்தின் இந்நூல் வெளிவருவது காலத்தின் கட்டாயமாகும். தமிழ்மொழி வரலாற்றில் கால்டுவெல்லின் பணி மிகவும் அழுத்தமானது மட்டுமல்ல, திருப்புமுனை என்பதை ஆசிரியர் நூலின் தலைப்பிலேயே உறுதிப்படுத்தியுள்ளார்.

பல ஆய்வு நூல்களை வெளியிட்டுள்ள நூலின் ஆசிரியர், கால்டுவெல்லின் மொழி ஆராய்ச்சியின் முக்கியத்தை தன் ஆய்வின் மூலம் அழுத்தமாக வெளிப்படுத்தியிருக்கிறார். காலம், காலமாக மொழி உணர்வுதான் முக்கிய இன அடையாளமாக கருதப்பட்டு வந்தது மட்டுமல்லாமல் இன்றும் மக்களிடையே இந்த அடையாளங்கள் இன்னும் ஆழமாக வேறூன்றி வருகின்றன. இத் தருணத்தில் தமிழ்மொழியின் பழமையையும், இலக்கிய வளத்தையும், அறிவியல் சார்பையும் ஆட்சிமொழியாக இருக்கக்கூடிய தகுதிநிலையும், அவசியத்தையும் வரலாற்று ரீதியாகவும் தொகுத்தளித்திருப்பது வரக்கூடிய தலைமுறையினருக்கு பயனளிக்க கூடியதாக இருக்கும். கடந்த நூற்றாண்டில் இந்திய

நாட்டில் மொழிக்காக நடந்த போராட்டத்தையும் இந்நூலில் விரிவாக பதிவு செய்திருப்பது வரவேற்கத்தக்கது. இந்திய ஆட்சி மொழியாவதற்கென்று தகுதிகளை வரையறுத்து தேர்வு செய்தால், தமிழ்மொழி மட்டுமே அனைத்து தகுதிகளையும் பெற்ற முதன்மை மொழியாக திகழும் என்பதில் ஐயமில்லை. தகுதிகளின் அடிப்படையில் நாட்டின் ஆட்சி மொழியை தேர்வு செய்ய வேண்டுமென்றால் தமிழ் மொழியைத் தான் தேர்வு செய்ய வேண்டும் என்ற கருத்தை இந்திய அரசியல் நிர்ணய சபையில் செப்டம்பர் 14ஆம் நாள் 1949ஆம் ஆண்டு கண்ணியத் திற்குரிய காயிதே மில்லத் முஹமது இஸ்மாயில் சாஹிப் அவர்கள் வாதிட்டு பதிவு செய்ததை இந்நூலாசிரியர் விரிவாக விளக்கியிருப்பதும் குறிப்பிடத் தக்கது.

தமிழிலிருந்து உருவான மலையாளம், தெலுங்கு போன்ற மொழிகளுக்கு இணையான செம்மொழி அந்தஸ்தை தமிழுக்கும் மைய அரசு அளித்திருப்பதை மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும். அனைத்து மொழிகளுக்கும் உயர்வான செம்மொழி அந்தஸ்தை தமிழுக்கு அளிக்க வலியுறுத்துவதற்கு இந்த நூலில் பேரா. முனைவர் சிவப்பிரகாசம் அளித்துள்ள கருத்துக்கள் உதவும் என்ற திடமாக நம்புகிறேன்.

அணிந்துரை

பேராசிரியர் முனைவர். **ந.வேலுசாமி**
தலைவர், அறிஞர் பேரவை

ராபர்ட் கால்டுவெல் (18142014) இருநூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி பேராசிரியர். முனைவர்.வெ.சிவப்பிரகாசம் அவர்கள் எழுதிய சிறு நூல்தான் "தமிழ்த்திருமகன் கால்டுவெல் தமிழ்மொழி வரலாற்றில் ஒரு திருப்புமுனை".

நூற் தலைப்பு நீளமானதுபோலவே திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற பேராராய்ச்சி நூலும் ஆழமானதாகும்.

பேராசிரியர் சிவப்பிரகாசம் அவர்கள் ஒரு மொழி ஆசிரியரோ, மொழி ஆய்வாளரோ அல்ல. ஆனால், பிறதுறைகளில் கூர்மையான ஆராய்ச்சியாளர். புகழ் பூத்த பொருளாதார வல்லுநர்; திராவிட இயக்க ஆய்வாளர்; தமிழ்மொழி இலக்கியத்தின்பால் அளப்பரிய பற்றுக் கொண்டவர்.

இவரது ஆய்வுக்களம் கால்டுவெலின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்தான். இதை மையப் புள்ளியாக வைத்து தற்கால அரசியலாரின் மொழிக் கொள்கைகள், பண்டித ஜவஹர்லால் நேருவின் காலத்து மொழிக் கொள்கை குறிப்பாக இந்தி மொழி பேசாத மக்கள் விரும்பும் வரை ஆங்கிலம் நீடிக்கும் என்ற அனைவருக்கும் இணக்கமான தீர்வை வெளியிட்டது, அதற்குத் தூண்டுகோலாக விளங்கிய முன்னாள் மைய அமைச்சர் "தமிழால் முடியும்" என்ற நூல் எழுதியவரும், அண்ணாவின் அன்பிற்குரிய நண்பரும் ஆகிய சி.சுப்பிரமணியம் விளங்கினார் என்பதையும் நூலாசிரியர் தெளிவாகப் பதிவு செய்துள்ளார். எனவே, புள்ளியை யொட்டிய கோலங்களாகத் தீட்டியுள்ளார்.

சிலர் கருதுவதுபோல் ராபர்ட் கால்டுவெல் வெறும் சமயப் பிரச்சாரத்திற்கு மட்டுமே இந்தியாவுக்கு குறிப்பாகத் தென்னிந் தியாவிற்கு வரவில்லை. அந்தப் பணிக்கும் சிறிது இடம் தந்தார். அவ்வளவே ஆனால் அவர் அதிக காலம் ஈடுபட்டது தமிழ்மொழி ஆராய்ச்சியில்தான். ஐரோப்பிய அறிஞர்களான ஜி.யூ.போப், கான்ஸ் டான்டைன் ஜோஸப் பெஸ்கி, சீகன் பால்கு போன்று கால்டுவெலும் தமிழ்ப்பணி ஆற்றித் தமிழர்களின் உள்ளங்களில் நிறைந்தார்.

ஒரு தமிழகத் தமிழாசிரியர் தன் மகனுக்கு கால்டுவெல் என்றே பெயர் வைத்துள்ளார் என்றால் அவர் எந்த அளவுக்குத் தமிழாசிரியர்களின் இதயங்களைக் கவர்ந்திருப்பார் என்று நம்மால் யூகிக்க இயலும்.

மேலே குறிப்பிட்ட ஐரோப்பிய அறிஞர்கள் எல்லாம் மொழி பெயர்ப்பாலும், இலக்கியப் படைப்புகளிலும், அகராதித் தொகுப்பிலும் ஈடுபட்டபோது இவர் மட்டும் மொழியின் வேராக இருக்கும் இலக்கணத்தைப் பற்றி அதுவும் பிற திராவிட மொழிகளின் இலக்கணத்தையும் ஆராய்ந்து திராவிட மொழிகளின் பெருமை அருமைகளை உலகுக்கும் காட்டிய இன்றியமையாப் பணியைச் செய்து தனித்து நிற்கிறார். “தமிழ் இலக்கியம், தெலுங்கு, கன்னட இலக்கியத்திற்கு முற்பட்டது: மலையாள இலக்கியத்திற்கு மிக முற்பட்டது எனும் கால்டுவெல் ஆய்வு” (பக்.12)

“சங்கநூற் பயிற்சியும் தனித்தமிழ் உணர்ச்சியும் இல்லாத அக்காலத்தில் அயல்நாட்டரான அவர் ஆரியத்தினின்று திராவிடத் தைப் பிரித்துக் காட்டிய அத்தன்மையே மிகச் சிறந்ததென்று கொண்டு பெரு மகிழ்ச்சியுடன் அவருக்கு என்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.” (பக்.13)

“லண்டன் டைம்ஸ்” என்ற ஆங்கிலப் பத்திரிகையில் 1891ல் டபிள்யூ.டபிள்யூ.ஹண்டர் என்பவர் கால்டுவெல் பற்றி எழுதிய உயர் கருத்து (பக்.15) போன்றவற்றையெல்லாம் குறிப்பிட்டு, திராவிட மொழிகளின் தந்தை கால்டுவெல் என்று நிறுவுகிறார் நூலாசிரியர்.

தற்காலத்தில் மொழிக்கொள்கை பற்றியும், நேருகாலத்து மொழிக் கொள்கை பற்றிய விவாதங்களையும் சற்றும் குறைத்துக்

கொண்டு முழுக்க முழுக்க கால்டுவெலின் மொழி ஆராய்ச்சிக்கு இன்னும் இடம் கொடுத்திருந்தால் சிறப்புடைய இந்நூல் மேலும் சிறப்படைந்திருக்கும்.

அறிஞர் பேரவை நடத்திய கால்டுவெலின் இருநூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி இந்நூலை பேராசிரியர் சிவப்பிரகாசம் எழுதியுள்ளார். எந்தத் தமிழ்ப் பேராசிரியரும் இந்தக் காலகட்டத்தில் எழுத முன்வராத போது, துணிந்து எழுதி முடித்துள்ளார் என்றால் பேராசிரியர் முனைவர் வெ.சிவப்பிரகாசம் அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

இதுபோன்ற அரிய படைப்புகளை ஏற்கனவே ஆய்வுலகுக்கு அளித்தவர். இனியும் அவர் அளிக்க வேண்டும் என என் அவாவைத் தெரிவித்துப் பாராட்டுகிறேன்.

சென்னை
10.01.2015

ந.வேலுசாமி
எச்.2/15, 3வது தளம்,
தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்,
அயப்பாக்கம், சென்னை - 77.

வரவாய்த் திகழும் வரலாற்றுக் கடமை...

பேராசிரியர். முனைவர். **ஜெ.ஹாஜாகனி,**
தமிழ்த்துறைத் தலைவர்,
காயிதே மில்லத் கல்லூரி,
மேடவாக்கம், சென்னை 600 100,

சமூகநீதி எழுத்தாளரும், திராவிட இயக்க ஆய்வாளருமான பேரா.முனைவர்.வெ.சிவப்பிரகாசம், ஆய்வுக் கடலில் அடியாழம் வரை சென்று அறிவு முத்துக்களை அள்ளிவந்து, தமிழுக்கு அணி செய்பவர். அணிகலன்களைத் தமிழுக்கு அணிவிப்பதோடு நில்லாமல், அன்னைத் தமிழை அண்டவரும் பிணிகளை விரட்டும் பணிகளையும் செய்யும் பேரறிவாளர்.

திராவிட மொழியியலின் தந்தையான ராபர்ட் கால்டுவெல், 1856ஆம் ஆண்டு வெளியிட்ட திராவிட மொழிகளின் ஒப்பீட்டிலக்கணம் ('A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages' -by Caldwell) என்ற ஆய்வு நூல் தமிழ்மொழி வரலாற்றில் ஒரு மாபெரும் திருப்பு முனையாக அமைந்தது. தமிழை சமஸ்கிருதத்தின் சார்பு மொழியாகவும், ஆரியத்தின் அடிமை மொழியாகவும், நிறுவ நினைத்தவர்களின் கர்வத்தை கருகச் செய்து தமிழை உயர், தனிச் செம்மொழியாகவும், தென்னிந்திய மொழிகளின் அன்னை மொழியாகவும், உலகத்தின் முன்னை மொழியாகவும், சான்றாதாரங்களோடு நிறுவியது கால்டுவெலின் நூல்.

எனவே, ராபர்ட் கால்டுவெலின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தை சதி 'நூல்'களை அறுத்த மதிநூல் என மார்தட்டிக் கொண்டாடலாம். தமிழில் காப்பியங்கள் ஏதும் எழுதப்படாத 16 முதல் 19ஆம் நூற்றாண்டு காலத்தில், இஸ்லாமியப் புலவர்கள் ஏராளமான காப்பியங்களை படைத்துத் தமிழுக்கு எழுச்சியூட்டினார்.

பல்சந்த மாலை முதல் பால் வீதி காலம் வரை, முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள் முத்தமிழுக்கு ஆற்றிய தொண்டு முக்கியமானது. இந்தியாவின் ஆட்சி மொழியாகும் தகுதி தமிழுக்கே உண்டு என அரசியல் நிர்ணய அவையில் குரல் கொடுத்தவர் கண்ணியமிகு காயிதே மில்லத் அவர்கள்தான் என்பதும் குறிப்பிடத்தக்கது. அதுபோல, கிறிஸ்துவ அறிஞர்கள் தமிழுக்கு ஆற்றியுள்ள அரும்பணிகளும், அளவில்லாதவை.

தமிழின் உரைநடை வளர்ச்சிக்கு கிறிஸ்துவ அறிஞர்கள் தந்துள்ள கொடை அபரிமிதமானது.

சமணம், பௌத்தம், சைவம், வைணவம், இஸ்லாம், கிறிஸ்தவம் எனப் பல்வேறு சமயத்தினரும் மத நம்பிக்கையே அற்ற பல படைப்பாளிகளும் தமிழை வளப்படுத்தியுள்ளனர்.

சமயச் சான்றோர்களின் பங்களிப்புகளும், சமயங்களை ஏற்காத தந்தை பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தமும், புதுமைப் பார்வையும், அடுத்தடுத்தத் தலைமுறையினரால் அறிந்து போற்றப்பட வேண்டியவையாகும். ஆனால், தமிழை ஒற்றை மதம் என்னும் ஒட்டைச் சிமிழுக்குள் அடைக்க, சிந்தனை வளமற்ற செருக்கர்கள் சிலர் முயல்கின்றனர். இதற்காக முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும் அன்னைத் தமிழுக்கு ஆற்றிய தொண்டுகளை இருட்டடிப்புச் செய்யும் இரண்டகத்தை இவர்கள் செய்ய முயல்கின்றனர். வரலாற்றை அழிப்பதன் மூலம் ஓர் இனத்தையே வீழ்த்தி விடலாம் என்பதைத் துல்லியமாய்ப் புரிந்துள்ள இவர்கள் வரலாற்று மோசடிகளை வகையாகச் செய்து வருகின்றனர்.

சமஸ்கிருதப் பெருமை பேசி, தமிழைத் தாழ்த்த நினைக்கும், சங்பரிவார் சக்திகள் இப்போது அதிகாரக் கட்டிலில் அமர்ந்துள்ள நிலையில், சதிகாரச் செயல்களை ஆட்சியின் துணையோடு அரங்கேற்றி வருகின்றனர். இத்தகைய இக்கட்டான சூழலில் வெளிவரும் இந்நூலின் மூலம் ஒரு மாபெரும் வரலாற்றுக் கடமையை ஆற்றியுள்ளார் பேரா. முனைவர். வெ.சிவப்பிரகாசம் இரு நூற்றாண்டைக் கடந்துள்ள ராபர்ட் கால்டுவெலின் அரும்பணிகள், மறக்கடிக்கப்படாதிருக்க ‘தமிழ்த்திருமகன் கால்டுவெல் தமிழ்மொழி வரலாற்றில் திருப்புமுனை’ என்ற நூலைத் தந்துள்ளார். தனது அறிவார்ந்த நூல்களால் ஆரியத்தை அதன் ஆணிவேர் வரை அதிரவைத்த அபாரத் தமிழர் இவர்.

பார்ப்பனரும், மண்டலும், பட்டினி இந்தியாவில் பாபர் மசூதியும் இராமர் கோவிலும் ஆகிய அறிவுத்துணிவு மிகுந்த நூல்களின் வரிசையில் இந்நூலும் இடம் பெறுகிறது. "ஆரியம்போல் உலக வழக்கழிந்தொழிந்து சிதையா உன் சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துமே! வாழ்த்துதுமே!" என்று தமிழை வாழ்த்தினார், மனோண்மணியம் பெ.சுந்தரனார்.

பெரியாரியம் வளர்ந்த மண்ணில் வெறிஆரியம் வளர முயலும் சூழலில், தமிழினத்தையும், அதன் வரலாற்றையும் தட்டி எழுப்பும் வகையில் இந்நூல் வந்துள்ளது. வரலாற்றுக் கடமையை ஆற்றியுள்ள பேராசிரியர். முனைவர். வெ.சிவப்பிரகாசம் அவர்களுக்கும், வெளியிடும் முத்துப்பேட்டை முகமது முஸ்தபா அவர்களின் கலாம் பதிப்பகத்திற்கும், இந்நூலின் வெளியீட்டிற்கு உறுதுணை புரிந்த கவிஞர் உஸ்மான் அவர்களுக்கும் என் நெஞ் சார்ந்த வாழத்துக்களும், பாராட்டுக்களும்

தொடரட்டும் வரலாற்றின் மீட்சி

துலங்கட்டும் பூந்தமிழின் மாட்சி...

என்னுரை

ராபர்ட் கால்டுவெல் அவர்களின் இருநூற்றாண்டு நிறைவு விழா 11.12.2014 அன்று அறிஞர் பேரவையால் சென்னை ஸ்டெல்லா மேரிஸ் பெண்கள் கல்லூரியில் நடத்தப்பட்டது. அதில் தமிழக ஆளுநர் மேன்மை தங்கிய ரோசய்யா அவர்கள் கலந்து கொண்டார்கள். அதில் நான் கால்டுவெல் அவர்கள் குறித்து சிறப்புரை ஆங்கிலத்தில் நிகழ்த்தினேன்.

நான் பேராசிரியர் என்.வேலுசாமி அணிந்துரையில் குறிப்பிட்டதைப் போல் நான் தமிழ்மொழி ஆய்வாளரோ, தமிழ் இலக்கியத்தில் வல்லுநரோ இல்லை. என்றாலும் என் தாய்மொழி தமிழ்மொழி, என் நாடு தமிழ்நாடு, எனது பண்பாடு தமிழ் என்ற வகையில் தமிழ் மொழியின் மீது கொண்ட தாய்மொழி பாசத்தால் கால்டுவெல் அவர்கள் செய்த அரும்பெரும் சாதனையை நினைவு கூறும் வகையில் அவர் குறித்து சிந்திக்கவும் எழுதவும் பேசவும் தலைப்பட்டேன். அதன் விளைவுதான் இச்சிறு நூலாகும். இந்நூல் பிறப்பதற்கு முதல்முதற் காரணம் அறிஞர் பேரவை என்பதே அடிப்படை உண்மையாகும்.

தமிழ்த் திரைப்படத்தின் சூப்பர் ஸ்டார் என்று அழைக்கப்படும் ரஜினிகாந்த் அவர்களின் எந்திரன் திரைப்படம் திரையிடப்பட்டு மாபெரும் வெற்றி பெற்றது. அத்திரைப்படம் மராத்தியர்களின் மாநிலத்தின் தலைநகரான மும்பையில் திரையிடப்பட்டது. அதில் பாலிவுட்டின் திரைப்பட நட்சத்திரங்கள் அனைவரும் கலந்து கொண்டனர். ரஜினிகாந்த் சிவசேனையின் தலைவர் காலஞ் சென்ற பால்தாக்கரே அவர்களை நேரில் சந்தித்து ஆசி பெற்றார். அப்பொழுது அவரிடம் ரஜினிகாந்த் கூறியது: “நான் முதலில் மராத்தியன்; இரண்டாவது நான் தமிழன்; மூன்றாவது நான்

இந்தியன்'' என்று கூறியதாக அனைத்து செய்தித்தாள்களிலும் வரக்கண்டேன். ரஜினிகாந்த் அவர்கள் மராட்டியத்தில் பிறந்து, கன்னடத்தில் இருந்து, தமிழ்நாட்டில் புகழ்பெற்று வாழ்ந்து வருபவர். இவர் பேசியது நடைமுறை அறிவை சிறப்பாக பிரதிபலிக்கிறது. இதுவே, ஒவ்வொரு இந்தியனின் யதார்த்த நிலையாகும்.

அயர்லாந்து நாட்டைச் சார்ந்த உலகப் புகழ்பெற்ற ஆங்கில நாடக ஆசிரியர் ஜார்ஜ் பெர்னாட்ஷா அவர்கள், தான் ஓய்வு எடுக்க செல்லும் முன்னர் தனது உதவியாளரிடம், ''இங்கிலாந்து நாட்டு மன்னரே என்னை அழைத்தாலும் என்னை தூக்கத்தில் இருந்து எழுப்பி விடாதே, ஆனால் ஒரு அயர்லாந்து நாட்டுக்காரன் என்னைச் சந்திக்க வந்தால் உடனே என்னை எழுப்பிவிடு'' என்று கூறினாராம். இதை ஒரு அறிஞர் சொல்லக் கேட்டிருக்கிறேன். உலகம் முழுவதிலிருந்து வேட்டையாடப் பட்ட யூதர்கள் நாடற்ற நிலைக்குத் தள்ளப்பட்டவர்கள் இன்று இஸ்ரேல் என்ற நாட்டிற்கு சொந்தக்காரர்களாக உள்ளனர். இறந்து மறைந்த அவர்களுடைய தாய்மொழியான எபிரேயம் (Hebrew) புதுப்பிக்கப்பட்டு, நவீனப்படுத்தப்பட்டு அம்மொழி இன்று அந்நாட்டில் வழக்கில் கொண்டு வரப்பட்டுள்ளது. அதைப்போல் இன்று வழக்கிலில்லாத வடமொழி என்ற சமஸ்கிருத மொழியை தேசிய மொழியாக அறிவிக்கவும், மைய அரசால் நிர்வகிக்கப்படும் கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் அம்மொழி கட்டாயமாக்கப்படவும் அரசு தலைப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்திய ஆளும் வர்க்கம் ஒரேநாடு இந்தியா, ஒரேமொழி சமஸ்கிருதம் அல்லது அதைச் சார்ந்த இந்தி மொழி, ஒரே மதம் இந்து மதம் என்று இந்துத்துவ தத்துவத்தை செயல்படுத்த முனைப்பாக செயல்பட்டு வருகிறது. இந்நிலை உண்மைக்கு புறம்பாக உள்ளது. இச்சூழ்நிலையில் கால்டுவெலின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என் கவனத்தை ஈர்த்தது. நான் சென்னைப் பல்கலைக் கழகத்தில் திராவிட இயக்க ஆய்வு மையத்தில் ஆய்வாளராக பணியாற்றிய போது (2009) அன்னாரது ஒப்பிலக்கண நூலை சென்னைப் பல்கலைக் கழகத்தின் வெளியீட்டை படித்தேன். அவர் திராவிட மொழிகளில் 12 மொழிகளைத் தெளிவாக குறிப்பிட்டு இருக்கிறார். அதில் 6 மொழிகளை வளம்பெற்றவையாக குறிப்பிட்டுள்ளார். மேலும்,

இவர் 1856ல் வெளியிட்ட இந்த திராவிட மொழிகளின் ஒப்பீட்டு இலக்கண ஆய்வு நூல் தமிழ் மொழி வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்து விட்டது.

வடநாட்டு மொழிகள் சமஸ்கிருதம், பாரசீகம், அராபிக் போன்ற மொழிகளின் அடிப்படையாக அமைந்திருக்கும்பொழுது இந்திய பழங்குடிகளின் மொழிகள் அதிலும் குறிப்பாக தென்னிந்திய மொழிகள் தமிழோடு தொடர்பு கொண்டும் அதன் அடிப்படையிலும் அமைந்துள்ளன என்ற பேருண்மையை கால்டுவெலின் ஆய்வு முடிவு அறிவித்துள்ளது. அதுமட்டுமல்ல, தென்னிந்திய மொழிகளில் உள்ள சமஸ்கிருத சொற்களை நீக்கிவிட்டால் அந்த மொழி வேறெதுவும் இல்லை. அதுதான் தமிழ்மொழி என்று பறைசாற்றுகிறார். தமிழ்மொழியை வடமொழியின் இலக்கணம் மற்றும் அதன் சொற்கள் இல்லாமல் தனித்து பேசவும், எழுதவும் முடியும் என்பதை அவரது ஆய்வு நிலைநாட்டியுள்ளது. இதுவே கால்டுவெல் ஆய்வின் தனிச் சிறப்பாகும்.

Caldwell on Tamil:

Robert Caldwell wrote in 1856, "the Tamil, the most cultivate ab-intra of all the Dravidian idioms, can dispense with the Sanskrit altogether, if need be and not only stand alone, but flourish without its aid" (A comparative Grammar of the Dravidian and family of South Indian Languages, P.47)

கால்டுவெலின் தன்னலமற்ற தமிழ்த்தொண்டை வேறொரு மனிதரோடு ஒப்பிடுவது மிகக் கடினமாகும். அவரைப்பற்றியும் அவரது பணிகள் பற்றியும் ஏராளமான கட்டுரைகள், நூல்கள், செய்திகள் பலவாறாக பரிமாறப்பட்டு வருகின்றன. என்றாலும் இக்கால கட்டத்தில் தமிழ்மொழியை தமிழகத்தின் ஆட்சி மொழியாக இருக்கும்பொழுது, தொடர்பு மொழியாக இந்தியைத் திணிக்க முற்படும்பொழுது அதை எதிர்க்க வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

தமிழ் படித்தவன் ஆங்கில மொழியைத் தொடர்பு மொழியாகவும், ஆய்வு மொழியாகவும், அறிவியலிலும், தொழில் நுட்பத்திலும் கொண்டால் போதும் என்ற அறிஞர் அண்ணாவின் இருமொழி கொள்கையே சிறந்தது என்பதை வலியுறுத்தவே இந்நூல் வெளியிடப் படுகிறது.

தமிழ்மொழி சமஸ்கிருதத்திற்கு எதிரானது அல்ல. அதுமட்டுமல்ல, இருமொழிகளும் ஒன்றோடொன்று நீண்ட நெடிய காலமாக நட்புறவு கொண்டு விளங்குகிறது. எனவே, தேசியக் கவிஞர் பாரதியார் கூறியதைப்போல், 'பிறர் பங்கை திருடாதே' என்ற அறிவுறுத்தலின்படி தமிழ்மொழிக்குரிய இடத்தைப் பிறர் திருடுவதற்கோ, ஆக்கிரமிப்பதற்கோ ஜனநாயக நாட்டில், சமத்துவ தத்துவத்தை ஏற்றுக்கொண்ட நாட்டில் அனுமதிக்க முடியாது என்பதே இந்நூலின் துணிவாக வெளிவருகிறது.

இந்துமத, குப்த மன்னர்கள் காலத்தில் அரசவை மொழியாக சமஸ்கிருதம் இருந்தது. முகமதியர்கள் முகலாய ஆட்சி காலத்தில் அரசவை மொழியாக பாரசீகம் இருந்தது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் ஆங்கிலம் அரசவை மொழியாக இருந்தது. இன்று மொழிவழி தேசிய இனங்கள் அடிப்படையில் பல்வேறு மாநிலங்கள் 1956ல் பிரிக்கப்பட்டப் பின்னர், இந்தியாவில் தேசிய மொழி இந்தி மொழி அல்லது சமஸ்கிருதம் மொழி என்பதை யாராலும் ஏற்றுக்கொள்ள இயலாது.

எனவேதான் ராபர்ட் கால்டுவெல் (1814-2014) அவர்களின் இருநூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி நான் இந்த சிறுநூலை அறிஞர் பேரவையின் சார்பாக வெளியிடுவதன் மூலம் அன்னாரது திராவிட மொழிகளின் ஒப்பீட்டு நூலின் ஆய்வு முடிவுகள் இந்திய மைய அரசின் மொழிக் கொள்கையை ஏற்காத வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

ராபர்ட் கால்டுவெல் அவர்கள், 'தமிழ்மொழி தனித்து சமஸ்கிருத மொழியின் உதவி இல்லாமல் இயங்க முடியும்' என்பதை ஆணித்தரமாக பறைசாற்றுகிறார். மேலும், இந்தியாவின் உச்சநீதி மன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி மார்கண்டேய கட்ச் கூறிய தற்கு அதாவது, 'இந்திய மொழிகளின் தாய்மொழி சமஸ்கிருத மொழி என்ற கூற்றிற்கு, ராபர்ட் கால்டுவெலின் இந்த கருத்து தக்க பதிலாக அமைந்துள்ளது. சமஸ்கிருதத்திற்கும், தமிழுக்கும் தொடர்பு இல்லை என்பதே அவரது ஆய்வு முடிவு. இதுவே இந்நூலின் கருவாகும்.

இந்நூல் அறிஞர் பேரவையின் சார்பாக வெளியிடுவதற்கு அனுமதி அளித்த அதன் தலைவர் பேராசிரியர். முனைவர். ந.வேலுசாமி அவர்களுக்கும், செயலர் பேரா.மைக்கேல் பாரடே அவர்களுக்கும், செயற்குழு உறுப்பினர்களுக்கும்,

இதன் சுருக்கத்தை மக்கள் உரிமை இதழில் வெளியிட்டு பாராட்டிய பேராசிரியர்.முனைவர். ஹாஜாகனி அவர்களுக்கும், இந்நூலின் படியைத் திருத்திக் கொடுத்த பேராசிரியர். சா. இன்குலாப் அவர்களுக்கும், கவிக்கோ மன்றத்தின் பொறுப்பாளர் கவிஞர் உஸ்மான் அவர்களுக்கும், முனைவர் குபேந்திரன் அவர்களுக்கும், பல்வகையில் ஆலோசனை வழங்கிய பொறியாளர் இராதாகிருஷ்ணன் அவர்களுக்கும், எனது மனைவி பேரா.எம்.வி. விஜயலட்சுமி, எனது மகன் சுப்ரமணியன் அவர்களுக்கும், திரு. எஸ்.கே.இராதாகிருஷ்ணன், பேரா.எம்.சேதுராமன், பொறியாளர் கரு.மோகன் அவர்களுக்கும், மேடவாக்கம் காயிதே மில்லத் கல்லூரி அறக்கட்டளையின் அறங்காவலரும், செயலரும் ஆன கண்ணியமிக்க காயிதேமில்லத் அவர்களின் பேரன் திருமிகு. தாவூத் மியான்கான் அவர்கள் நல்கிய மதிப்புரைக்கும், அறிவார்ந்த ஆலோசனைகளுக்கும், ஒத்துழைப்பிற்கும், எனது இனிய நண்பரும், எனது குடும்ப நல்வாழ்வில் ஈடுபாடு கொண்டுவரும், மாநிலகளவை உறுப்பினருமான திருமிகு ரவிபெர்னால்டு அவர்களின் மனம் உவந்து அளித்த வாழ்த்துரைக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினை இந்நூல் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். இதை வெளியிடும் ரகமத் மதிப்பக உரிமையாளரும், உலகலாவிய அளவில் தமிழுக்கு தொண்டு புரிந்து வரும் திருமிகு முகமது முஸ்தபா அவர்களுக்கும், காலஞ்சென்ற மராத்தா மாநிலத்தின் ஆளுநரான மாண்புமிகு சி. சுப்ரமணியம் எழுதிய 'என் வாழ்வின் நினைவுகள்-திருப்புமுனை' (தமிழ் மொழி பெயர்ப்பு திரு. கருப்பையா-NCBH) நூலுக்கும், சிறப்புற வடிவமைத்து தட்டச்சு செய்த என்.கோவிந்தராஜன் அவர்களுக்கும், தமிழ்அலை பதிப்பகம் உரிமையாளர் திரு. இசாக் அவர்களுக்கும், நூல் வடிவமைத்து கொடுத்த திரு. அசன், திருமதி ஸ்ரீமதி அவர்களுக்கும் எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

'சமூக நீதி எழுத்தாளர்'

பேராசிரியர்.முனைவர். **வெ. சிவப்பிரகாசம்**

ஒன்றே குலம் ஒருவனே தேவன்
யாதும் ஊரே யாவரும் கேளிர்

தமிழ்த் திருமகன் கால்டுவெல் அவர்களின் தமிழ்ப் பணி பற்றி பேராசிரியர் வெ.சிவப்பிரகாசம் அவர்கள் எழுதிய "தமிழ்த் திருமகன் கால்டுவெல் தமிழ்மொழி வரலாற்றில் ஒரு திருப்புமுனை" எனும் நூலை எமது கலாம் பதிப்பகம் சார்பில் வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

தமிழ் மொழியின் தனிச்சிறப்பே எல்லா சமயங்களையும் உள்வாங்கியதுதான். இந்து, முஸ்லிம், கிறித்தவ சமயக் கொள்கைகளைப் பரப்புவதற்கு தமிழ்மொழியே தடமாகக் கொண்டு நூல் இயற்றினார்கள். தமிழ் அவர்களின் சமயத்தை உள்வாங்கி அவர்கள் தமிழைப் பற்றி ஆய்வு செய்யவும் இலக்கியங்கள் படைக்கவும் திருப்பிவிட்டதுதான் தமிழின் சிறப்பு.

உலகின் பல பகுதிகள், - குறிப்பாக சிங்கப்பூர், மலேசியா, பர்மா, இலங்கை, இங்கு குடியேறிய தமிழ்நாட்டைச் சேர்ந்த முஸ்லிம்கள் தங்களை "தமிழ் முஸ்லிம்கள்" என்றே அடையாளப்படுத்தி வாழ்கின்றார்கள்.

இப்படிப்பட்ட சிறப்புகளைக் கொண்ட தமிழின் உயர்வான அடையாளத்தை வெளிகொணர்ந்த திரு. கால்டுவெல் அவர்களைப் பற்றி ஆய்வு நூலை தமிழில் கொண்டு வந்த பேராசிரியர் சிவப்பிரகாசம் அவர்களுக்கு என் வாழ்த்துக்கள்.

என்றும் தமிழுடன்

எம்.ஏ.முஸ்தபா

(நிறுவனர்: சென்னை ரஹ்மத் அறக்கட்டளை)

பொருளடக்கம்

சுருக்கம்

முன்னுரை

		பக்கம்
1.	கால்டுவெல் ஐயர் கண்ட தமிழ்மொழியின் சிறப்பு	29
2.	மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் பார்வையில் கால்டுவெல்	31
3.	தமிழின் இலக்கியப் பண்படுத்தத்தின் மிகுதொன்மை	33
4.	கால்டுவெல் கண்ட மொழிநூல் முடிபுகள்	35
5.	அயோத்தியதாசரின் ஆய்விற்குறிய கருத்து: முத்தமிழ் திராவிடம்	37
6.	கால்டுவெலின் சமுதாயப்பணி	39
7.	மொழி ஆய்வு நெறியாளர்	40
8.	கால்டுவெலின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண ஆய்வின் மூலம் கண்ட பொதுத்தன்மையும், பன்னாட்டு மொழிகளும்:	41
9.	ஐரோப்பியர் காலம் (கி.பி.16001947)	43
10.	உரைநடையின் தந்தை	44
11.	ஆரியத்தமிழ் ஆய்வாளர்களும், திராவித் தமிழ் ஆய்வாளர்களும்	45
12.	இந்தி மொழியும், பிற மொழிகளும்	59
13.	இராபர்ட் கால்டுவெலின் ஒப்பிலக்கணத்தால் விளைந்த திராவிட மொழி.அரசியல் தாக்கம்	62
14.	தீரா மொழிப் பிரச்சனையின் பல்வேறு பரிமாணங்களும், திரு.சி.சுப்பிரமணியம் அவர்களின் பங்களிப்பும்.	63
15.	காங்கிரசின் கொள்கை	63

16. மூன்று கருத்துக்கள் 64
17. இந்திய யூனியனின் ஆட்சி மொழி 65
18. போதனா மொழி 67
19. அவர் கண்ட நேரடி அனுபவம் 68
20. தென்மாநில முதல்வர்கள் தீர்மானம் 69
21. ஆட்சி மொழி 71
22. முதலாவது கமிஷன் 72
23. குவாஹத்தி கூட்டம் 73
24. போதனா மொழி 74
25. முதலாவது வாக்குறுதி 76
26. மும்மொழித் திட்டம் 78
27. திரு. சி. சுப்பிரமணியன் அவர்களின் அறிவார்ந்த வினா? 78
28. எழுத்து வடிவம் 79
29. காயிதே மில்லத்தும் தமிழும் 80
30. அறிஞர் அண்ணாவின் இருமொழிக் கொள்கை 86
முடிவுரை

சுருக்கம்

தமிழ், தமிழன், தமிழ்நாடு, தமிழ்ப் பண்பாடு போன்றவற்றின் எதிர்காலம் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளன என்பதை இன்றைய நடுவண் அரசின் மொழிக் கொள்கையால் அறிந்து கொள்ளலாம். சமீபத்தில், மேனாள் உச்சநீதி மன்றத்தின் நீதியரசர் மார்க்கண்டேய கட்ச் அவர்கள், இந்திய மொழிகளின் தந்தை சமஸ்கிருதம் என்று கூறினார். அதையொட்டி மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஸ்மிருதி இராணி என்ற அம்மையார், நடுவண் அரசின் கல்வி நிலையங்களான கேந்திரிய வித்யாலயாக்களில் அதாவது மும்மொழிக் கொள்கையின்படி மூன்றாவது மொழியாக ஜெர்மன் மொழிக்குப் பதிலாக சமஸ்கிருத மொழியை கட்டாயமாகக் கற்க வேண்டும் என்று அறிவித்தார். பின்னர் எதிர்ப்பின் காரணமாக ஏதேனும் ஒரு இந்திய மொழிகளில் ஒன்றை அதாவது இந்திய அரசியல் சட்டத்தின் 8வது அட்டவணையில் உள்ள 23 மொழிகளில் ஏதேனும் ஒன்றை கற்கலாம் என்று அறிவித்தார்.

இதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. கல்வி ஆண்டின் இடையில் ஜெர்மன் மொழிக்கு பதிலாக சமஸ்கிருதம் கட்டாயம் படிக்க வேண்டும் என்ற மனிதவள மேம் பாட்டுத்துறை ஆணையால் கிட்டத்தட்ட 500 கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் பயிலும் 70,000 மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்றும் இந்த ஆணை 6ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு இப்படி ஒரு ஆணை திடீர் என்று பிறப்பிப்பதால் மாணவர்களின் துயர் அதிகரிக்கும் என்று உச்சநீதிமன்றத்தில் பெற்றோர்கள் வழக்கு தொடர்ந்தனர். இதை விசாரித்த நீதிபதிகள் கல்வியாண்டின் இடையில் இப்படி ஒரு ஆணை செல்லத்தக்கது அல்ல என்று அறிவித்துவிட்டது. இப்படி அவசரமாக ஒரு ஆணையை பிறப்பிப்பதன் மூலம் மொழிவெறியை இந்திமொழிக்காரர்கள் காட்டுவதையே விளக்கும் நிகழ்வாக அமைகிறது.

அடுத்து இந்தியாவின் அலுவல் மொழியாக இந்தி மொழியை முழுமையாக பயன்படுத்த வேண்டும் என்று உள்துறை அமைச்சர் இராஜ்நாத்சிங் கூறியுள்ளார். இதற்கெல்லாம் அடிப்படையாக இருக்கக்கூடிய இந்துத்துவா தத்துவம் என்னவென்றால், இந்தியா என்பது "ஒரே தேசம்" அதில் ஒரே மொழி தேசிய மொழியாக இருக்க வேண்டும். அதாவது, வடமொழியான சமஸ்கிருதத்தின் அடிப்படையில் அமைந்த இந்தி மொழியே தேசிய மொழியாக செயல்படுத்தப்பட வேண்டும் என்பதே இன்றைய நடுவண் அரசின் ஆளும் வர்க்கத்தின் அடிப்படைக் கொள்கையாகும்.

இந்தப் பின்னணியில், இந்தி மொழி இல்லாத பிறமொழிகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிட்டது. வடமொழியான சமஸ்கிருதத்திற்கு பழமையான இந்திய மொழி தமிழ்மொழியாகும். அதாவது, ஆரியர்கள் இந்தியாவிற்கு வருவதற்கு முன்பு பேசப்பட்ட மொழி தமிழாகும். ஆனால், இதன் பரிமாணம் சுருங்கி இந்தியாவின் விந்திய மலைக்கு தெற்கே அதாவது திராவிட நாடு என்று கூறப்படும் தென்னாட்டின் திராவிட மொழிகளின் தாயாக தமிழ்மொழி நிலவி வருகிறது. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு போன்ற மொழிகள் அனைத்தும் திராவிடக் குடும்பத்தைச் சார்ந்தது என்று கால்டுவெல் அவர்கள் தனது ஆய்வின் முடிவாக வரலாற்று இலக்கண சான்றுகளுடன் எடுத்துரைக்கிறார். அதாவது, தமிழ்மொழி தொன்மையானது மட்டுமல்ல, அம்மொழியால் பிறமொழிகளின் கலப்பில்லாமல் குறிப்பாக வடமொழி துணையில்லாமல் பேசவும், எழுதவும் முடியும் என்பதை ஐயமின்றி நிருபித்துள்ளார்.

எனவே, தமிழ்மொழியை அழித்தால், தமிழ் இனத்தை அழித்து விடலாம், ஒரே தேசம் ஒரே மொழி என்ற கொள்கையை செயல் படுத்திவிடலாம் என்ற செயல்பாட்டில் உள்ள தமிழ்மொழி எதிரி களுக்கு சவாலாக திராவிட மொழிகளின் நூலின் தந்தையான கால்டுவெல் ஐயரின் திராவிட மொழிகளின் ஒப்பீட்டு இலக்கணம் என்ற ஆய்வு நூல் உள்ளது. இது மொழிப்போர் போராளிகளுக்கு மிகச் சிறந்த ஆயுதமாகும்.

காணிக்கை

திராவிட இயக்க வரலாற்று ஆய்வு பேரறிஞர்
எனது அருமை நண்பர்
பேராசிரியர். முனைவர். எம்.எஸ்.எஸ்.பாண்டியன்
அவர்களுக்கு இந்நூல் அர்ப்பணம்.

கால்டுவெலின் இரு நூற்றாண்டு நிறைவு விழா
11.12.2014, ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி, சென்னை.



கால்டுவெலின் இரு நூற்றாண்டு நிறைவு விழா
11.12.2014, ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி, சென்னை.



முன்னுரை

உலகப் பல்கலைக் கழகங்களில் மிகச்சிறப்பு பெற்ற ஹார்வேர்டு பல்கலைக் கழகத்தில் பணியாற்றி தற்சமயம் MIT-USA, உள்ள நோம்சாம்ஸ்கி (Noam Chomsky) அவர்கள் உலகில் தோன்றிய முதன்மொழி தமிழ் என்று கூறுகிறார். கிரேக்கம், இலத்தீன், சமஸ்கிருதம் போன்ற பழமையான மொழிகள் வழக்கிழந்து உள்ள நிலையில், சீனம், தமிழ் போன்ற மொழிகள் இன்றளவும் பேசப்பட்டு, எழுதப்பட்டு நடைமுறையில் உள்ளன. ஆனால், முடிவு எடுக்கக் கூடிய இடத்தில் அதாவது, அதிகார கட்டமைப்பில் தமிழர்கள் இல்லாததால், நடுவண் அரசின் ஆளும் வர்க்கம் வடமொழியை சார்ந்தவர்களாக இருப்பதால் சமஸ்கிருதம் நடைமுறையில் வாழவில்லை என்றாலும், அதை செயல்படுத்த திட்டமிடுவதற்குக் காரணமாகும்.

இந்நிலையில், கால்டுவெல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூல் தமிழின் ஆளுமையை நிலை நிறுத்துவதற்கு பேருதவியாக இருக்கும் என்பதை தமிழ்மொழி ஆர்வலர்களும் ஆய்வாளர்களும் நன்குணர்ந்து செயல்பட வேண்டியது இக்காலத்தின் கட்டாயமாகும்.

இந்தியா பல்வேறு மொழிகளின் அடிப்படையில் அமைந்த பல மொழிவழி தேசிய இனங்களை கொண்ட நாடு ஆகும். எனவே, இந்திய அரசியல் சாசனத்தின் 8வது அட்டவணையில் உள்ள 23 மொழிகளையும் இந்தியாவின் ஆட்சி, அலுவல் மொழியாக அறிவிக்க வெளிநாட்டிலிருந்து வந்து தமிழ்மொழியையும், பிற இந்திய மொழிகளையும் பற்றி அனைத்து மொழிகளையும் வளர்த்த மொழி அறிஞர்களை போற்றி நன்றி கூறுவது நமது கடமையாகும்.

மேலும், அவர்களை ஒட்டி ஆய்வுப் பணியில் ஈடுபட்டு பல்வேறு புதைந்து கிடைக்கின்ற உண்மைகளை வெளி உலகிற்கு கொண்டுவர வேண்டியது இன்றைய மொழிப் போராளிகளின் தலையாய பணியாக உள்ளது. எனவே, இத்திசையில் தமிழ்மொழி ஆய்வாளர்கள் பயணிக்க வேண்டிய அவசியத்தை இக்கட்டுரை வலியுறுத்துகிறது.

வடமொழியான சமஸ்கிருத மொழியை கட்டாயமாக கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் மாணவர்கள் கற்க வேண்டும் என்று மைய மனிதவள மேம்பாட்டு அமைச்சர் ஸ்மிருதி இராணி அம்மையார் கூறுவது; மனுஸ்மிருதி சாத்திரத்திற்கு எதிரானதாகும். அதாவது, இந்துத்துவ கொள்கைக்கு முரண்பட்டதாகும். அதாவது, "மனுதர்ம சாஸ்திரம்" என்ற நூலை எழுதிய ஆசிரியர் திருலோக சீதாராம் குறிப்பிடுவதாவது:

"ஜெனனம் முதல் மரண பரியந்தம் வேத மந்திரங் களால் எவனுடைய வாழ்க்கை முழுமையும் நடத்தி வைக்கப்படுமோ, அந்த பிராமணன் அல்லாத ஏனையோர் இந்த மனுதர்ம சாஸ்திரம் நீதி நூலை ஓதும் அதிகாரம் பெறவில்லை." ப.3)

அயல்நாட்டினாரின் பங்களிப்பு

அயல்நாட்டிலிருந்து வந்து தமிழ் கற்றுத் தமிழ் வளர்த்த சான்றோர்களில் முதன்மையானவர் என்று கால்டுவெல் ஐயர் அவர்களை குறிப்பிடலாம். இவர் கிருத்துவ மதத்தை தமிழர் களிடையே பரப்ப வந்தார், என்றாலும் இவரது பணி தமிழ் மொழிக்கும், தமிழர் கல்விக்கும் மிகச்சிறந்ததாக அமைந்தது. கீழ்த்தட்டு பழங்குடி மக்களிடையே கல்வியையும், உயர் நாகரிகத் தையும் போதித்தார். உயர்சாதியினரோடு கீழ்சாதி மக்கள் சமமாக பழகவும், உயரவும், அலுவல்களில் பங்கேற் கவும் இவரது கல்விப் பணி உதவியது.

இவரைப்போன்றே பல வெளிநாட்டு அறிஞர்கள் தமிழ் மொழியை வளர்த்தனர். கால்டுவெல் அவர்களுக்கு தமிழ்மொழியை கற்பித்த துருவர் என்பவர் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். வின்ஸ்லோ என்ற அறிஞர் தமிழ் அகராதியை உருவாக்கினார். மேலும், தலைசிறந்த நீதி நூல்களையும், திருவாசகம் என்னும் பெருவாசகத்தையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து அழியாபெருமை பெற்ற ஜி.யு.போப் அவர்களையும் குறிப்பிடலாம். பவர் என்னும் பெரியார் பைபிளையும், பிரார்த்தனை நூலையும் தமிழில் மொழிபெயர்த்தார். ஆங்கிலக் கல்வியை ஆண்டர்சன் என்பவர் கல்லூரி நிறுவி தமிழர்களிடையே பரப்பினார்.

வீரமாமுனிவர் என்ற கான்ஸ்டான்டின் ஜோசப் பெஸ்கி, இராபர்ட் நொபிலி போன்ற பல்வேறு அறிஞர்கள் தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டுள்ளனர். இவர்களுக்கு முன்னோடியாக திரு எல்லீஸ் என்பவர் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். இவர்களால் மதம் மட்டும் பரப்பப்படவில்லை. தமிழ் மொழியும், மேனாட்டு நாகரிகமும், சமுக சமத்துவமும், பகுத்தறிவும், ஆங்கில மருத்துவ முறையும் பொதுக் கல்வியும் தமிழர்களிடையே அறிமுகப்படுத்தப்பட்டன.

வெளிநாட்டு தமிழ் அறிஞர்களின் தமிழ்ப்பணி இன்றளவும் தொடர்ந்து விரிவடைந்து வருகின்றன. இவர்களது ஆய்வுகளின் துணைக்கொண்டு தமிழ்மொழியை நடுவண் அரசின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக செயல்படுத்த வேண்டிய பணி ஒவ்வொரு தமிழனின் கடமையாகும்.

கால்டுவெல் கண்ட தமிழ்மொழியின் சிறப்பு

தமிழர்கள் பகுத்தறிவுவாதிகள் என்பதற்கு சான்றாக இருப்பது தொல்காப்பியம் என்ற தமிழ் இலக்கணமாகும். இந்நூல் எழுத்து, சொல் போன்றவற்றிற்கு மட்டுமல்லாமல்

வாழ்க்கைக்கும் இலக்கணம் வகுத்துள்ளது. இது இந்நூலின் மிகச்சிறப்பாகும். அதாவது, அகம் என்று காதல் வாழ்க்கையும், புறம் என்று வெளிப்புற வீரவாழ்வியலையும் தொகுத்துள்ளது. தமிழன் வாழ்வில் அகத்தில் அன்பையும், புறத்தில் வீரத்தையும் உள்ளடக்கிய வாழ்வே தமிழன் வாழ்வாகும்.

"வாழ்ந்தவர் கோடி; மறைந்தவர் கோடி;
மக்களின் மனதில் நிற்பவர் யார்;

மாபெரும் வீரர் மானம் காத்தோர் சரித்திரம்
தனிலே நிற்கின்றார்"

என்று கூறுகிறது, இப்பாடல் தொல்காப்பிய வாழ்வியல் இலக்கணத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது.

மேலும், டாக்டர். ரா.பி.சேதுப்பிள்ளை அவர்கள் தனது "கால்டுவெல் ஐயர் சரிதம்" என்ற நூலில்,

"திராவிட மொழிகளுக்கே சிறப்பாக உரிய பல கூறுகளைக் கால்டுவெல் அறிஞர் ஒப்பிலக் கணத்தில் விளக்கிக் காட்டியுள்ளார். பெயர்களை உயர்திணையென்றும் அஃறிணையென்றும், திராவிட இலக்கண நூலோர் வகுத்த முறை உலகில் வேறெதும் மொழி நூலிலும் காணப்படாத செவ்விய முறையென்று வியந்து புகழ்ந்துள்ளார். மாநிலத்தில் வாழும் உயிர்களையும் மற்றைய பொருள்களையும் பகுத்துரைக்கும் முறைகள் பலவாயினும் அறிவுடைமையே ஆன்ற நலமெனத் தேர்ந்து பகுத்தறிவு வாய்ந்த உயிர்களே உயர்திணையென்றும், அவ்வறிவு வாய்க்கப்பெறாத மாவும் மாக்களும் மற்றுமுள்ள பொருள்களும் அஃறிணையென்றும் திராவிட நூலோர் கருதிய முறை அவர் அறிவின் செம்மைக்குச் சிறந்த சான்றாகும் என்று காட்டியுள்ளார்."

எனவே, ஆரிய மொழியிலும், திராவிட மொழியிலும் பயின்றுவரும் பொதுச்சொற்கள் அனைத்தும் ஆரிய

சொற்களே என்று கூறுவது உண்மைக்கு புறம்பானது என்று கால்டுவெல் கருதுகிறார்.

இதேபோன்று, பிள்ளை அவர்கள் கால்டுவெல் அவர்களின் மொழி ஒப்பாய்வை,

"தென்னிந்திய மொழிகளின் ஒப்பிலக்கணம் என்றும் உயரிய நூலின்கண் அமைந்துள்ள அடிப்படையான கொள்கைகள் அறியத்தக்கனவாம். ஆரிய குடும்பத்தில் தொன்மையும் செம்மையும் வாய்ந்து விளங்கும் வடமொழியைப் போலவே, திராவிட குடும்பத்தில் தொன்மையும் செம்மையும் வாய்ந்து விளங்கும் மொழி தமிழ்மொழியென்பது ஒப்பிலக் கணக் கொள்கைகளுள் ஒன்றாகும். இன்னும் ஆசிய நாடுகளில் வழங்கும் சித்திய குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளுக்கும், தென்னிந்தியாவில் வழங்கும் திராவிட குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளுக்கும் நெருங்கிய ஒற்றுமை காணப்படுதலால், அவ்விரு வகை மொழிகளும் ஓரினத்தைச் சேர்ந்தனவாம் என்பது மற்றொரு கொள்கையாகும். திராவிட மொழிகள் சித்திய இனத்தைச் சேர்ந்தன என்று கொள்கையை நிலையிடுதற்குரிய சான்றுகள் அவ்விலக்கண நூலில் எம்மருங்கும் காணப்படும்." என்று சிறப்பித்துக் கூறுகிறார்.

மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் பார்வையில் கால்டுவெல்:

பாவாணர் தனது 'திராவிடத்தாய்' என்னும் நூலில் (1991) கால்டுவெல் அவர்களின் தமிழ்மொழி ஆய்வை சிறப்பித்துக் குறிப்பிடுவதாவது:

"திராவிட மொழியும் கிளைமொழியுமான ஒவ்வொன்றின் இலக்கண அமைப்பையும் அதனதன் தகுதிக்கும் ஆசிரியர்க்கு அதிலுள்ள பயிற்சிக்கும் தக்கவாறு மிகவோ குறையவோ ஆராய்ந்து விளக்கும்போதே, தாம்

முப்பத்தேழாண்டுகட்கு மேலாகப் பயின்றுவந்ததும் தம் மதத்தொண்டிற்குப் பயன்படுத்தியதும் திராவிட மொழிகளுட் பெரும்பாலும் முதன்முதற் பண்படுத்தப் பெற்றதும் தலைசிறந்த முறையில் வளர்க்கப் பெற்றதும் பலவகையிலும் திராவிடக் குடும்பத்திற்குப் பதின்மை தாங்குவதுமான, தமிழமைப்பை அடிக்கடி எடுத்துக்காட்டுவது ஆசிரியரின் சிறப்பு நோக்கமாகும்." *(திராவிட ஒப்பியல் இலக்கணம் முன்னுரை, பக்.1)*

இக்குடும்பம் (திராவிடம்) ஒரு காலத்தில் ஐரோப்பிய ஆசிரியரால் தமிழியன் ('Tamulian' or 'Tamulic') என அழைக்கப்பட்டது. ஆனால், தமிழ் பெரும்பாலும் இக்குடும்பத்தில் மிகத் தொன்மையானதும் மிக உயர்வாகப் பண்டுத்தப் பெற்றதும் இக்குடும்பத்திற்குரிய வடிவங்களிலும் வேர்களினும் பெரும்பாலானவற்றைப் பெற்றிருப்பதுமான மொழியாயிருந்தாலும்......" *(ஷெ. பக்.4)*

"தமிழ் இம்மொழி திராவிட மொழிகளுள் பெரும்பாலும் முதன் முதல் பண்படுத்தப் பெற்றதும் மிகுந்த வளமுள்ளதும் ஐயமறப் பழைமையான வடிவங்களுள் பெரும் பகுதியையும் மிகப்பல வகை களையும் கொண்டுள்ளதுமானதாதலின், தன் தகுதிக் கேற்றபடி, பட்டியலில் முதலில் குறிக்கப்பெற்றுள்ளது." *(ஷெ. பக்.9)*

"எவ்வகையிலும் திராவிட மொழிகளுக்குள் தலைசிறப்புப் பண்படுத்தப் பெற்ற தமிழ் வேண்டுமாயின், வடமொழித் தொடர்பை அறவே விலக்குவதுடன், தனித்து வழங்குதல் மட்டுமன்று; அதன் உதவியின்றித் தழைத்தோங்கவும் இயலும்."

"ஏறத்தாழ எல்லா நூல்களும் எழுதப்பட்டுள்ள செந்தமிழ் என்னும் பழைய அல்லது இலக்கியத் தமிழ் மிகமிகக் குறைந்த வடசொற்களையுடையது; வடசொற்களையும் வடமொழி எழுத்துக்களையும் புறக்கணித்துத் தூய பழந்திராவிடவொலிகளையும்,

வடிவங்களையும் வேர்களையுமே கொண்டிருப்பதற்குக் காரணமான ஊக்கத்தோடும், பொறாமையோடும் கூடிய அக்கறை காட்டுவதில் உலக வழக்கு அல்லது உரைநடையினின்று வேறுபடுவது. ஒரு தமிழ்ச் செய்யுள், பிற திராவிட மொழிகளிற்போலாது, தான் கொண்டுள்ள வடசொற்களின் மிகுதிக்குத் தக்கவாறன்றி அவற்றின் குறைவுக்குத் தக்கவாறே சுவையும் இலக்கியத் தன்மையும் நிரம்பியதென்று கருதப்படும் அவ்வளவு, இன்வடசொற் பொறாமை படித்த தமிழர் மனத்தில் முற்றிலும் பதிந்துள்ளது; மிக ஒதுங்கியுள்ள நாட்டுப்புறங்களில் வாழும் தனி தாழ்ந்தோர் மொழி வடசொற்களை விலக்குத் திறத்தில் பேரளவு இலக்கிய மொழிகளை ஒத்திருக்கின்றது.'' *(ஷெ. பக்.49)*

''தமிழ் தன்னிடத்துக் கொண்டுள்ள வடசொற்களில் பெரும்பாலானவற்றை அல்லது அவையெல்லாவற்றையும் உடனே நீக்க முடியும். அங்ஙனம் நீக்குவதனால் அது நடை உயர்ந்து மிகத் தூய்மையும் நேர்த்தியுமடைகிறது.'' *(ஷெ. பக்.50)*

''தமிழின் இலக்கியப் பண்படுத்தத்தின் மிகுதொன்மை'' பின்வருமாறு அறியப்படுகிறது

i. ''பிற திராவிட மொழிகளின் இலக்கிய நடை அவற்றின் உலக நடையினின்று வேறுபட்டிருப்பதைவிடத் தமிழின் இலக்கிய நடை அதன் உலக நடையினின்று வேறுபட்டுள்ளது.''

ii. ''தமிழின் அளவிறந்த சொல்வளமும் செந்தமிழிலக்கண வடிவுகளின் தொகைவகைகளும் மற்றொரு சான்றாகும். செந்தமிழிலக்கணம் வழக்கிறந்த வடிவங்களும் விலக்கப்பட்ட விகுதிகளும் வியப்பான வழுவமைதிகளும் செறிந்துள்ள பொருட்களம்... தமிழின் அறவிறந்த சொல்வளத்தை

யாழ்ப்பாணத்து விடையூழியர் (Missionaries) வெளியிட்டுள்ள ஒரு பள்ளித் தமிழகராதி 58,500 சொற்களைக் கொண்டுள்ளமையே காட்டிவிடும். இன்னும் அவற்றோடு, அவ்வகராதியை நிறைவாக்க, பல்லாயிரங் குறியீடுகளையும் திசைச் சொற்களையும் ஆயிரக்கணக்கான புணர்ச் சொற்களையும் சேர்க்க வேண்டியதிருக்கும்."

பிற திராவிட மொழிகளின் அகராதிகளை ஆயும்போது, அவை தமிழகராதிகளிலுள்ள ஒரு பொருட் பலசொற்பட்டிகளைக் காட்டாமை ஒரு படிப்பாளியின் மனத்தில் மிகத் தெளிவாய்ப் படும். தமிழில் மட்டும் வழங்குகிற அளவில் தமிழுக்குரியவை யென்று கருதப்படும் சொற்களை மட்டுமல்ல, தெலுங்கு, கன்னடம் முதலிய மொழிகட்குரிய சொற்களையும் தமிழ் கொண்டுள்ளது. இங்ஙனம், இயல்பான தமிழில் உறைவிடத்திற் குரிய சொல் வீடு என்பது. ஆனால், தெலுங்கிற்குரிய இல், (தெ, இல்லு) என்னுஞ் சொல்லும், கன்னடத்திற்குரிய மனை (க, மன) என்னுஞ் சொல்லுங்கூடத் தமிழிலிருப்பதுடன் சமையாசமையங்களில் வழங்கவும் செய்கின்றன. குடி என்னும் இன்னொரு சொல் தமிழுக்கும் வடமொழிக்கும் பின்னிய (Finish) மொழிகள் எல்லாவற்றிற்கும் பொதுவாக வழங்குகின்றது. தமிழ் இலக்கணமும் சொற்றொகுதியும் இங்ஙனம் பேரளவில் திராவிட வடிவங்களுக்கும் வேர்களுக்கும் பொதுக் களஞ்சியமாகும்.

iii. "தற்காலக் கன்னடமும் தற்காலத் தெலுங்கும் தமிழினின்று வேறுபடுஞ் செய்திகளில் பழங் கன்னடமும், பழ மலையாளமும், துளுவும், குடகும், கோண்டும், கூவும் தமிழுடன் ஒத்திருத்தல் தமிழின் தொன்மைக்கும்,

தூய்மைக்கும் மற்றொரு சான்றாகும்.

iv. "பல தெலுங்கு வேர்களும் விகுதிகளும் தமிழ் வடிவங்களின் திரிபாயுள்ளமை, பின்னவற்றின் மிகு தொன்மையை வலிமையாய் உறுதிப்படுத்தும்.

v. "தமிழின் தொன்மைக்கு மற்றொரு சான்று அதிலுள்ள வடசொல் தற்பவங்களின் பெருஞ் சிதைவாகும்.

vi. "தமிழின் இலக்கியப் பண்படுத்தத்தின் மிகுதொன்மை கல் வெட்டுக்களாலும் ஊகித்தறியப்படும்." *(ஷெ.பக்.8389)*

(கிறித்தவ மறையில்) 'அரசர்கள்' (இராஜாக்கள்) 'நாளாகமம்' என்னும் புத்தகங்களின் எபிரேய மூலத்தில், கி.மு.சுமார் 1000 ஆண்டுகட்கு முன் தர்கீசு அல்லது ஒப்பீர் என்னும் துறைமுகத் தினின்று சாலோமோன் கப்பல்களிற் கொண்டு போகப்பட்ட சரக்குகளைக் குறித்த பட்டியில், மயிலுக்குக் கூறப்பட்டுள்ள சொல் உலகத்தில் எழுத்தில் காணப்படும் சொல் திராவிடச் சொல்லாகவும் மிகவும் முற்பட்டதாகும். இது அரசர்களில் 'துகி' என்றும் நாளாகமத்தில் தூகி என்றும் உள்ளது........மயிலுக்குப் பழஞ் செய்யுளிலுள்ள தூய தமிழ் மலையாளப் பெயர் (அழகிய) தோகையையுடையது என்று பொருள்படுத் தோகை என்பது. (ஷெ. பக்.91)

"தமிழ் இலக்கியம் தெலுங்கு கன்னட விலக்கியத்திற்கு முற்பட்டது; மலையாள விலக்கியத்திற்கு மிக முற்பட்டது." (ஷெ.பக்.126)

கால்டுவெல் கண்ட மொழிநூல் முடிபுகள்

"மொழிகள் மொழிக் குடும்பங்கள் ஆகியவற்றின் உறவைப் பதிற்பெயர்கள் (Pronouns) மிக விளக்குகின்றன. ஏனென்றால், பதிற்பெயர்கள், சிறப்பாகத் தன்மை முன்னிலையொருமைப் பெயர்கள், பிற

சொல்வகைகளைவிட மிகுதியாக நிலைப்புத் தன்மையைக் காட்டுகின்றன; பல்லூழிக் கடப்பிலும் மிகச் சிறிதே திரிவனவாகப் பொதுவாகக் காணப்படுகின்றன; எண்ணுப் பெயர்களினும், வேற்றுமையுருபுகளினும், வினை விகுதிகளினுங் கூட மிக நிலைத்தவையாயிருக்கின்றன; அவை பிறவற்றைப் போன்றே திரிவதற்கிடமிருப்பினும், அவற்றின் தொடர்புகளும் கிளைப்புகளும், காலத்தாலும் இடத்தாலும் எத்துணை அகன்று கிடப்பினும் ஏறத்தாழ மக்கள் மொழிகள் எல்லாவற்றிலும் கண்டு பிடிக்கப்படும், சிலவிடத்து, மூவிடப் பெயர்கள் மட்டுமே, முதலாவது ஒரே குடும்பத்தைச் சேர்ந்தனவாயிருந்து பின்பு காலக் கடப்பினாலும் திரிபின் வளர்ச்சியினாலும் பொதுமுறையாக வேறுபட்டுள்ள மொழிகளின் தொடர்புக் குறிப்பாய் அல்லது உறவுச் சான்றாயுள்ளன. இக்குறிப்பு, சிறப்பாகச் சொல்வகைகள் யாவற்றிலும் மிக நிலைப்பாய்த் தோன்றுகின்ற தன்மைப் பெயர்களைத் தழுவும்." *(ஷெ. பக்.254)*

"பின்வரும் சொல் வரிசைகள் நாம் இலக்கண ஒப்பீட்டினால் கண்ட முடிபுக்கே தத்தம் அளவில் தனிப்பட்ட முறையில் சான்று பகர்கின்றன. அதாவது: திராவிட மொழிகள், இந்தியஐரோப்பிய மொழிக் குடும்பத்தின் முது தாயாகக் கருதப்படுகின்ற வடமொழிக்கு முற்பட்ட ஆரிய மொழியொடு தமக்குள்ள தொன்மையான வேரூன்றிய தொடர்பைக் காட்டும்போதே, அவற்றுக்குச் சித்திய (Scythian) மொழிக் குடும்பத்துடன், சிறப்பாக உக்கிரிய (Ugrian) மொழிகளுடன், உள்ள உறவடையாளங்கள் மொத்தத்தில் மிக நெருங்கியும் மிகத் தெளிவாயும் மிகமுக்கியமாயும் காண்கின்றன என்பதே." *(ஷெ. பக்.452)*

கால்டுவெல் கண்காணியார் மேற்கூறியவாறு திராவிட மொழிகளை, சிறப்பாகத் தமிழை, ஆராய்ந்து பல உண்மைகளைக் கண்டாரெனினும், தொல்காப்பியத்தையும், கழக (சங்க) நூல்களையுங்

கல்லாமையாலும், குமரி நாட்டு வரலாற்றை அறியாமையாலும், தமிழின் திராவிடத் தாய்மையைக் காணாத துடன், திராவிட நாகரிகத்தை ஆரிய நாகரிகமாகப் பிறழக் கொண்டு சில தனித் தமிழ்ச் சொற்களையும் வட சொற்களாகக் கூறி விட்டனர். ஆயினும், கழக நூற்பயிற்சியும் தனித் தமிழுணர்ச்சியும் இல்லாத அக்காலத்தில் அயல்நாட்டாரான அவர் ஆரியத் தினின்று திராவிடத்தைப் பிரித்துக் காட்டின அத்துணையே மிகச் சிறந்ததென்று கொண்டு பெருமகிழ்ச்சியுடன் அவருக்கு என்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

தமிழில் திராவிடச் சொற் பாகுபாடு

தமிழல்லாத பிற திராவிடச் சொற்களெல்லாம் (க) செந்தமிழ்ச் சொற்கள், (உ) கொடுந்தமிழ்ச் சொற்கள் (ங) வடசொற்கள் என மூவகைப்படும் என்று பாவாணர் தமிழ்ச் சொற்களை வகைப்படுத்தியுள்ளார்.

அயோத்தியதாசரின் ஆய்விற்குரிய கருத்து: முத்தமிழ் திராவிடம்

வினாவிடையாக அவர் கூறும் கருத்து:

வினா: முத்தமிழ் திராவிடம் என்னும் மொழிகள் யாவும் பௌத்தர்களால் தோன்றியதா, நூதனா மதஸ்த்தவர்களால் தோன்றியதா, பௌத்தர்களால் தோன்றியதென்னில் அதன் ஆதாரத்தையும் உதாரணத்தையும் விளக்கியருளல் வேண்டும். நூதன மதஸ்தர்களுடையதாயின் எம்மொழி ஆதாரங்கொண்டு அவ்வகை வழங்கி வருகின்றார்களென்பதையுந் தென்னற விளக்கி அடியேனைப் புனிதனாக்க வேண்டும்.

விடை: அம்மொழிகள் யாவும் பௌத்தர்கள் நாவில் வளர்ந்ததேயன்றி நூதன மதஸ்த்தர்பால் தோன்றியதன்றாம். அதனந்தரார்த்தமறிய நூதன மதஸ்த்தர்கள் தங்கடங்கள் மனம் போனவாறு பொய்யைச் சொல்லி மதங்களைத் தோற்றுவித்துக் கொண்டது போல

மொழிகளினது பொருளறியாது ஒன்றை கூறவும். அதுவும் அறியாதோரதை நம்பவும் வழங்கவுமாகி வருகின்றது. அம்மொழிகள் யாவும் தென்னாட்டை ஒட்டியதன்றி வடநாட்டைப் பற்றியதன்றாம். வழங்குத் தமிழை முத்தமிழென்பது மூவகையாகப் பேசுந் தமிழென்று கூறப்படும்.

அவைகள் யாதென்னிலோ மலையாள வாசிகள் வழங்குத் தமிழை கொடுந்தமிழென்றும், திருநெல்வேலி புரவாசிகள் வழங்குந் தமிழை கருந்தமிழென்றும், சென்னை முதலிய புரவாசிகள் வழங்குந் தமிழை செந்தமிழ் என்றும் கூறப்படும்.

அவைகள் வழங்கும் வகைகளோ, நாயிண்ட மகனேயென்பது கொடுந்தமிழ், நாய் ஈன்ற மகனே வென்பது கருந்தமிழ், நாய் பெற்ற பிள்ளையேயென்பது செந்தமிழ். கருந்தமிழில் வரைந்துள்ள புகார் காண்ட முதலிய நூற்களில் வரைந்துள்ளவற்றை செந்தமிழ் வாணர் வாசிப்பதற்கே இயலாது இன்னுந் திகைக்கின்றார்கள்.

இக்கொடுந்தமிழ், கருந்தமிழ், செந்தமிழினையே நமது முன்னோர்கள் நன்கு வரைந்திருக்கின்றார்கள். இப்பாஷையினது வரிவடிவாம் அட்சரங்களில் நஞ்செழுத்தென்றும் அமுத வெழுத்தென்றும் இருவகை உண்டு. அவற்றுள் அமுதெழுத் தைக் கொண்டு தமிழென்றும், நஞ்செழுத்தைக் கொண்டு திராவிடம் என்றும் வழங்கி வந்தார்கள். திராவிடமென்னு மொழியே குறுக்கல் விகாரப்பட்டு திராவிடமென வழங்கலாயிற்று.

கொடுந்தமிழ் கருந்தமிழ், செந்தமிழ் இம்மூன்றினுள்ளும் நஞ்செழுத்துள்ளதால் முத்தமிழுக்குத் திராவிட மென்னும் பொதுப்பெயர் வழங்கலாயிற்றேயன்றி வேறன்றாம்.

இவற்றை நூதனமத வித்வான்களெவரேனும் மறுப்பரேல் பூர்வ நூலாதாரத்துடன் விளக்கக் கார்த்துள்ளோமாக. அயோத்திய தாசர் சிந்தனைகள்,

II. "ஞான அவாய்சியஸ், (சமயம் இலக்கியம்), 1999, ப.56566.

காலடுவெலின் சமுதாயப்பணி:

'இலண்டன் டைம்ஸ்' என்ற ஆங்கிலப் பத்திரிகையில் 1891 ல் டபிள்யு. டபிள்யு.ஹன்டர் என்பவர் கால்டுவெல்லைப் பற்றி எழுதியதாவது:

"1838ல் பழங்குடி மக்களை திருநெல்வேலி பகுதியில் கிருத்துவ மதத்திற்கு மாற்றியதை பிராமணர்கள் 'அரிசி கிருத்துவர்கள்' (Rice Christians) என்று இழித்துரைத்தனர். அறியாமை, வறுமையிலிருந்து விடுவிக்கப்பட்ட புதிய கற்றறிந்த இந்து சாதியினரை கால்டுவெல் உருவாக்கினார். சென்னை உயர்கல்வி இயக்குநரகம் கால்டுவெல் அவர்களின் பகுதியில் வாழ்ந்த பழங்குடி கிருத்துவர்கள் கல்வியில் முன்னேற்றத்தையும் தென்னிந்தியாவில் அரசுப் பணிகளில் முதன்மையான பதவிகளையும் பெற்றிருந்தனர், என்று அப்பத்திரிகை வெளியிட்டது.

ஆங்கில ஆட்சியிலும், ஏனைய ஐரோப்பியர்களின் ஆட்சியிலும் இந்தியாவில் கிருத்துவ மதம் பரவியதால் கீழ்மட்டத்தில் வாழ்ந்து வந்த இந்து சாதியினர் கல்வியின் பயனால் அரசுப் பணிகளில் வேலை வாய்ப்பு பெற்று சமூகத்தில் நல்ல மதிப்பையும் பொருளாதாரத்தில் முன்னேற்றத்தையும் அடைந்து ஏனைய மக்களோடு சமத்துவத்தை அனுபவித்தனர்.

பார்த்தால் தீட்டு, தொட்டால் தீட்டு என்ற பாகுபாடுகள் பெரும்பாலும் மறையத் தொடங்கின. சட்டத்தின் முன் யாவரும் சமம் என்ற சட்டத்தின் ஆட்சி செயலுக்கு வந்தது. பல மூட பழக்க வழக்கங்கள் ஒழியத் தொடங்கின. கிருத்துவர்கள் கல்விப் பணியையும், மருத்துவப் பணியையும் அடித்தட்டு மக்களிடம் எடுத்துச் சென்றனர். இதனால் கிருத்துவ மதம் காட்டுத்தீயைப் போல் பரவியது.

புதிய தமிழ் இலக்கிய படைப்புகள் உருவாயின. மொழி சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. புதிய வரலாறுகள், பழைய வரலாறுகள் ஆதாரத்துடன் எழுதப்பட்டன. அறிவியல், தொழில் நுட்பங்கள் வளரத் தொடங்கின. கிருத்துவ மதபோதகர்களால் புதிய சமுதாயம் உருவாயிற்று. இதனால் சமுத்துவம், சகோதரத் துவம், சுதந்திரம் போன்ற தத்துவங்கள் மக்களிடையே உயிர்ப் பெற்றன. ஆண்டான் அடிமை என்ற பாகுபாடு மறையத் தொடங்கின. இவற்றிற்கெல்லாம் கால்டுவெல் போன்றோரின் பணி அடித்தளத்தை அமைத்தன.

மொழி ஆய்வு நெறியாளர்:

கால்டுவெல் திராவிட மொழிகளின் நூலின் தந்தை என்ற புகழை அடைவதற்கு அவரது ஆழ்ந்த ஆரய்ச்சி அறிவுதான் காரணம். அவர் பதினெட்டு மொழிகளை அறிந்தவர். ஆங்கில நாட்டின் கிரேக்க மொழியினை கற்பித்தவர். தென்னிந்திய மொழிகளின் இலக்கணங்களை தெளிவுற அறிந்தவர். கிரேக்கம், இலத்தின், பாரசீகம், வடமொழி போன்ற மொழிகளை அறிந்தி ருந்ததால் தமிழ்மொழியின் தனித்தன்மையை அவற்றோடு ஒப்பிட்டு கூற முடிந்தது. இவரது ஆய்வு அறிவை இன்றைய தமிழ் ஆய்வாளர்கள் போதிய அளவிற்கு மேற்கொள்ளாததால் தமிழுக்கு போதிய அளவிற்கு சிறப்பு எட்டவில்லை. எடுத்துக்காட்டாக, தமிழரல்லாத அறிஞர்கள் மிகப்பெரும் ஆய்வாளர்களாக இருப்பதால் தமிழ்மொழி உலக மொழிகளோடு போட்டிப்போட இயலவில்லை. தமிழ்மொழி இந்தியாவில் அதற்குரிய இடத்தைப் பெறுவதற்கு தமிழ் ஆய்வாளர்களின் அறிவாய்தமே இன்று தேவைப்படுகிறது. தமிழ்மொழி எதிரிகளை வீழ்த்துவதற்கு உரிய தமிழ் ஆய்வும், பொது அறிவும், அறிவியல் அறிவும், பொருளாதார அறிவும், தொழில் அறிவும் தமிழர்களிடையே மிக அரிதாக காணப்படுகிறது. இதனால் தமிழ்மொழி செம்மொழியாக இருந்தும், இன்றைய தமிழர்களிடையே தமிழ்மொழி

அதற்குரிய இடத்தைப் பெறாமல் தவிக்கிறது. தமிழர்கள் தமிழ்மொழிக்கு எதிரிகள் யார்? நண்பர்கள் யார்? என்பதை அறிந்து தமிழ்மொழியை வென்றெடுக்க வேண்டும்.

கால்டுவெலின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண ஆய்வின் மூலம் கண்ட பொதுத்தன்மையும், பன்னாட்டு மொழிகளும்:

கால்டுவெல் அவர்கள் தனது நூலில் திராவிட மொழிகளின் இலக்கணத்தை ஒப்பாய்வு செய்யும்பொழுது மூத்த மொழியான தமிழ் மொழிக்கும் பிற மொழிகளுக்கும் உள்ள தொடர்பினை மூன்று பிரிவுகளாக பிரித்து எழுதியுள்ளார். அவை பிரிவு 1, இந்திய ஐரோப்பிய மொழிகளுடன் தொடர்பு, பிரிவு 2, செமிட்டிக் மொழிகளுடன் தொடர்பு, பிரிவு 3, சைத்தியன் மொழிகளுடன் தொடர்பு. இம்மூன்று தலைப்புகளிலும் திராவிட மொழிகளான தமிழுக்கும், பிற மொழிகளுக்கும் உள்ள தொடர்பினை சிறப்பாக ஆய்வு செய்து ஒப்பீடு செய்து தமிழ் மொழியின் சிறப்புகளையும், திராவிட மொழிகளின் முக்கியத்துவத்தையும் சான்றுகளுடன் நிறுவியுள்ளார்.

தென்னிந்தியாவில் உள்ள அனைத்துத் திராவிட மொழிகளை யும் 'திராவிடன்' என்று தலைப்பிட்டு அதில் 12 மொழிகளை குறிப்பிட்டுள்ளார். இதில் பிராகி மொழியை நீக்கி அவர் கூறும் 12 மொழிகள் கீழ்வருமாறு:

1.தமிழ், 2.மலையாளம், 3.தெலுங்கு, 4.துடா, 5.தோடா, 6.கோண்ட், 7.கன்னடம், 8.துளு, 9.குடகு, 10. கோண்ட்வானா, 11.ஓரன், 12.ஈஜ்மால். இதில் 6 மொழிகளை வளர்ந்த இலக்கிய முள்ள மொழிகளாகவும் மற்ற 6 மொழிகளை இலக்கியமற்ற மொழிகளாகவும் வரையறுத்துள்ளார். மேலும், தமிழையும், மலை யாளத்தையும் ஒன்றாகவும், தெலுங்கு, கன்னட

மொழியும் ஒன்றாக வகைப்படுத்தியுள்ளார்.

இவர் ஆப்கானிஸ்தான் மலைவாழ் மக்கள் மொழியான பிராகி மொழிக்கும் திராவிட மொழிக்கும் தொடர்பு உள்ளதாக கூறுகிறார். பின்னர், இந்திய ஐரோப்பிய மொழிகளுக்கிடையே தொடர்புள்ளதை ஆய்வு மூலம் விளக்குகிறார். அதைப்போல் திராவிட மொழிகளுக்கு வடமொழியான சமஸ்கிருதம் எவ்வகையில் கடன்பட்டுள்ளது என்பதை விளக்குகிறார். வடமொழியில் திராவிட மொழிச் சொற்கள் உள்ளதை கண்டுபிடிப்பதற்கு 6 விதிகளைக் கூறுகிறார். அதைப் போலவே, திராவிட மொழி களுக்கும், சமஸ்கிருத மொழிகளுக்கும் உள்ள தொடர்பை கூறுகிறார். லத்தீன், கிரீக் மொழிச்சொற்கள் சமஸ்கிருதத்தில் உள்ளதை சுட்டிக் காட்டுகிறார். இதன் மூலம் இந்திய மொழிகளுக்கும், ஐரோப்பிய மொழிகளுக்கும் உள்ள தொடர்பினை விளக்குகிறார். கிரீக், லத்தீன், பாரசீகம், ஹீப்ரு ஆகிய மொழிகள் எவ்வாறு திராவிட மொழிகளுடன் சில தளங்களில் தொடர்பு கொண்டு உள்ளன என்பதை கூறுகிறார். அடுத்து சைத்தியன் மொழிகளான தென்கிழக்கு ஆசிய மொழிகளான ஜப்பான், சீனா, மங்கோலியன் ஆகியவற்றுடன் திராவிட மொழிகள் இந்தியஐரோப்பிய மொழிகளை விட நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதை வியக்கத்தக்க அளவில் விளக்குகிறார். ஆக, கால்டுவெல் தனது நூலில் மூன்று பிரிவுகளாகப் பிரித்து இந்தியஐரோப்பிய மொழி தொடர்பு, அரபு மொழி, ஹீப்ரு மொழி தொடர்பு, சைத்திய மொழி தொடர்பு என்று பல்வேறு தளங்களில் மிகச் சிறப்பாக ஆய்வு செய்துள்ளார்.

இந்தியாவில் உள்ள வடநாட்டு மொழிகள் அனைத்தையும் ஆரியர் வருகைக்கு முன் இருந்த மொழிகள் அல்லது ஆரியம் அல்லாத மொழிகள் என்று கூறுகிறார். வட இந்தியாவில் உள்ள போஜ்புரி, மைதிலி போன்ற மொழிகளும் இதர பழங்குடி

ஆதி வாசிகள் பேசுகின்ற மொழிகளுக்கும் திராவிட மொழிகளுக்கும் உள்ள தொடர்பை ஆதாரத்துடன் நிறுவியுள்ளார். மராத்தி, குஜராத்தி, சௌராஷ்டிரன் போன்ற மொழிகள் வடமொழியின் செல்வாக்கால் தனி மொழியாக பரிணமித்துள்ளன. ஆக, ஆரியர்கள் இந்தியாவிற்குள் நுழைவதற்கு முன் இந்தியா முழுவதிலும் பேசப்பட்ட மொழி திராவிட குடும்ப மொழிகள் என்பதே கால்டுவெலின் ஆய்வு முடிவாகும்.

ஐரோப்பியர் காலம் (கி.பி.1600-1947)

மேநாட்டு அறிஞர்கள் குறிப்பாக ஐரோப்பிய அறிஞர்கள் இந்தியாவிற்கு வருகைபுரிந்த பின்னர் சமூக, அரசியல், பொருளாதார, பண்பாட்டு, மொழி, இலக்கிய தளங்களில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. பழமைகள் மறைந்து புதுமைகள் முன்னுக்கு வந்தன. பல உரைநடைகள், கல்விச் சாலைகள் தமிழ் மக்கள் மேநாட்டு இலக்கியங்களோடு அறிமுகம் ஆனார்கள். சிறுகதை, நாவல் என்ற புதினம் தமிழில் தோன்றின. பத்திரிகைகள், வார வெளியீடுகள், தினச்செய்தி தாள்கள், வானொலி, சினிமா போன்றவை தமிழ் மொழியை வளர்ச்சி அடையச் செய்தன, அரசியல் அமைப்பில் பெருத்த மாற்றம் ஏற்பட்டது. அறிவியல், தொழிநுட்பம் பெருகத் தொடங்கின. சுருங்கக்கூறின், சிந்தனைப் புரட்சி இந்திய மக்களிடையே குறிப்பாக தமிழ் மக்களிடையே தோன்றியது.

தமிழில் சங்ககாலம் தொட்டு உரையாசிரியர்கள் தமிழ் உரைநடை தோற்றத்திற்கு வித்திட்டனர். என்றாலும், இன்றைய நடைமுறையில் உள்ள உரைநடைக்கு உகந்ததாக இல்லை என்றே கூறலாம். ஐரோப்பியர் வருகையால் முதன்முதலாக தமிழ்நாட்டில் அச்சுக்கூடத்தை நிறுவிப் பல உரைநடை நூல்களை அவர்கள் அச்சிட்டனர். அதாவது, அம்பலக்காடு,

புன்னைக்காயல், கொச்சி போன்ற இடங்களில் முதன்முதலாக இந்தியாவிலேயே அச்சுக் கூடங்களை நிறுவினர். பல தமிழ்ப் புத்தகங்களை ஏசுசபை குருமார்கள் வெளியிட்டனர்.

1555ல் முதன்முதலாக போர்த்துகீசின் நாட்டின் தலைநகரான லிஸ்பன் மாநகரில் தமிழ்நூல் அச்சாகியது. இது கிருத்துவ மறை நூலாகும். 1577ல் 16 பக்கங்கள் அடங்கிய தம்பிரான் வணக்கம் என்ற நூலை கொல்லத்தில் அச்சிட்டனர். இதுவே இந்தியாவில் அச்சிட்ட முதல் தமிழ் நூலாகும்.

ஐரோப்பியர்களால்தான் உரைநடையில் நூல் இயற்றும் வழக்கம் தோன்றிற்று. இது தமிழ் மொழியில் மட்டுமல்ல, ஏனைய இந்திய மொழிகளுக்கும் பொருந்தும். முதன் முதலில் உரைநடை நூல் இந்தியாவிலேயே தமிழில் தான் தோன்றியது என்பது பெருமைக்குரியது.

உரைநடையின் தந்தை (The Father of Tamil Prose)

இத்தாலி நாட்டைச் சார்ந்த ராபர்ட்டி நோபிலி என்ற கிருத்துவ பெரியார் 17ஆம் நூற்றாண்டில், தமிழ்நாட்டில் இவர் பல நூல்களை தமிழில் இயற்றியுள்ளார். இவை அச்சிடப்படாததால் பல அழிந்துவிட்டன. இதனால் தமிழ் உரைநடையின் தந்தையாகப் வீராமாமுனிவர் போற்றப்படுகிறார் ஆவார். இவரது பெயர் கான்ஸ்டான்டின் ஜோசப் பெஸ்கி ஆகும். இவர், பல உரைநடை நூல்களை பற்பல நடையில் எழுதியுள்ளார். வேதியர் ஒழுக்கம், வேதவிளக்கம் போன்ற நூல்கள் தமிழில் இவரால் எழுதப்பட்டுள்ளன.

இவர் எழுதிய பரமார்த்தகுரு கதை நகைச்சுவை உரைநடை முதல் நூலாகும். இதனால் இவர் உரைநடையின் தந்தை எனப்பட்டார். மேலும், தமிழ்மொழி எழுத்துக்களை சீர்படுத்தினார். குறிலுக்கும், நெடிலுக்கும் உள்ள வேறுபாட்டை தெளிவுபடுத்தினார். தமிழில் முதல் சிறுகதையை தோற்றுவித்தார். தமிழ்

இலத்தீன் அகராதியைத் தொகுத்தார். பெண் கல்விக்கும், பெண்களின் மறுமணத்திற்கும் ஊக்கமளித்தார். முதன்முதல் அச்சுப் புத்தகத்தை தமிழில் வழங்கியவர் ஸீகன்பால்கு என்ற கிருத்துவராவார். இவர் ஜெர்மானியர். எல்லீஸ் என்ற அறிஞர் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிப் பெயர்த்தார்.

இவ்வாறாக, தமிழ்மொழிக்கு ஐரோப்பியர்கள் பல்வேறு வகைகளில் தொண்டாற்றி உள்ளனர் என்பதை இன்றைய தமிழர்கள் நினைவு கூறவேண்டும். இதுவே, கால்டுவெல் அவர்களுக்கு செலுத்தும் நன்றியாகும்.

ஆரியத்தமிழ் ஆய்வாளர்களும், திராவிடத் தமிழ் ஆய்வாளர்களும்

இவ்விருவரும் தமிழ்மொழியை தாய்மொழியாகக் கொண்டவர்கள். தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதய்யர் ஆரியத்தமிழர். அதைப் போலவே தமிழை செம்மொழியாக்க வேண்டும் என்று கோரிய பரிதிமாக் கலைஞர் அவர்களும் ஆரியத்தமிழர். அதாவது, தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட ஆரியர்கள் என்ற பார்ப் பனர்கள் தமிழ் மொழியைவிட ஆரியமே அதாவது சமஸ்கிருதமே உயர்ந்த மொழி, தேவமொழி என்று பறைசாற்றுவர். ஆனால் அவருடைய தாய்மொழி தமிழ் என்றாலும், ஆரிய வழக்குப்படி தந்தைமொழி வடமொழியே ஆகும்.

மாமுனிவர் என்றும் மகாபெரியவர் என்றும் அழைக்கப்படும் காஞ்சி பெரிய சங்கராச்சாரியார் அன்றாடம் குளித்துவிட்டு பூஜை செய்வதற்குச் சென்றபின், எவருடனும் தமிழில் பேசமாட்டார் என்றும் அப்படி பேசநேர்ந்தால் குளிக்க வேண்டும் என்பதால் அவர் பூஜைக்குச் சென்ற பின்னர் யாரையும் சந்திக்க மாட்டார். அதாவது, நீச்ச மொழியான (வேத பார்ப்பனர் கருத்து) தமிழைப் பேசினால் தீட்டுப் பட்டுவிடும் என்பதால் மீண்டும் குளிக்கவேண்டி வரும்

என்ற காரணத்தால், அப்பெரியவர் பூஜைக்குப் பின்னர் யாருடனும் தமிழில் உரையாடத் துணியமாட்டார் என்ற கருத்தை ஒரு சம்பவத்தை எடுத்துக்காட்டி, "இந்து மதம் எங்கே போகிறது" என்ற நூலில் அக்னிகோத்ரம் ராமானுஜ தாத்தாச்சாரியார் எழுதியுள்ளார்.

எனவே, ஒட்டுமொத்த ஆரியத் தமிழ் ஆய்வாளர்கள் தமிழைப் பின்னுக்குத்தள்ளி, வடமொழியை முன்னுக்குத் தள்ளுவர். இதுதான் வைதீக சனாதன பார்ப்பன ஆரியத்தமிழ் ஆய்வாளர் களின் அணுகுமுறையாகும்.

இதுவே இன்றைய நடுவண் அரசின் மொழிக் கொள்கையாக வெளிப்படுகிறது என்பதைத் தமிழ் ஆய்வாளர்கள் மட்டுமல்ல, ஏனைய மொழி ஆய்வாளர்களும் அறிய வேண்டிய அரிதான கருத்தாகும்.

திராவிடத் தமிழர்கள் தமிழைத் தாய்மொழியாக கொண்டிருந்தாலும் அதிகாரக் கட்டமைப்பில் செல்வாக்குப் பெறவில்லை. எடுத்துக்காட்டாக, அகில உலகில் புகழ்பெற்ற நோபல் பரிசு பெற்ற அறிஞர்கள் பெரும்பாலும் இந்தியாவில் ஆரியஇந்தியர் களாக உள்ளனர்.

தமிழ்நாட்டில் நோபல் பரிசு பெற்ற சர்.சி.வி.ராமன், எஸ். சந்திரசேகர், வெங்கி போன்றோர் ஆரியத் தமிழர்கள். தமிழர்கள் என்று பறைசாற்றிக்கொள்ளும் பச்சைத் தமிழர்கள் யாரும் இதுகாறும் நோபல் பரிசு பெறவில்லை. ஆரியர்கள் சனாதனிகளாக இருந்தாலும் அறிவியலிலும், தொழில் நுட்பத்திலும், பகுத்தறிவு ஆய்வில் ஈடுபட்டு வாகை சூடுகின்றனர். அதன் மூலம் முடிவெடுக்கக்கூடிய அதிகார மையங்களில் அமர்ந்துவிடுகின்றனர். கொள்கை, தத்துவம் போன்றவற்றின் அடிப்படையில் செயல்பாட்டை முடுக்கி விடுகின்றனர். நடுவண் அரசின் மேனாள் வர்த்தகத்துறை அமைச்சர் சுப்பிரமணியசாமி போன்ற ஆரியத்தமிழருக்கு இணையாக திராவிடத் தமிழரில்

எவரும் இல்லை என்பதே உண்மையாகும்.

இன்றைய காலம் அறிவுஜீவிகளின் காலமாகும். இதில் முட்டாள்தனமும், முரட்டுத்தனமும், மூடநம்பிக்கையும், வெற்றுப் பேச்சும், வீராப்பும், கொள்கையற்ற கூட்டமும், கட்சியும், சாதிக்க இயலாத படிப்பும் பட்டமும், தமிழ் மொழிக்கோ, தமிழ் இனத்திற்கோ, தமிழ் நாட்டிற்க்கோ எந்தவித நிலைத்த நன்மையும், சாதனையும், வெற்றியும் தர இயலாது. எதிரிகளை வென்றெடுக்க ஆய்வு பலமட்டங்களில் மிகமிக அவசியமாகும். இதை கால்டு வெலின் வாழ்க்கையின் மூலம் ஒவ்வொரு திராவிடத் தமிழனும் உணரவேண்டும்.

வடமொழியால் நேர்ந்த திராவிட மொழிகளின் சிதைவு

தமிழ்நாட்டில் விஜயநகர பேரரசு கோலோட்சிய காலத்தில் இங்கு குறிப்பாக மதுரையிலும் இன்னும் பிற தமிழக பகுதிகளிலும் குடியேறிய தெலுங்கர்கள் இன்றளவும் வீட்டில் தாய்மொழியான தெலுங்கை பேசி வருகின்றனர். அதைப்போல் தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்களின் காலத்தில் குடியேறிய மராட்டியர்கள், சௌராட்டிரர்கள் அதாவது குஜராத்திகள் தங்கள் வீடுகளில் தாய்மொழியான மராத்தியையும், சௌராஸ்டிரா மொழியையும் இன்றளவு பேசிவருகின்றனர். அதைப்போலவே, தமிழகத்தில் குடியேடிறியுள்ள மலையாளிகளும், கன்னடர்களும் அவரவர் தாய் மொழியினை பேசி வருகின்றனர். ஆனால், இவர்கள் வெளியில் படிப்பதும், எழுதுவதும் தமிழ் மொழியாகும். ஆக, வெளி மொழி வழி மாநிலங்களிலிருந்து தமிழகத்தில் குடியேறியவர்கள் தங்களது தாய்மொழிகளை வீட்டு மொழியாக தொன்றுதொட்டு இன்றளவு பேசி வருகின்றனர்.

இப்படிப் பிற மொழியினர் தங்களது தாய்மொழிகளை வீடுகளில் பேசி மறக்காமல் நிலைபடுத்தி வரும்

பொழுது, ஆரியத் தமிழர்கள் அதாவது, பிராமணர்கள் தங்கள் வீட்டிலும் வெளியிலும் தமிழ்மொழி ஒன்றையே பயன்படுத்தி வருகின்றனர். அதைப்போல் ஒவ்வொரு மாநிலத்திலும் வாழ்ந்து வரும் பிராமணர்கள் தங்களது தாய்மொழியாக அந்தந்த மாநில மொழிகளையே பேசி வாழ்ந்து வருகின்றனர். தெலுங்கு பிராமணர்கள், கன்னட பிராமணர்கள், மலையாள பிராமணர்கள், ஒரியா பிராமணர்கள், குஜராத்தி பிராமணர்கள், வங்காள பிராமணர்கள், பீகாரி பிராமணர்கள் என்று அனைத்து மொழிவழி தேசிய இனங்கள் அடிப்படையில் பிராமணர்களின் தாய்மொழிகள் அமைந்துள்ளன. இவர் களுக்கென்று அகில இந்திய ரீதியில் ஒரே தாய்மொழி என்று எந்த மொழியும் இல்லை. இவர்கள் எந்த மாநிலத்தில் குடியேறு கிறார்களோ அந்த மாநிலத்தின் மொழிதான் தாய்மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு வரலாற்று காலம் தொட்டு நிலவி வரும் அடிப்படை உண்மையாகும்.

ஆரிய பிராமணர்கள் இந்தியாவில் குடியேறிய போது வேதத்திற்கு சொந்தம் ஆனார்கள். அதனால் வடமொழி அவர்களது தந்தை மொழியாயிற்று. இம்மொழி பேசப்படும் மொழியாக இல்லை. அரைகுறை மொழியாக அதாவது பிராக்குதம் என்றாயிற்று. வடமொழி பல்வேறு திராவிட மொழிகளின் துணைகொண்டு வடநாட்டில் பல்வேறு மொழிகளாக வழங்கலாயிற்று. என்றாலும், திராவிட மொழிகளே இந்தியாவின் தொன்மொழிகளாக விளங்கிற்று. காலப்போக்கில் பல்வேறு திராவிட மொழிகளை வடமொழி உட்கொண்டது.

எடுத்துக்காட்டாக, புத்தர் காலத்தில் புத்தரும் அம்மதத்தினரும் பாலி மொழியை பேசினர். அவர்களது மத நூல்களும், நீதி நூல்களும் பாலி மொழியில் ஓதப்பட்டன, எழுதப்பட்டன. ஆனால், மகாயான புத்தமத காலத்தில் அதாவது நாகர்ஜுனன் என்ற புத்தமதத் துறவிகாலத்தில் பாலி மொழியில் இருந்த

அனைத்து புத்தமத நூல்களும் வடமொழியான சமஸ் கிருதத்திற்கு மாற்றப்பட்டன. இதனால் பாலி மொழி வடமொழியால் ஜீரணிக்கப்பட்டுவிட்டது. எடுத்துக்காட்டாக, தம்மா என்ற பாலி சொல் தர்மம் என்றும், சுத்தா என்ற பாலி சொல் சூத்ரா என்ற வட மொழி சொல்லாகவும், கம்மா என்ற பாலி சொல் கர்மா என்ற வடமொழி சொல்லாகவும், சிரி என்ற பாலி சொல் வட மொழியில் ஸ்ரீ என்றும் வடமொழியில் பாலிமொழி சொற்கள் கரையேற்றப் பட்டன.

இதைப்போலவே, பல்வேறு இந்திய ஆதி மொழிகளிலிருந்து வடமொழி பல்வேறு இலக்கண, இலக்கிய சொற்களை எடுத்துக் கொண்டுள்ளது. தமிழ் அறிஞர் மறைமலையடிகள் எத்தனை தமிழ்சொற்கள் வடமொழியில் புகுந்துள்ளன என்பதை விளக்கமாக தனது நூலில் எழுதியுள்ளார்.

தமிழைப் பாதுகாக்க வடமொழிச் சொற்களை தவிர்த்து எழுத தனித்தமிழ் இயக்கத்தை நடத்தி வந்தார். ஏனென்றால், வடமொழி திராவிட மொழிகளில் புகுந்து இலக்கிய, இலக்கணங்களையும், சொற்களையும் புகுத்தி தென்னாட்டில் பல மொழிகள் தோன்றி தமிழில் இருந்து பிரிவதற்கு அடிப்படை காரணமாக இருந்தது. இதனால்தான் வடமொழி கலந்த மணிப்பிரவாள மொழிநடையை மறைமலையடிகளும், ஏனைய தமிழறிஞர்களும் எதிர்த்து தனித்தமிழ் இயக்கத்தை தோற்றுவித்தனர்.

ஆரியத்தமிழ் பிராமணர்கள் தங்களது தாய்மொழி தமிழாகவும், ஆந்திராவில் தெலுங்காகவும், கர்நாடகத்தில் கர்நாடகமாகவும், மலையாளத்தில் மலையாளமாகவும் இருந்ததால் அம்மொழிக ளெல்லாம் தங்களது தந்தை மொழியான வடமொழியை புகுத்தி அதன் தனித்தமிழ் தன்மையை ஒழித்துவிட்டனர். இதனால் அம்மொழிகள் தமிழ் மொழியினின்று வேறுபட்ட மொழிகளாக திராவிட மொழிக் குடும்பத்தில் உள்ளன. இதற்கு

மூல காரணம் ஆரிய தமிழ்ப் பிராமணர்களே ஆவர். இதையே அவர்கள் இந்தியா முழுவதிலும் பல்வேறு மொழிவழி தேசிய இனங்களிடையே செய்துள்ளனர், செய்து வருகின்றனர்.

கேரளாவில் மட்டஞ்சேரி என்ற சிறு தீவில் அதாவது கொச்சி நகரத்தில் யூதர்கள் சாலமன் காலத்தில் குடியேறினார்கள். அப்பொழுது அவர்களுக்கு கேரள மன்னன் குடியுரிமை வழங்கி அரசாங்க ஆவணம் கொடுத்தான். அந்த ஆவணம் தமிழில் எழுதப்பட்டிருந்தது. என்பது இன்றளவும் சான்றாக உள்ளது. அக்காலத்தில் மலையாளம் என்ற மொழி இல்லை. தமிழ்தான் இருந்தது. மலையாளம் என்று தனி மொழியோ, எழுத்தோ இல்லை. அதனால் தான் அந்த அரசாங்கப் பட்டயம் தமிழ்மொழி எழுத்தில் எழுதப்பட்டது.

ஆக, காலப்போக்கில் மலையாளத்திலும், கன்னடத்திலும், தெலுங்கிலும் ஆரிய பிராமணர்கள் புகுந்து இலக்கண இலக்கியங்களில் புதுமை செய்ததால் அம்மொழி தமிழ் மொழியினின்று வேறுபட்டு ஆரிய வடமொழி கலப்பிற்குள்ளாயிற்று. இவ்வாறுதான் இந்தியாவின் பூர்வீகக் குடிகளின் மொழிகளான தமிழ்மொழியும், பிற மொழிகளும் சிதைக்கப்பட்டு தனித்தன்மை அழிக்கப்பட்டு, அனைத்து மொழிகளும் வடமொழியில் இருந்துதான் தோன்றியது என்ற மாயை உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால், உண்மையில் கால்டுவெல் போன்ற அறிஞர்களின் திராவிட மொழி ஒப்பிலக்கண ஆய்வின்படி தமிழ்மொழி தனித்தமொழி, வடமொழியுடன் தொடர்பு இல்லாமல், பேசவும், எழுதவும் முடியும் என்ற உண்மை வெளி உலகிற்கு 1856ல் வெளிவந்தது.

மொழிகளின் வரலாறை இப்படி இருக்கும்பொழுது, இந்திய மொழிகள் அனைத்திற்கும் வடமொழி சமஸ்கிருதம் தாய்மொழி என்று கூறுவது வரலாற்று

உண்மைக்கு புறம்பானதாகும்.

வடமொழி என்ற சமஸ்கிருதம் என்றும் பேசப்படாத மொழி

ஆரிய பிராமணர்கள் எந்த மாநிலத்தில் குடியேறினாலும் அம்மாநில மொழிகளையே தாய்மொழியாக வீட்டிலும் வெளியிலும் பேசியும், எழுதியும் வருகின்றனர். சமஸ்கிருத மொழி இலக்கிய, இலக்கண அறிஞர்களின் மொழியாகும். கிரேக்கம், இலத்தீன், பாரசீகம் போன்ற மொழிக் குடும்பத்தை சார்ந்ததாகும். பாரசீக மொழியில் உள்ள புனித நூலான ஜந்த் அவஸ்தா நூலும் வட மொழியில் உள்ள ரிக்வேதமும் பல வகையில் ஒத்துப் போகின்றன. பாரசீகர்களின் மதமான ஜொராஷ்டிரம் ஜொராஷ்டிரர் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. ஆய்வாளர்கள் பாரசீகர்களின் மதமும், இந்து மதமும் அடிப்படையில் ஒன்றே என்று கூறுவர். பல வட மொழி சொற்கள் பார்சி மொழியில் உள்ளதை இன்றளவும் காணலாம். எடுத்துக்காட்டாக, புத்ரா, புத்ரி போன்ற சொற்களை கூறலாம். ஆக, வடமொழிக்கும், பார்சி மொழிக்கும் நெருங்கிய இரத்த உறவை ஆய்வு முடிவில் காணலாம்.

அதைப்போல் இந்தோஐரோப்பிய மொழிகளில் ஜெர்மன் மொழிகளில் உள்ள இலக்கணமும், சொற்களும் சமஸ்கிருத இலக்கண, சொற்களை ஒத்திருப்பதைக் காணலாம். அதாவது, சமஸ்கிருதம் என்பது செம்மைப்படுத்தப்பட்ட, ஒருங்கிணைக்கப்பட்ட மொழி என்பதே உண்மை. இம்மொழி எவராலும், எக்காலத்திலும் பேசப்படவில்லை என்பது வரலாற்று உண்மை. இப்படி நடைமுறை வரலாறு இருக்கும்போது சமஸ்கிருத மொழியை ஆரிய பிராமணர்களின் செல்வாக்கால், அரசியல் ஆளுமையால் இந்திய தேசிய மொழியாக சமஸ்கிருதத்தை அறிவிக்க எத்தனிப்பது மொழிவழி தேசிய இனத்தவர்களுக்கு எதிரிடையான செயலாகும். வடமொழி என்ற சமஸ்கிருதம் மக்களால்

பேசப்பட்டிருந்தால் ஆரிய பிராமணர்கள் வேதத்தை இன்றுவரை மனப்பாடமாக பலநூறு ஆண்டுகளாக கொண்டு வந்திருப்பதைப்போல் தங்களது மொழியான வடமொழியை பேச்சு மொழியாக நடைமுறைப்படுத்தி இன்றளவும் நிலைபெறச் செய்திருப்பார்கள். இம்மொழி பேசும் மொழியாக இல்லாததால்தான், இவர்கள் குடியேறிய மாநிலங்களில் நிலவிய மொழிகளை தங்களது பேசும் மொழியாக ஏற்றுக்கொண்டு இன்றளவும் வாழ்ந்து வருகின்றனர். எனவே, மக்கள் நாவில் வாழும் மொழிகளையே அதாவது அரசியல் சட்டத்தில் எட்டாவது அட்டவணையில் உள்ள 23 மொழிகளை இந்திய ஆட்சி மொழிகளாக அறிவிப்பதே இந்திய ஒருமைப்பாட்டிற்கும், மக்களின் அமைதிக்கும், ஜனநாயகத்திற்கும், சமய சார்பற்ற தன்மைக்கும், சமத்துவத்திற்கும் ஏற்புடைய செயலாகும்.

இந்தி மாநிலங்களில் மறைக்கப்பட்டுள்ள மொழிகளின் மகத்துவம்

வட இந்தியாவில் பீகார், ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், உத்திரப்பிரதேசம், ஆகிய மாநிலங்கள் இந்தி மாநிலங்கள் என்று ஒட்டுமொத்தமாக கூறப்படுவது தவறு என்பதை அங்கு நிலவி வரும் பல்வேறு மொழிகள் உணர்த்துகின்றன.

எப்படித் தென்னிந்திய திராவிட மொழிகள் வடமொழிகளிலிருந்து வேறுபட்டு உள்ளனவோ அதைப்போல் வடமாநிலங்களி லிருந்தும் பல்வேறு இன மொழிகள் நின்று நிலவி வருகின்றன.

கி.பி.1900க்கு முன்னும், பின்னும் ஐரோப்பாவின் கிழக்கிலும், மேற்கிலும் பல்வேறு மொழிவழி தேசிய இன நாடுகள் தோன்றின. ஜெர்மனி, பிரான்சு, இங்கிலாந்து, ஸ்பெயின், ஹங்கேரி, போலத் தோன்றின.

அதேநேரத்தில் பல்வேறு இனங்களைக் கொண்ட ஐக்கிய சோவியத் நாடு, யூகோஸ்லேவியா, இந்தியா

போன்ற நாடுகள் தோன்றின. சோவியத் நாடு பின்னர் பல தேசங்களாக சிதறின. அதைப்போல் யூகோஸ்லேவியாவும் பிரிந்து விட்டன. இவ்வாறு உலகில் பல்வேறு நாடுகள் பல்வேறு தேசிய இனங்களைக் கொண்ட நாடுகளாக விடுதலை பெற்றுள்ளன.

இந்நிலையில் இந்தியா பல்வேறு தேசிய இனங்களைக் கொண்ட, மொழிகளைக் கொண்ட ஒருங்கிணைந்த நாடாக இந்தியா இன்று விளங்குகின்றது. இந்நிலையில் இந்தி ஒன்றே ஒரே தேசிய மொழி என்றோ, ஒரே ஆட்சி மொழி என்றோ கூறுவது இந்திய ஒருமைப்பாட்டிற்கு பொருந்தாது. இங்கு பல்வேறு தேசிய இனமொழிகளை ஆராயும்போது பல புதிய தகவல்கள் வருகின்றன.

போஜ்புரி மொழி

இம்மொழியை பதினைந்து கோடி மக்கள் பேசுகின்றனர். அதாவது, பீகார் மாநிலத்தில் 8 கோடி பேரும், உத்திரப்பிரதேசத்தில் 7 கோடி பேரும் பேசுகின்றனர். ஆக, பீகாரிலும், உத்திரப் பிரதேசத்திலும் அதைச்சார்ந்த பகுதிகளிலும் இம்மொழி பெரும் பாலான மக்களால் பேசப்பட்டு வருகின்றது. ஜார்கண்ட் வடக்குப் பகுதியிலும், நேப்பாளத்தின் தெற்கு பகுதியிலும், தேரை என்ற பகுதிகளிலும் இம்மொழி பேசப்படுகிறது. இம்மொழியின் எழுத்து இந்திமொழியின் எழுத்து அல்ல. இவைகள் இந்தி மொழியின் உட்பிரிவு என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. 2001 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி இம்மொழி 8வது அட்டவணையில் சேர்க்கப்படவில்லை. என்றாலும், இம்மொழி தனித்த இலக்கியத்தையும், மொழி வரலாற்றையும் கொண்டுள்ளது. இம்மொழி கைத்தி என்ற எழுத்து வடிவத்தைக் கொண்டுள்ளது. 16ம் நூற்றாண்டு முதல் 20ம் நூற்றாண்டு வரை இந்த எழுத்து வடிவம் பயன்படுத்தப்பட்டுள்ளது. போஜ்புரி மொழி கைத்தி, நாஸ்தாலிக் போன்ற எழுத்து வடிவங்கள் இம்மொழிக்கு உண்டு. இம்மொழியின் எழுத்து வடிவம் பாரசீக

எழுத்து வடிவத்தை மாற்றிவிட்டது. நீதித் துறையிலும், அலுவலங்களிலும் 1880க்குப் பிறகு கெய்த்தி எழுத்து வடிவமே மேற்கொள்ளப்பட்டுள்ளது. இம்மொழிக்கே வடக்கு எல்லை தலைமை மாநில மொழி என்று பெயர் (North-East Frontier Presidency Languages)

ஆங்கில ஆட்சி போஜ்புரி எழுத்து வடிவத்தை செம்மைப் படுத்தியது. இம்மொழிதான் தொடக்கப்பள்ளிகளில் பயிற்று மொழியாக வழங்கப்பட்டது. இந்த மொழி எழுத்து 1960 வரை பயன்படுத்தப்பட்டது. பின்னர் 1994ல் அதன் இடத்தை தேவநாகரி எழுத்திற்கு கொடுக்கப்பட்டது.

பாபுராம் ஸ்வரன்லால் 1898ல் கெய்த்தி எழுத்தில் கதைகள் எழுதினார். பத்மஸ்ரீ சாரதா சின்ஹா பழங்குடிப் பாடல்களைப் பாடினார். பீகாரி தாக்கோர் என்பவர் போஜ்புரி நாடக உலகில் ஷேக்ஸ்பியர் என்று அழைக்கப்பட்டார். ராகுல் சாங்ஸ்கிருத்தியாயன் தனது சில கருத்துக்களை போஜ்புரி மொழியில் எழுதினார். ஸ்வாமி சகாதானந்தா சரஸ்வதி போஜ்புரியில் மிக உயர்ந்த கிசான் தலைவராகவும், தலைசிறந்த பேச்சாளராகவும் விளங்கினார். மேலும் அவர்கள் இந்தி அல்லாத ஐந்து செய்தித்தாள்களை கொண்டிருந்தது. சன்டே இந்தியன் என்ற இதழ் போஜ்புரி மொழியில் வெளிவந்தது. மகுவா, ஹமார் போன்ற தொலைக்காட்சிகள் ஒளிபரப்பப்பட்டன. வெப்சைடு விக்கிபிடியா இம் மொழியில் உள்ளன. போஜ்புரியில் திரைப்படங்கள் உள்ளன. நவீன இந்தி மொழி போஜ்புரி மொழியை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. உண்மையில் இந்த இந்தி எழுத்துக்கள் போஜ்புரி மொழியிலிருந்து பெறப்பட்டது

மகதி பீகாரி மொழியாகும். இதை இரண்டு கோடி மக்கள் பேசுகின்றனர். அதாவது, பீகாரி மொழிகள் 3 ஆகும். அதாவது, போஜ்புரி, மகதி, மைதிலி. இம்மூன்று மொழிகளும் மிகப்பெரிய மொழிகளாகும். ஜார்கன்ட் மாநிலம் பிரிந்த பின்னர் இம்மொழிகள்

எல்லா பகுதிகளிலும் பேசப்பட்டு வருகின்றன.

மைதிலி மொழி

இராமயண கதைப்படி மைதிலி அல்லது சீதை மிதிலா நகரத்தில் அதாவது பீகார் மாநிலத்தில் பிறந்தார் என்பது செய்தி. இம்மொழியை 4.5 கோடி மக்கள் பேசுகின்றனர். மக்கள்தொகை 2001ன் கணக்குப்படி 1.22 கோடி என்றாலும் அம்மொழியை பெரும்பாலான மக்கள் பேசி வருகின்றனர். மக்களின் கோரிக்கைப்படி 2003ல் இம்மொழி 8வது அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளது. இம்மொழி தனித்த எழுத்து வடிவம் கொண்டுள்ளது. இம்மொழிக்கு மிதிலக்சர், திர்குதா, கைத்தி போன்ற எழுத்து வடிவங்கள் உள்ளன. சில மொழிகள் ஒன்றுக்கும் மேற்பட்ட எழுத்து வடிவங்களைக் கொண்டுள்ளன. எப்படி பொங்கனி மொழி கன்னடம், மராத்தி, தேவநாகரியில் எழுதப்படுகிறதோ, அதைப்போல் மைதிலி மொழியும் பல்வேறு எழுத்து வடிவங்களில் எழுதப்படுகின்றன. நவீன இலக்கணத்தை ஜார்ஜ் ஆப்ரகாம் கிரயர்சன் எழுதியுள்ளார். இது தொடர்பு மொழிக்கு பயன்படுகிறது. சாகித்ய அகாடமி மைதிலி மொழிக்கு சன்மானம் கொடுத்துள்ளது. இது இந்தியில் இருந்து பிரிக்கப்பட்டுள்ளது. இம்மொழி தனக்கே உரிய வளத்தையும், பழைமையும் கொண்டுள்ளது. இம்மொழியில் வர்ணரத்தினகரம் (1824 கி.பி.) எழுதிய ஜோதிஸ்வர் தாக்கூர், வித்யாபதி போன்ற புலவர்கள் புகழ் பெற்றவர்கள். இவர்கள் மிதிலா நகரின் ஆன்மாக்கள் என்பர். இன்றும் அவர்களுக்கு பாடல்கள் பாடப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் வித்யாபதி சமோரோ விழா கொண்டாடப்படுகிறது. இவரது புகழ் பீகார், மேற்கு வங்காளம் போன்றவற்றில் பரவியுள்ளது.

1911-12ல் பீகார் மாநிலம் வங்காளத்தில் இருந்து பிரிக்கப்பட்டது. இப்பிரிவு மொழிவழி தேசிய இன அடிப்படையில் ஏற்பட்டது. பீகாரை வங்காளத்தில்

இருந்து பிரிப்பதற்கு அடிப்படைக் காரணம் இநதி மொழி பேசுபவர்களுக்கு தனி மாநிலம், நிர்வாகம் கொடுக்கப்பட வேண்டும் என்பதே ஆகும். மொழி அடிப்படையில் அதாவது இந்தி மொழி அடிப்படையில் இந்தியாவில் முதன் முதலில் அமைக்கப்பட்ட (1911) மாநிலம் பீகார் ஆகும். இப்பிரிவினை லார்டு ஹார்டின்ஸ் காலத்தில் ஏற்பட்டது.

பீகார் மாநிலம் தோன்றிய பின்னர் ஆந்திர மாநிலம் தோன்றுவதற்கு இந்தி மொழி காரணமாகும். தர்பங்கா பகுதியின் ராஜாவாக இருந்த நிர்வாகத்தின் கீழ் சமஸ்கிருதத்திற்குப் பதிலாக இந்தியை அலுவல் மொழியாக ஆக்கினர். இதற்கு வித்யாபதி (1350-1450) காரணமாக இருந்தார்.

உத்திரப்பிரதேசத்தில் அவதி என்ற மொழி 2 கோடி மக்களாலும் கனோஜ் என்ற மொழி 1 கோடி மக்களாலும் பேசப்படுகிறது. உத்திரப்பிரதேசத்தின் கடைக்கோடி கிழக்கு பகுதியில் போஜ்புரியும், மேற்குப் பகுதியில் அவதியும், பிறகு உத்திரப்பிரதேசத்தின் மத்தியப் பகுதியில் கனோஜ் மொழியும் பேசப்படுகின்றன. உத்திரப்பிரதேசத்தின் தொலைதூர மேற்குப் பகுதியில் பிராஜ்பாஷா, பிராஜ், அவதி போன்ற இலக்கிய மொழிகள் பேசப்படுகின்றன. இம்மொழிகள் இலக்கிய வரலாறு கொண்ட பலமிக்க மொழிகளாகும். பல சுய இலக்கியப் படைப்புகளைக் கொண்டுள்ளன.

வட இந்தியாவில் இம்மொழிகள் சிறப்புமிக்க மொழிகளாகும். இம்மொழிகள் இந்தி மொழிக்கு முன்னோடி மொழிகளாகும். அதாவது, போஜ்புரி, மைதிலி போன்ற மொழிகள் இல்லாமல் இந்தி மொழி இல்லை என்பதே உண்மை. உண்மையில் இந்தி மொழி, உருது போன்ற மொழிகளுக்கு போஜ்புரி, மைதிலி போன்ற மொழிகளின் எழுத்துக்கள் இந்தி மொழி வடிவில் தொடர்பு மொழியாக உருவெடுத்துள்ளது. துளசிதாஸ், சூர்தாஸ், குருதாஸ் போன்றவர்களுடைய

பக்திப்பாடல்களும், அமிர் குஸ்ரு அவர்களின் சூஃபி பாடல்களும் இம்மொழியில் எழுதப்பட்டுள்ளன. இவைகள் இந்தி மொழியில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

உத்திரப்பிரதேசத்தின் மேற்குப் பகுதியில் கிருஷ்ண பரமாத்மாவின் மாமா கம்சா இருந்த பகுதியை பிராஜ்பூமி என்று தனி மாநிலமாக பிரிக்க வேண்டும் என்று ஒரு கோரிக்கை உள்ளது. அதைப்போல் பாரத்பூர், தவல்பூர் ஆகியவைகளைக் கொண்ட தெற்கு அரியானா, டெல்லி மதுரா சாலை இவற்றை உள்ளடக்கியதே பிராஜ் பூமியாகும்.

மாயாவதியினுடைய கட்சி பண்டல்கன்ட் மாநிலப்பிரிவை ஆதரிக்கிறது. தெற்கு உத்திரப்பிரதேசம் அதாவது ஜான்சி முதல் பாண்டா வரை அதையொட்டிய மத்தியப்பிரதேச பகுதிகள் அதாவது பண்டரி மொழி பேசும் பகுதியைக் கொண்டு தனி இந்தி மாநிலம் என்ற கோரிக்கையும் உள்ளது. இறுதியாக, உத்திரப்பிரதேச மாநிலத்தில் சட்டப்பேரவையில் அம்மாநிலத்தை நான்கு மாநிலங்களாக பிரிக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அனைத்து பிரிவுகளும் மொழியின் அடிப்படையில் என்பதை மறக்க இயலாது.

உத்தர்காண்ட் மாநிலம்

இந்தி பேசும் 3 மாநிலங்களை 6 மாநிலங்களாக பிரிக்க வேண்டும் என்று கோரிக்கை எழுந்துள்ளது. எப்படி ஆந்திர மாநிலம் இரண்டாகப் பிரிக்கப்பட்டதோ அதைப்போலவே மற்ற மாநிலங்களையும் பிரிக்க வேண்டுகின்றனர். எடுத்துக்காட்டாக, உத்தர்கான்ட் உத்திரப்பிரதேசத்தில் இருந்து பிரிக்கப்பட்டது. 2001ன் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 85 லட்சம் மக்கள் தொகையில் 40 லட்சம் மக்கள் கார்வாலி மொழி பேசுகின்றனர். இவர்கள் பெரும்பாலும் அம்மாநிலத்தின் மேற்குப் பகுதியில் உள்ளனர். 1998 புள்ளி விபரப்படி

24 லட்சம் மக்கள் குமானி மொழியை பேசுகின்றனர். இவர்கள் இம்மாநிலத்தின் கிழக்குப் பகுதியில் உள்ளனர். இதர மக்கள் பகாடி மொழிக் குடும்பத்தைச் சார்ந்த மொழிகளைப் பேசுகின்றனர். அவை ஒவ்வொன்றும் தனி மொழிகளாகும். எடுத்துக்காட்டாக, குமானி மொழி தனி எழுத்தைக் கொண்டுள்ளது. இது இரண்டாவது அலுவல் மொழியாக உள்ளது. இவர்களிடையே கல்வி அறிவு 58 விழுக்காடு உள்ளது. இவர்களது எழுத்து வடிவம் இந்தி மொழி அல்ல.

சத்திஸ்கர் மாநிலம்

2000 ம் ஆண்டில் சத்திஸ்கர் மாநிலம் உருவாக்கப்பட்டது. இம்மாநிலம் மத்தியப் பிரதேசத்தில் இருந்து பிரிக்கப்பட்டது. இதில் இந்திய ஆரிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்த சத்திஸ்கார்கி மொழி பேசப்படுகிறது. இம்மாநிலம் முழுவதும் இம்மொழி உள்ளது. இதன் மக்கள்தொகை 2 கோடி ஆகும். 1.15 கோடி மக்கள் சத்திஸ்கார்கி மொழியைப் பேசுகின்றனர். இந்தியுடன் இம்மொழி அலுவல் மொழியாக உள்ளது. இதை தனிமொழியாக மொழியாளர்கள் கூறுகின்றனர். இம்மொழி 8 வகை எழுத்து வடிவங்களைக் கொண்டுள்ளது. ஏனைய மக்கள் பழங்குடி மொழிகளைப் பேசுகின்றனர். இதில் சில மொழிகள் திராவிட மொழிகளாகும்.

அதாவது, தெலுங்கு, முண்டா போன்ற மொழிகளின் கலப் படம் உள்ளது. ஆக மொத்தம் 90 வகைப்பட்ட எழுத்துக்களைக் காணலாம். இந்த மாநிலம் பழங்குடி பாடல்களை மிகச் சிறப்பாகக் கொண்டுள்ளன. இதில் ஹபிப் தன்வீர் புகழ்பெற்ற பாடகராவார்.

ஜார்கண்ட் மாநிலம்

இம்மாநிலம் பல்வேறு பழங்குடிகளின் மொழிகளையும், ஆதிவாசிகளின் போராட்டங்களையும் கொண்டுள்ளது. ஜார்கன்ட் என்றால் காடுகளைக்

கொண்டது என்று பொருள். இம்மாநிலம் 2000த்தில் பீகாரிலிருந்துப் பிரிக்கப்பட்டது. இம்மாநிலத்தில் மலைசாதியினர் 28 விழுக்காடும், தாழ்த்தப்பட்டோர் 12 விழுக் காடும் உள்ளனர். இதில் எஸ்.டி. பிரிவினர் 32 விழுக்காடாகும். 1200ம் ஆண்டு முதல் மலைசாதியினர் தனக்கென்ற ஆட்சிக் கொண்டுள்ள வரலாறு இருந்துள்ளது. சாந்தாலி, முண்டா மலைசாதியினரின் ராஜாக்கள் உள்ளனர். 1765ம் ஆண்டு முதல் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியரால் இவர்கள் கட்டுப்படுத்தப் பட்டனர். 2.7 கோடி மக்களின் 70 விழுக்காட்டினர் ஜார்கன்டி மொழிக் குடும்பத்தைச் சார்ந்த மொழிகளைப் பேசுகின்றனர்.

அதாவது, சாந்தாரி, முண்டாரி, ஹோ போன்றவற்றுடன் திராவிடமொழிக் குடும்பத்தைச் சார்ந்த ஓரன், கோர்வா போன்ற மொழிகளும் அடங்கும். இதில் சாந்தாரி மொழி நவீன ஒல்சிக்கி எழுத்து வடிவத்தை தற்காலத்தில் பயன்படுத்துகிறது. அதைப்போல ஹோ மொழி வாரன்சிட்டி எழுத்து வடிவத்தைப் பயன்படுத்துகிறது. ஓரன் மொழியானது தோரன்சிக்கி எழுத்து வடிவத்தை தயாரித்துள்ளது. ஆனால் இது அதிக பயன்பாட்டில் இல்லை. இவர்களில் 10 விழுக்காடு மக்கள், வங்காளம் அருகில் இருப்பதால் வங்காள மொழி பேசுகின்றனர்.

எனவே, இந்தியாவில் பல்வேறு இனங்கள், மொழிகள், எழுத்து வடிவங்கள், பண்பாடுகள் இருக்கும்போது ஒரே மொழி தேசிய மொழி சமஸ்கிருதம் அல்லது இந்தி மொழி என்று கூறுவது எதிர்காலத்தில் தீராத தொல்லையைக் கொடுக்கும் என்பதே இந்திய மொழிகளின் வரலாறு காட்டும் உண்மையாகும்.

இந்தி மொழியும், பிற மொழிகளும்

இந்தியாவில் இந்தி பேசும் மாநிலங்கள் அனைத்தையும் இந்தி மாநிலங்கள் என்று கூறுவது உண்மைக்கு புறம்பாகும். அதாவது, தற்சமயம் உத்திரகாண்ட், ஜார்கண்ட், சட்டீஸ்கர் போன்ற மாநிலங்கள் பிரிக்கப்பட்டுள்ளன. அதே நேரத்தில்

ஒவ்வொரு மாநிலங்களும் தனித்தனியே மொழிகளையும், இலக்கியங்களையும் கொண்டுள்ளன. தனி எழுத்துக்களும் உள்ளன.

மைதிலி என்ற மொழி நான்கு கோடி மக்கள் பேசுகின்றனர். சாந்தலி என்ற மொழியை இந்திமொழி பேசும் மாநிலங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. அம்மொழிக்கு அரசியல் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் 2003ல் தனிமொழி அந்தஸ்து கொடுக்கப்பட்டுள்ளது. இன்னும் பிற மொழிகள் அந்த இடத்தைக் கோரி வரிசையில் உள்ளனர்.

போஜ்புரி என்ற மொழி வடக்கில் 15 கோடி மக்களால் அதாவது, உத்திரப்பிரதேசத்திலும், பீகாரிலும் பெரும்பாலும் பேசப்படுகின்றன. இம்மொழிக்கும் தனிமொழி அந்தஸ்து உள்ளது. முற்காலத்தில் உத்திரப்பிரதேசம் ஐக்கிய மாநிலங்கள் என்று கூறப்பட்டது. மத்தியப்பிரதேசம் மைய மாநிலங்கள் என்று கூறப்பட்டது. இதில் மாநிலங்கள் என்று கூறப்பட்டதன் பின்னணி என்னவென்றால் பலமொழிகள் உள்ளன என்பதை அறிவிக்கும் பண்மைதான் மாநிலங்கள் என்ற சொல் குறிக்கிறது. கிழக்கிந்திய ஆங்கில கம்பெனி இந்தியாவில் நுழைந்த பொழுது இன்று நாம் அறியும் இந்தி என்ற மொழி அப்பொழுது இல்லை. பீகாரை அக்காலத்தில் வடக்கு எல்லை மாநிலம் என்பர். அம்மாநிலத்தில் குறைந்தது நான்கு மொழிகள் பேசப்பட்டன.

அதாவது, இன்றைய இந்திமொழி தோன்றுவதற்கு முன்பு அப்பழைய மொழிகளில் சில எழுத்துக்களை கொண்டுள்ளன. அதுமட்டுமல்ல, அரசியல் அலுவல் அந்தஸ்தையும் பெற்றிருந்தன. அரியானாவில் 2.1 கோடி மக்கள் (2001) அதாவது 70 விழுக்காடு ஹரியான்வி என்ற மொழியை பேசினர். இது இரண்டாவது மொழியாக உள்ளது. இதில் 68 விழுக்காடு இந்தி மொழியினர் என்று கூறுவதில் உண்மையில்லை. இதில் 55 விழுக்காடு இந்தி

இல்லாத ஹரியான்வி பேசுவராவர்.

ராஜஸ்தானை ஐக்கிய மாநிலங்கள் என்று 1948ல் கூறினர். இதன் இன்றைய மக்கள்தொகை 5.64 கோடியாகும். இதில் 1.6 கோடி மக்கள் மார்வாரி மொழி பேசுகின்றனர். இது தனி எழுத்து வடிவம் கொண்டுள்ளது. மேவாரி என்ற மொழியை 52 இலட்சம் மக்கள் பேசுகின்றனர். பக்ரி என்ற மொழியை 20 இலட்சம் மக்கள் பேசுகின்றனர்.

மேலும், மேவாத்தி, செக்காவத்தி, ஹடோத்தி, துந்தரி இன்னும் பல மொழிகள் உள்ளன. இவைகள் தனித்தனி மாவட்ட அளவில் எல்லைகளைக் கொண்டு இம்மொழி பேசுவோர் உள்ளனர். பிராஜ் என்ற மொழி கிழக்கு இராஜஸ் தானிலும், கொண்டி, சவாரா, கோயா போன்ற மொழிகள் மலை வாசிகளால் பேசப்படுகின்றன. இமாச்சல் பிரதேசத்தில் பகாடி என்ற மொழிக் குழுவில் பல மொழிகள் உள்ளன. கன்னாரி என்ற மொழி ஒரு தனிப்பகுதியில் பேசப்படுகின்றது.

உத்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், பீகார், இமாச்சல், டெல்லி, ஹரியானா, இராஜஸ்தான் ஆகியவை இந்தி மாநிலங்கள் என்பர். இவற்றுடன் 2000த்தில் உத்திராஞ்சல் அதாவது உத்திரகாண்ட், ஜார்கண்ட், சட்டீஸ்கர் போன்ற மாநிலங்கள் புதிய பெயர்களைப் பெற்றுள்ளன. இம்மாநிலங்கள் அனைத்தையும் ஒன்றுகூட்டி கூறும்பொழுது 2001ல் அதன் மக்கள் தொகை 46 கோடி ஆகும்.

மேலும், 2001 மக்கள்தொகை கணக்குப்படி இந்திமொழியை தாய்மொழியாக கொண்டவர்களின் தொகை 42 கோடி ஆகும். அப்படியென்றால், மீதமுள்ள மக்களின் தாய்மொழி என்ன? எனவே, அனைத்து மாநிலங்களையும் இந்தி பேசும் மாநிலங்கள் என்று கூறுவது உண்மைக்குப் புறம்பாகும்.

அதாவது, அரசாங்க வெளியீட்டின்படி இந்தியாவில்

1652 தாய்மொழிகள் உள்ளன. இந்திய அரசியல் சாசனத்தின் 8வது அட்டவணையில் 22 மொழிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இதில் மேலும் சில மொழிகள் சேர்க்கப்பட உள்ளன. இதுகுறித்து மேலும் பல தகவல்கள் உள்ளன. அவற்றை தனியே ஒரு கட்டுரை மூலம் வெளிப்படுத்தலாம். ஆக, இந்தி மொழியை தேசியமொழி என்று அறிவிக்க தமிழ்மக்கள் ஒருபோதும் அனுமதிக்க வரலாற்று உண்மைகள் சான்றளிக்கவில்லை.

இராபர்ட் கால்டுவெலின் ஒப்பிலக்கணத்தால் விளைந்த திராவிட மொழி, அரசியல் தாக்கம்:

கால்டுவெலின் திராவிட இலக்கண ஒப்பாய்வு நூல் 1856ல் திராவிடம் என்ற சொல்லை தாங்கி வந்ததும், தென்னாட்டில் மிகப் பெரிய இயக்கங்களும், அரசியல் கட்சிகளும் தோன்ற காரணமாயிற்று.

1949ல் தோன்றி தி.மு.க., "திராவிட நாடு திராவிடற்கே", "அடைந்தால் திராவிட நாடு இல்லையே சுடுகாடு" என்ற முழக்கங்களை அதன் நிறுவனரான பேரறிஞர் அண்ணா முழக்கமிட்டார். பின்னர், பொட்டி ஸ்ரீராமுலு என்பவர் ஆந்திராவை மொழிவழி அடிப்படையில் தனி மாநிலமாக பிரிக்கக்கோரி உண்ணாநோன்பு இருந்து உயிர் நீத்தார். இதனால் 1953ல் ஆந்திரா பிரிந்தது. என்றாலும், 1956ல் இந்தியா மொழிவழி தேசிய அடிப்படையில் பல மாநிலங்களை இந்தியா முழுவதும் உருவாக்கிற்று.

இதன்பிறகு இந்தியாவில் மொழிப் பிரச்சனை பூதாகரமாக உருவெடுத்தது. இதற்கெல்லாம் அடிப்படை பல்வேறு தாய்மொழிகள் நின்று நிலவுவதே ஆகும்.

தீரா மொழிப் பிரச்சனையின் பல்வேறு பரிமாணங்களும், திரு.சி.சுப்பிரமணியம் அவர்களின் பங்களிப்பும்:

இது குறித்து இக்காலக் கட்டத்தில் அலசி ஆராய வேண்டியது முக்கியமாகும். கால்டுவெல் தொடுத்த

திராவிட மொழி ஆராய்ச்சியும் அதன் விளைவுகளும் இன்றளவும் அரசியல் வானில் ஒலிக்கின்றது.

இதுகுறித்து காலஞ்சென்ற சி.சுப்பிரமணியம் அவர்களது "என் வாழ்க்கை நினைவுகள் திருப்புமுனை" முதல் தொகுதி, அத்தியாயம் 32ல் மொழி குறித்த விவாதம் இங்கு நோக்கத்தக்கது.

ஹிந்தி மட்டுமே தேசிய மொழியாக இருக்க வேண்டும் என்று, 1917ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திலேயே மகாத்மா காந்தி திட்டவட்டமாக அறிவித்தார். ஹிந்தியும், உருதும் ஒன்றே என்பதும், மொழி நடையில் மட்டுமே அவை வேறுபடுகின்றன என்பதும் காந்திஜியின் கருத்து.

"ஹிந்தி மொழிக்கு தேசிய அந்தஸ்தும், மக்களின் வாழ்க்கையில் மாநில மொழிகளுக்கு உரிய இடமும் அளிக்கப்படாத வரையில் 'சுயராஜ்யம்' பற்றிய பேச்சு அனைத்தும் பயனற்றது" என்று 1918ஆம் ஆண்டில் ஹிந்தி சாகித்திய சம்மேளனத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் மகாத்மா காந்தி அறிவித்தார்.

காங்கிரசின் கொள்கை

1925ஆம் ஆண்டில் கான்பூர் மாநாட்டில் காங்கிரஸ் மகாசபையின் மொழிக் கொள்கை: "காங்கிரஸ் மகாசபையின் நடவடிக் கைகள் சாத்தியமான வரையில் ஹிந்துஸ்தானி மொழியில் நடத்தப்பட வேண்டும். பேசுபவர் ஹிந்துஸ்தானி மொழியில் நடத்தப்பட வேண்டும். பேசுபவர் ஹிந்துஸ்தானியில் பேச இயலவில்லை என்றாலும் அல்லது அவசியமான இதர சந்தர்ப்பங்களிலும், ஆங்கில மொழி அல்லது ஏதாவது ஒரு மாநில மொழி பயன்படுத்தப்படலாம்."

"மாநிலக் காங்கிரஸ் கமிட்டிகளின் நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட மாநில மொழியில் வழக்கமாக நடத்தப்படலாம். ஹிந்துஸ்தானி மொழியும் பயன்படுத்தப்படலாம்."

அப்போது, 'ஹிந்தி', 'ஹிந்துஸ்தானி' என்ற சொற்கள் ஒன்றுக்குப் பதிலாக மற்றொன்று பயன்படுத்தப்படக் கூடியவை என்று தவறாகக் கருதப்பட்டது.

மூன்று கருத்துக்கள்

கடைசியில் காங்கிரஸ் கட்சியில் மொழிப் பிரச்சினை சம்பந்தமாக மூன்று வகைக் கருத்துக்கள் உருவாயின.

அ. இந்திய யூனியனின் ஆட்சி மொழியாகவும், மற்றும் உயர்நீதிமன்றங்களின் மொழியாகவும் ஹிந்தி மொழியை உடனடியாக அமல் செய்ய வேண்டும் என்று வற்புறுத்திய ஹிந்தி ஆர்வலர்கள்;

ஆ. 1947ஆம் ஆண்டுக்கு முன்பாக இருந்த நிலையில் ஆங்கிலத்தை வைத்துக் கொள்ள வேண்டும் என்றும், ஹிந்தியை இரண்டாவது மொழியாக வைத்துக் கொள்ளலாம் என்றும், ஆனால் நாளாவட்டத்தில் ஹிந்தியை ஆட்சி மொழியாக ஏற்க வேண்டும் என்றும் வற்புறுத்திய உறுப்பினர்கள்.

இ. ஆங்கில மொழியின் பணிகளை மேற்கொள்ள ஹிந்தி மொழி தயாராகின்ற வரையில், இந்திய யூனியனின் ஆட்சி மொழியாக இருக்கும் ஆங்கிலத்திற்குப் பதிலாகப் படிப் படியாகத்தான் ஹிந்தி மொழியை உபயோகிக்க வேண்டும் என்று கூறியவர்கள்.

எண்களைக் குறிக்க அரபு இலக்கங்களை (அதாவது இன்று நாம் பயன்படுத்தி வரும் இலக்கங்களை) உடனடியாக ஏற்க வேண்டும் என்று தேசிய மொழிக் குழுவில் கே.சந்தானமும், டி.டி.கிருஷ்ண மாச்சாரியும் யோசனை தெரிவித்தார்கள். ஹிந்தி ஆதரவாளர்கள் அந்த யோசனையை மிகவும் பலமாக எதிர்த்தார்கள்.

ஹிந்தி மொழி பேசும் மக்கள் பெரும்பான்மையினராக இல்லாத மாநிலங்கள் (தமிழ்நாடு, ஆந்திரா, மேற்கு வங்கம் போன்றவை) தேவநாகரி எழுத்து வடிவுடன்

கூடிய ஹிந்தி மொழியை ஏற்க வேண்டும் என்று எதிர்பார்த்த ஹிந்தி ஆதரவாளர்கள் எண்களைக் குறிக்க அரபு இலக்கங்களை ஏற்றுக் கொள்ளக் கூடத் தயாராக இல்லை. உண்மையில் அரபு இலக்கங்கள் இந்தியாவில் தோன்றியவை என்று வலியுறுத்துகிறார் சுப்பிரமணியம்.

ஆட்சி மொழி பற்றிய விதி

இந்திய அரசியல் சாசனத்தில் 17ஆவது பகுதியில் ஆட்சி மொழி பற்றிய ஷரத்துக்கள் உள்ளன. 343ஆவது ஷரத்து கீழ்க் கண்டவாறு கூறுகிறது.

இந்திய யூனியனின் ஆட்சி மொழி:

1. இந்திய யூனியனின் ஆட்சிமொழி தேவநாகரி எழுத்து வடிவுடன் கூடிய ஹிந்தி மொழியாக இருக்க வேண்டும்.

   இந்திய யூனியனின் ஆட்சிப் பணிகளுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டிய எண்கள், இந்திய இலக்கங்களில் சர்வதேச வடிவில் இருக்க வேண்டும்.

2, மேற்குறிப்பிட்ட 1ஆவது உட்பிரிவில் கூறப்பட்டுள்ளது. எதுவாக இருந்த போதிலும், இந்திய அரசியல் சாசனம் அமலுக்கு வரும் தேதிக்கு உடனடி முன்னதாக இந்தியயூனியனின் என்னென்ன ஆட்சிப் பணிகளுக்கு ஆங்கிலம் உபயோகிக்கப்பட்டு வந்ததோ, அவை அனைத்துக்கும் அரசியல் சாசனம் அமலாகும் நாளிலிருந்து 15 ஆண்டுக் காலத்திற்கு ஆங்கிலம் தொடர்ந்து உபயோகிக்கப்பட வேண்டும்.

   இந்தப் (பதினைந்து) ஆண்டுக் காலத்திற்கு இடையே, இந்திய யூனியனின் ஏதாவது ஆட்சிப் பணிகளுக்காக, ஆங்கில மொழிக்குக் கூடுதலாக ஹிந்தி மொழியையும், இந்திய இலக்கங்களின்

சர்வதேச வடிவத்திற்குக் கூடுதலாகத் தேவநாகரி வடிவிலான இலக்கங்களையும் உபயோகிக்கக் குடியரசுத் தலைவர் ஆணையின் மூலம் அதிகாரம் வழங்கலாம் என்ற கட்டுப்பாட்டின் பேரில் இந்தப் பிரிவின் வாசகங்கள் அமைகின்றன.

3. இந்த ஷரத்தில் (343ஆவது ஷரத்தில்) கூறப்பட்டிருப்பது எதுவாக இருந்தபோதிலும், மேலே குறிப்பிட்டுள்ள 15 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு, ஆங்கில மொழி அல்லது தேவநாகரி வடிவிலான இலக்கங்கள் ஆகியவற்றைச் சட்டத்தில் குறிப்பிடப்படக்கூடிய பணிகளுக்காகப் பயன்படுத்த நாடாளுமன்றம் சட்டத்தில் மூலம் வகை செய்யலாம்."

இவ்வாறு 343ஆவது ஷரத்து கூறுகிறது.

நந்தாவின் முயற்சி

ஹிந்தி மொழி பேசாத மக்கள் ஆங்கிலம் எவ்வளவு காலத்திற்குத் தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்று விரும்புகிறார்களோ, அவ்வளவு காலத்திற்கு ஆங்கிலம் தொடர்ந்து உபயோகிக்கப்படும் என்று, நாடாளுமன்றத்தில் நேருஜி அறிவிப்பு வெளியிட்ட பிறகு, ஆட்சிமொழி சம்பந்தமான சர்ச்சை ஒருவாறு ஓய்ந்தது.

லால்பகதூர் சாஸ்திரி பிரதமர் ஆனபோது, குல்ஜாரிலால் நந்தா உள்துறை அமைச்சராகத் தொடர்ந்து பதவி வகித்தார். அவர் ஹிந்தி மொழியின் தீவிர ஆதரவாளர். லால் பகதூர் சாஸ்திரியின் தலைமையின் கீழ் மத்திய நிர்வாகத்தில் ஹிந்தியின் உபயோகத்தை வேகமாகவும், விரிவான அளவிலும் புகுத்துவது சாத்தியமாக இருக்க வேண்டும் என்று குல்ஜாரிலால் நந்தா கருதினார்.

ஆங்கிலத்தை விலக்கிவிட்டு ஹிந்தியை மட்டும் பயன்படுத்துமாறு பல துறைகளுக்கு ஏராளமான சுற்றறிக்கைகள் அனுப்பப் பட்டன. இது தமிழ் நாட்டில்

பெரும் கிளர்ச்சியைத் தூண்டிவிட்டது.

திரு. சி.சுப்பிரமணியனும், ஓ.வி. அழகேசனும் ராஜினாமா செய்தார்கள்

"அப்போது நான் டில்லியில் மத்திய அமைச்சராக இருந்தேன். தமிழ்நாட்டு நிலைமை குறித்து அறிந்ததும், மற்றொரு மத்திய அமைச்சரான ஓ.வி. அழகேசனுடன் நான் விவாதித்தேன். மத்திய அரசு பின்பற்றிய ஹிந்திக் கொள்கையை ஆட்சேபித்து எங்களது அமைச்சர் பதவிகளை ராஜினாமா செய்வது என்று நானும், அழகேசனும் முடிவு செய்தோம். எங்களது ராஜினாமா செய்தி வானொலியில் ஒலிபரப்பப்பட்டது. தமிழ் நாட்டில் அதற்குத் தத்ரூபமான விளைவு ஏற்பட்டது. கிளர்ச்சியின் தீவிரம் குறைந்தது."

"நாங்கள் அதை ஒப்புக்கொண்டோம். ஆனால் குல்ஜாரிலால் நந்தாவின் ஹிந்திக் கொள்கை பின்பற்றப்படாது என்ற ஓர் உறுதிமொழியை நாங்கள் விரும்பினோம். இந்த விஷயம் மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் பூர்வாங்கமாக விவாதிக்கப்பட்டது. மத்திய ஆட்சிப் பணிகளில் ஆங்கிலத்தை அகற்ற மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுக்கக் கூடாது என்று அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது."

"இறுதியாக, அமைச்சரவையின் ஆலோசனையைக் குடியரசுத் தலைவர் ஏற்றுக்கொண்டு செயல்படத்தான் வேண்டும். எனினும், நாட்டின் நலனைக் கருதி, பிரதமர் மற்றும் மத்திய அமைச்சரவை யின் முடிவுகளின்மீது குடியரசுத் தலைவர் எப்போதும் செல்வாக்குச் செலுத்த முடியும்."

போதனா மொழி

மொழிப் பிரச்சினை நாட்டைத் தொடர்ந்து பாழாக்கிக் குழப்பிக் கொண்டிருக்கிறது. மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஒவ்வொரு மாநிலமும் இயல்பாகவே நிர்வாகப் பணிகளுக்கு அந்த

மாநில மொழியையே உபயோகப்படுத்த ஆரம்பித்து விட்டது. பள்ளிகளிலும் மாநில மொழியின் படிப்புக்கு முக்கியத்துவம் அளிக்க ஒவ்வொரு மாநிலமும் நடவடிக்கை எடுத்து வருகிறது. சில வட இந்திய மாநிலங்களில் கல்லூரி மட்டத்திலும் ஹிந்தி மொழி போதனா மொழியாக ஆக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் பல மொழிகள் உள்ளன என்பது மட்டுமின்றி, ஒவ்வொரு மொழிக்கும் தனித்தனியான எழுத்து வடிவமும் இருக்கிறது.

அவர் கண்ட நேரடி அனுபவம்

"ஒருமுறை முதலமைச்சர் ராமகிருஷ்ண ஹெக்டேவைச் சந்திப்பதற்காக நான் பெங்களூரில் உள்ள மாநில அரசுத் தலைமைச் செயலகத்திற்குச் சென்றேன். அங்கே எனக்கு ஒரு விசித்திரமான அனுபவம் ஏற்பட்டது. அந்தத் தலைமைச் செயலகத்தில் எல்லாப் பெயர்ப் பலகைகளும் கன்னட மொழி எழுத்துகளில் இருந்தன. தமிழ்நாட்டுக்கு அண்டையில் உள்ள ஒரு மாநிலத்தில் நான் முற்றிலும் ஓர் அந்நியன் ஆகிவிட்டேன். முதலமைச்சரின் அறையைக் கண்டுபிடிக்கக் கடைநிலை ஊழியர் ஒருவரின் உதவியை என்னுடன் வந்தவர் நாடவேண்டியதாயிற்று."

"ராமகிருஷ்ண ஹெக்டேவைச் சந்தித்தபோது, நான் இதுபற்றி அவரிடம் குறிப்பிட்டேன். கர்நாடகத்தைச் சேர்ந்த மக்கள் மட்டுமின்றி, இதர மாநிலங்களைச் சேர்ந்த மக்களும், வெளிநாட்டவரும் கூட அவரைப் பார்க்க வருவார்கள் என்றும், பெயர்ப் பலகைகள் கன்னட எழுத்துக்களில் இருப்பதால் அவர்கள் திண்டாடுவார்கள் என்றும் அவரிடம் எடுத்துக்காட்டினேன்."

தேசம் உடைந்துவிடும்

"கல்கத்தா நகரில் மேற்கு வங்காள முதலமைச்சரைச் சந்திக்க நான் ஒருமுறை சென்ற போதும் இதேபோன்ற அனுபவம் ஏற்பட்டது. மாநில மொழியை

வெறித்தனமாகப் பயன்படுத்துவதால், ஒவ்வொரு மாநிலமும் தனிமைப்படுவது பற்றி மேற்குவங்க முதலமைச்சர் ஜோதிபாசுவிடம் கூறினேன்."

"ஒரே மாநிலத்தைச் சேர்ந்தவர் மற்றொரு மாநிலத்திற்குச் சென்றால், தெருக்களையும், வட்டாரப் பிரிவுகளையும், கட்டடங்களையும் கண்டுபிடிக்க முடியாமல் திண்டாட நேரிடுகிறது."

தென்மாநில முதல்வர்கள் தீர்மானம்

"தென் மாநிலங்களின் முதலமைச்சர்கள் நிறைவேற்றிய தீர்மானத்தை நாம் ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். துருதிர்ஷ்ட வசமாகவோ அல்லது அதிர்ஷ்டவசமாகவோ அவர்கள் (தென் மாநிலங்களின் முதலமைச்சர்கள்) ஜனதா கட்சியைச் சேர்ந்தவர்கள் இல்லை. ஆனாலும் (தமிழ்நாட்டில்) எம்.ஜி.ராமச்சந்திரனுக்குப் பதிலாக பி.ராமச்சந்திரன் முதலமைச்சராக இருந்திருந்தாலும் கூட, தென் மாநிலங்களின் முதல்வர்கள் மேற்கொண்டுள்ள நிலையிலிருந்து வேறுபட்ட ஒரு நிலையை பி.ராமச்சந்திரன் எடுத்திருக்க முடியாது.

எனவே, தென் மாநிலங்களின் முதலமைச்சர்கள் நிறைவேற்றியுள்ள தீர்மானம் சம்பந்தமாகப் பேசுகையில், அவர்களுக்கு அரசியல் நோக்கம் இருப்பதாக நாம் கற்பிக்க முயல வேண்டாம்.

"(தென் மாநிலங்களின் முதலமைச்சர்கள் நிறைவேற்றிய) இந்தத் தீர்மானத்திற்கு ஒரு பின்னணி ஒரு வரலாறுஇருக்கிறது. இந்தப் பின்னணியை நாம் புரிந்து கொண்டாலொழிய, இந்தத் தீர்மானத்திற்கான நோக்கத்தை நாம் தவறாகக் கருதிவிடக் கூடும்; குறிப்பாக ராஜ்நாராயணன் போன்றவர்கள் இந்தத் தீர்மானம் ஏதோ அரசியல் பகட்டு விளம்பரம் அல்லது அதைப் போன்ற வேறு ஏதோ ஒன்று என்று கருதிவிடக்கூடும். இந்தத் தீர்மானம் அத்தகையது அல்ல.

சமரச முடிவு

"அரசியல் நிர்ணயசபை உறுப்பினராக இருந்த பேறு எனக்குக் கிடைத்திருக்கிறது. இந்தச் சபையில் உள்ள பல சிறப்புமிக்க உறுப்பினர்கள் என்னுடன் அரசியல் நிர்ணய சபையில் உறுப்பினர்களாக இருந்தவர்கள். அரசியல் நிர்ணய சபை விவாதித்த மிகவும் சர்ச்சைக்கு இடமான விஷயங்களில் மொழிப் பிரச்சி னையும் ஒன்று.

"அரசியல் நிர்ணய சபையில் மட்டுமின்றி, சபைக்கு வெளியேயும் காங்கிரஸ் கட்சியின் கூட்டங்களில் இது விவாதிக்கப்பட்டது. இந்த விஷயத்தில் காங்கிரஸ் கட்சியில் ஒற்றுமை நிலவியது என்று சொல்ல முடியாது. இந்த விஷயம் சம்பந்தமான அணுகுமுறை குறித்துக் காங்கிரஸ் கட்சியில் கடுமையான கருத்து மாறுபாடுகள் இருந்தன. இறுதியில் ஒரு சமரச முடிவு எடுக்கப்பட்டது. ஏகமனதான முடிவாக இல்லாமல் ஒரு சமரச முடிவுக்குத்தான் வரமுடிந்தது. அந்தச் சமரச முடிவுதான் இப்போது அரசியல் சாசனத்தில் 17ஆவது பகுதியில் இடம் பெற்றிருக்கிறது."

சம அந்தஸ்து

"பல மொழிகள் பேசப்படும் ஒரு நாட்டின் பிரச்சினைகளை நாம் சமாளிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்தியாவில் பல மொழிகள் தொடர்ந்து நீடித்துக் கொண்டுதான் இருக்கும்.

சமீபகாலத்தில், இந்த நிலையில் எத்தகைய மாறுதலும் ஏற்படும் என்று நான் கருதவில்லை. இரண்டு, மூன்று அல்லது நான்கு மொழிகள் மட்டும் சம்பந்தப்பட்ட பிரச்சினையாக இது இல்லை; பன்னிரண்டுக்கு மேற்பட்ட மொழிகள் முக்கியமான மொழிகள் நம்மிடையே உள்ளன. அவற்றில் ஒவ்வொரு மொழியும் தனது பிராந்தியத்தில் முக்கியமானது;

ஒவ்வொரு மொழியும் சிறந்த வரலாறு கொண்டுள்ளது; ஒவ்வொன்றுக்கும் சிறந்த கலாச்சாரம் இருக்கிறது; ஒவ்வொரு மொழிக்கும் செழுமையான இலக்கியம் உள்ளது. எனவே, ஆட்சி மொழி சம்பந்தமாகவும், இதர மொழிகளின் அந்தஸ்து குறித்தும் நாம் நடைமுறை சாத்தியமான ஒரு முடிவை எடுக்க வேண்டும்.

"எல்லா இந்திய மொழிகளும் தேசிய மொழிகள் என்பது முதலாவதாக எடுக்கப்பட்ட முடிவு. அரசியல் சாசனத்தில் எட்டாவது அட்டவணையில் மிக முக்கியமான மொழிகள் அகர வரிசையில் பட்டியலிடப்பட்டுள்ளன. பிறகு, வேறு சில மொழிகளும் சேர்க்கப்பட்டன.

"அந்த மொழிகள் அகர வரிசைப்படி பட்டியலில் தரப்பட்டுள்ளன. எந்த மொழியும், இதர எந்த மொழியையும்விட எந்த விதத்திலும் உயர்வானது இல்லை. பிரதான தேசிய மொழிகள் என்ற சம அந்தஸ்து அவற்றுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

ஆட்சி மொழி

"இந்திய யூனியனின் ஆட்சி மொழியாக எது இருக்க வேண்டும் என்ற கேள்வி அடுத்தபடியாக எழுந்தது. மாநிலங்களுக்கான ஆட்சிமொழிகள் பற்றி முடிவு செய்வது சுலபமாக இருந்தது. ஏனென்றால் ஒவ்வொரு மாநிலத்திற்கும் சொந்தமாக ஒரு மொழி இருக்கிறது. குறிப்பாக மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்பட்டதற்கு முன்பாகச் சில பிரச்சினைகள் இருந்தன என்ற போதிலும் மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்பட்ட பிறகு இது சுலபமான விஷயமாகிவிட்டது.

"இந்திய யூனியனின் ஆட்சி மொழியாக எது இருக்க வேண்டும் என்று முடிவு செய்ய வேண்டியிருந்தது. இந்திய யூனியனின் ஆட்சி மொழியாக ஹிந்தி மொழி இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு நாங்கள் வந்தோம்; அரசியல் நிர்ணய சபை அதை ஒப்புக்கொண்டது; அது இப்போது அரசியல் சாசனத்தில் இடம் பெற்றிருக்கிறது.

"அரசியல் சாசனத்திலிருந்து இந்த ஷரத்தை நீக்கிவிட வேண்டும் என்று எந்த முதலமைச்சரும் அல்லது இங்குள்ள எவரும் இப்போது வாதாடுவதாக நான் கருதவில்லை. எப்படியும், இந்த ஷரத்தை நீக்கிவிட வேண்டும் என்பது அன்று எனது நிலை. எவரும் அத்தகைய நிலையை மேற்கொண்டதாக, எம்.ஜி. ராமச்சந்திரன் உள்ளிட்ட எந்த முதலமைச்சரும் அத்தகைய நிலையை வற்புறுத்துவதாக, நான் கருதவில்லை.

மற்றொரு முடிவு

இதுதான் நமக்கு ஏற்பட்ட பிரச்சினை. எனவே அரசியல் சாசனம் அமலுக்கு வந்ததற்கு முன்பாக எந்தெந்த ஆட்சிப் பணி களுக்கு ஆங்கிலம் பயன்படுத்தப்பட்டதோ, அந்தந்தப் பணிகளுக்கு அது தொடர்ந்து அடுத்த 15 ஆண்டுகளுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும் என்று மற்றொரு சமரச முடிவு எடுக்கப்பட்டது.

அதற்குப் பிறகு (15 ஆண்டுகளுக்குப் பிறகு) என்ன நேரிடும்? அப்படியே விட்டிருந்தால், 15 ஆண்டுகளுக்குப் பிறகு ஹிந்தி தானாகவே ஆட்சிமொழி ஆகியிருக்கும். ஆங்கிலம் மறைந்து போயிருக்கும். ஆனால் அரசியல் சாசனத்தை உருவாக்கியவர்கள் அது சாத்தியம் என்று கருதவில்லை. எனவே அவர்கள் ஒரு படி மேலே சென்று, 15 ஆண்டுகளுக்குப் பிறகும் ஆங்கில மொழியின் உபயோகத்திற்காக நாடாளுமன்றம் சட்டம் இயற்றலாம் என்று, அரசியல் சாசனத்தின் அதே ஷரத்தில் வகை செய்தார்கள். ஆக, இதர காரணங்கள் இருந்தன. எனவேதான் இக்கட்டு ஏற்படாமல் இருப்பதற்கு வகை செய்யும் ஒரு உட்பிரிவு சேர்க்கப்பட்டது.

முதலாவது கமிஷன்

அரசியல் நிர்ணய சபை அரசியல் சாசனத்தை உருவாக்கிய போது இந்த அம்சங்களைக் கருத்தில் கொண்டது; மொழிகள் சம்பந்தமாக இந்த ஷரத்துக்களையும் வகுத்தது.

முதலாவது மொழிக் கமிஷன் நியமிக்கப்பட்டு, அது தனது பரிந்துரைகளை வெளியிட்டது. அடுத்த விசேஷ சம்பவம். குவாஹத்தி காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் முதலாவது மொழிக் கமிஷனின் அறிக்கை குறித்து நடந்த விவாதத்தை மதிப்புக்குரிய பிரதமர் அறிந்துள்ளார் என்பது நிச்சயம். (1978ல் மொரார்ஜி தேசாய் பிரதமராக இருந்தார்)

குறைந்தபட்சம் சில துறைகளிலேனும் ஆங்கிலத்தின் உபயோகத்தைக் கட்டுப்படுத்த நேரம் வந்துவிட்டது என்று முதலாவது மொழிக் கமிஷன் பரிந்துரை செய்திருந்தது. முதலாவது மொழிக் கமிஷன் தன் பரிந்துரையைக் காங்கிரஸ் மகாசபை ஏற்றுக் கொள்ளுமாறு செய்ய முயற்சி நடந்தது.

அவ்வாறு நடக்கக் கூடாது என்று குவாஹத்தி காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் ஹிந்தி பேசாத மக்களின் சார்பில் நான் பேசியதை மதிப்பிற்குரிய பிரதமர் அவர்கள் கவனத்தில் கொண்டிருப்பார் என்று நிச்சயமாகக் கருதுகிறேன்.

குவாஹத்தி கூட்டம்

ஆட்சி மொழிப் பணிகளுக்காக ஆங்கிலம் ஏற்கெனவே இருந்து வந்துள்ள நிலையில் தொடர்ந்து இருக்க வேண்டும் என்றும், அதில் எந்தவிதமான கட்டுப்பாடும் இருக்கக் கூடாது என்றும் (குவாஹத்தி கூட்டத்தில்) நான் திட்டவட்டமாகக் கூறினேன். அப்போது மேடையில் எனக்குப் பின்னால் வீற்றிருந்த (இன்றைய பிரதமரான) மொரார்ஜி தேசாய்தான் 'எவ்வளவு காலத்திற்கு ஆங்கிலம் ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டும்?' என்று என்னைக் கேட்டார்.

ஆங்கிலம் எவ்வளவு காலத்திற்குத் தேவைப்படுகிறதோ அவ்வளவு காலத்திற்கு அது நீடிக்க வேண்டும் என்று அப்போது நான் பதிலளித்தேன். ஆங்கிலம் எவ்வளவு காலத்திற்கு அவசியமாக இருக்கும் என்பதை ஹிந்தி

பேசும் மக்கள் முடிவு செய்யக் கூடாது என்றும், ஹிந்தி பேசாத மக்களே அதை முடிவு செய்ய வேண்டும் என்றும் அப்போது நான் குறிப்பிட்டேன்.

ஹிந்தி பேசாத மக்களின் கருத்து, காங்கிரஸ் மேடையில் இவ்வாறுதான் வெளியிடப்பட்டது. அதிர்டவசமாக, அன்றைய பிரதமர் நேருஜியும், இதர பல அரசியல் அறிஞர்களும் இந்தக் கருத்தை ஒப்புக் கொண்டார்கள். பின்னர் பிரதமர் இந்த வாக்குறுதியைப் பல அரங்குகளிலும் வெளியிட்டார்.

"ஆங்கிலத்தின் உபயோகம் கட்டுப்படுத்தப்பட்டால், அது ஹிந்தி மொழி பேசாத மக்களுக்கு சிரமங்களை உண்டாக்கும் என்ற பிரச்சினை அப்போதே எழுந்தது. அந்த அடிப்படையில் தான் ஒரு முடிவு எடுக்கப்பட்டது. அது தொடர்பாகத்தான் நேருஜி பல இடங்களில் உறுதி மொழியை அளித்தார். முதலாவது உறுதிமொழி சென்னையில் ஒரு கூட்டத்தில் தரப்பட்டது. அது இயற்கையே. ஏனென்றால் உணர்ச்சிக் கொந்தளிப்பில் மிகவும் ஈடுபட்டிருந்த இடம் அதுதான்.

போதனா மொழி

"போதனா மொழி சம்பந்தமாகச் சில கருத்துக்கள் கூறப்பட்டன. போதனா மொழியைப் பொறுத்த வரையில் சர்ச்சை எதுவும் இல்லை. நான் தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட பத்தாண்டுகள் கல்வியமைச்சராக இருந்திருக்கிறேன். போதனா மொழி சம்பந்தமாக எந்தவிதமான சர்ச்சையும் எழவில்லை.

"போதனா மொழி விவகாரத்தைக் கொண்டு வருவதன் மூலம், இந்தப் பிரச்சினையைத் தயவுசெய்து குழப்ப முயலாதீர்கள். உண்மையில், (மாநில அளவில்) தமிழை ஆட்சி மொழியாக ஆக்குவதற்கு முதலாவது நடவடிக்கை எடுத்தது தமிழ்நாடு அரசுதான். அதுதான் தமிழைப் போதனா மொழியாகவும் ஆக்கியது. எனவே, அதைப் குறிப்பிடுவதன் மூலம் நாம் குழப்பம்

அடையாமல் இருப்போமாக. நேருஜி பேசியதை நான் மீண்டும் எடுத்துக் காட்டுகிறேன்.

விட்டுக்கொடுத்து வாழவேண்டும்

“ஏராளமான மக்கள் செய்ய விரும்பாத ஒன்றைச் செய்யுமாறு அவர்களை நாம் கட்டாயப்படுத்த முடியாது. இந்தப் பிரச்சினை சிரமமானது என்ற போதிலும், இது படிப்படியாகத் தீர்க்கப்படும் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை.

“இந்தியாவின் ஒரு பகுதியில் வாழ்கின்ற மக்களை மற்றொரு பகுதியில் வாழ்கின்ற மக்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, அவர்களுக்கு எந்தவிதமான ஏலா நிலையும் ஏற்படுத்திவிடுகின்ற எந்த முடிவையும் எடுக்கக் கூடாது என்பது முக்கியம்.

ஹிந்தி மொழியைப் பொறுத்தவரையில், அது தங்களுக்கு அரசாங்கப் பணிகளிலும், இதர வகைகளிலும் ஏலா நிலையை உண்டாக்கக்கூடும் என்று ஹிந்தி பேசாத மக்கள் கருதுவது மிகவும் இயற்கையே. தமது அச்சங்களை அவர்கள் வெளியிடுவது நியாயமே.

எனவே, உண்மையில் எந்தவிதமான கட்டாயமும் இருக்க முடியாது என்பதைக் கருத்தில் கொண்டு இந்த விவகாரத்தைப் பரிசீலிக்க வேண்டும். நமது முடிவு எதுவாக இருந்த போதிலும், பொது இசைவின் மூலமாக அது ஏற்பட வேண்டும். அது நீக்குப் போக்கான தன்மை கொண்டதாகவும் இருக்க வேண்டும்.

இவ்வாறு நேருஜி தமது உரையில் கூறியிருக்கிறார். குவா ஹத்தி காங்கிரஸ் கூட்டத்திற்குப் பிறகு நேருஜியின் முதலாவது உரை இது. சென்னையில் தமிழ்க் கலைக் களஞ்சியத்தின் ஐந்தாவது தொகுதியை அவர் வெளியிட்ட போது இந்த உரையை நிகழ்த்தினார்.

ஆனால், இது தொடர்பாக, வாக்குறுதி தரவேண்டிய நிலை ஏற்பட்டது. நேருஜி மிகவும் திட்டவட்டமாக

வாக்குறுதி வழங்கினால் நேருஜி சொற்பொழிவுகளின் நான்காவது தொகுதியில் உள்ள சொற்பொழிவிலேயே இந்த வாக்குறுதி இடம் பெற்றிருக்கிறது.

முதலாவது வாக்குறுதி

ஆட்சிப் பணிகளுக்காகப் பயன்படுத்தக் கூடிய கூடுதலான இணைமொழியாக ஆங்கிலத்தை எவ்வளவு காலத்திற்கு நான் வைத்துக் கொள்வேன் என்று எனக்குத் தெரியாது.

முக்கியமாக தற்போதைய வசதிகளின் காரணமாக நான் அதை (ஆங்கிலத்தை) வைத்துக் கொள்ளமாட்டேன். ஆனால் ஹிந்தி மொழியில் கடிதப் போக்குவரத்தை நடத்துமாறு கட்டாயப்படுத்தப்படுவதன் மூலம் தங்களுக்குச் சில பயன்கள் மறுக்கப்படுகின்றன என்று, ஹிந்தி பேசாத மக்கள் கருதுவதை நான் விரும்பமாட்டேன் என்ற காரணத்திற்காகத்தான் நான் ஆங்கிலத்தை வைத்துக் கொள்வேன்.

அவர்கள் (ஹிந்தி பேசாத மக்கள்) ஆங்கில மொழியில் கடிதப் போக்குவரத்து நடத்திக் கொள்ளலாம். ஆங்கிலம் ஒரு மாற்று மொழியாக மக்களுக்குத் தேவைப்படுகின்ற வரையில், நான் அதை அவ்வாறே வைத்துக் கொள்வேன். (ஆங்கிலம் எவ்வளவு காலத்திற்குத் தேவைப்படும் என்ற) முடிவை எடுக்கும் விஷயத்தை ஹிந்தி பேசும் மக்களிடம் நான் விடமாட்டேன்; ஹிந்தி பேசாத மக்களிடம்தான் அதை நான் விடுவேன்."

இவ்வாறு நேருஜி தமது உரையில் கூறினார். இது இந்தச் சபையில் பிரதமர் நேருஜி அளித்த முதலாவது திட்டவட்டமான வாக்குறுதி.

தடை நீங்கியது

பிறகு, வருங்காலம் பற்றிய பிரச்சினை எழுந்தது. (அரசியல் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள) இந்தப் பதினைந்து ஆண்டுகள் முடிந்த பிறகு நிலைமை என்னவாக இருக்கும்?

பதினைந்து ஆண்டுகள் வரையில் ஆங்கிலம் எந்தெந்தப் பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வந்ததோ, அந்தப் பணிகள் அனைத்துக்கும் பதினைந்து ஆண்டுகள் முடிந்த பிறகும், ஆங்கிலத்தைத் தொடர்ந்து பயன்படுத்தலாம் என்று வகை செய்த ஆட்சி மொழிச் சட்டம் ஒன்றை 1963ஆம் ஆண்டில் நிறைவேற்ற வேண்டியிருந்தது. 1963ஆம் ஆண்டுச் சட்டத்தின் இன்றியமையாத அம்சம் இதுதான்.

எனவே, ஆங்கிலத்தைப் பயன்படுத்துவது சம்பந்தமாக அரசியல் சாசனத்தில் இடையூறாக இருந்த ஒரு தடையை நாடாளுமன்றத்தின் ஒரு சட்டத்தின் மூலம் இந்தச் சபை நீக்கியது.

அப்போதுகூட அச்சங்கள் எழுப்பப்பட்டன. அப்போதைய பிரதமர் அளித்த வாக்குறுதி, பிற்காலத்தில் கௌரவிக்கப்பட்டுப் பேணப்படுமா? உணர்ச்சி ஆர்வம் மிகுந்த ஒருவர் ஹிந்தியைப் புகுத்த முடிவு செய்தால் என்ன நிலைமை ஏற்படும்? இந்தக் கேள்விகள் எழுப்பப்பட்டன. நேருஜி திட்டவட்டமான வாக்குறுதியை அளித்தார். ஆனால் இதைச் (இந்த வாக்குறிதியை) சட்டத்திலேயே சேர்ப்பது தவறாகும் என்று அவர் கூறினார். அதனை அரசாங் கத்தின் நல்லுணர்வுக்கு விட்டு விடுவது நல்லது என்று அவர் கருதினார்.

மீண்டும் தீர்வு

ஆனால், 1965ஆம் ஆண்டில் லால் பகதூர் சாஸ்திரி பிரதமராக வந்தபோது மிதமிஞ்சிய உணர்ச்சியார்வம் கொண்ட ஓர் உள்துறை அமைச்சர் இருந்தார். அவர் ஹிந்தி மொழியின் அமலை கட்டாயப்படுத்த முயன்றார். அதைத் தொடர்ந்துதான், தமிழ்நாட்டில் ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிகள் வெடித்தன. அந்த நேரத்தில்தான் மத்திய அமைச்சரவையிலிருந்து நானும், எனது சகா அழகேசனும் ராஜினாமா செய்ய நேர்ந்தது.

மும்மொழித் திட்டம்

பிறகு இது குறித்துப் பரிசீலிக்க நமக்குச் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. குறிப்பாக 1967ஆம் ஆண்டில் 1963ஆம் வருடத்திய மொழிச்சட்டத்திற்கு ஒரு திருத்தம் பரிசீலிக்கப்பட்டது. ஹிந்தியின் உபயோகத்தை மேன்மேலும் வளர்ப்பதற்காக அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் அதே நேரத்தில், மும்மொழித் திட்டம் எல்லா மாநிலங்களிலும் உறுதியாகப் பின்பற்றப்பட வேண்டும் என்றும் விதிமுறை செய்யப்பட்டது.

துரதிர்ஷ்டவசமாக, தமிழ்நாடு அரசு தமிழும், ஆங்கிலமும் மட்டும் என்ற இருமொழித் திட்டத்தைப் பின்பற்றுகிறது என்பதில் சந்தேகம் இல்லை. அது ஒருபுறம் இருக்கட்டும். இதர ஹிந்தி மாநிலங்கள் மும்மொழித் திட்டத்தை முழுக்க முழுக்கப் பின்பற்றியிருக்கின்றனவா? நான் இதை உங்களிடம் கேட்கிறேன்.

மூன்றாவது மொழி நவீன இந்திய மொழிகளில் ஒன்றாக, குறிப்பாகத் தென்னிந்திய மொழிகளில் ஒன்றாக இருக்க வேண்டும் என்று திருத்தத் தீர்மானம் தெளிவாகக் கூறுகிறது.

சி. சுப்பிரமணியன் அவர்களின் அறிவார்ந்த வினா?

மத்திய அரசுப் பணிகளில் வேலைகளுக்குப் புதிதாக ஆட்களைச் சேர்க்கும் நிலையில் ஹிந்தி தெரிந்திருக்க வேண்டும் என்று வற்புறுத்தப்படுவது இல்லை என்று, வாக்கு வன்மையுடன் சரளமாகக் கூறப்படுகிறது. அது பற்றி நான் எதிர் வாதங்களைக் கூற விரும்புகிறேன்.

ஒரே ஆட்சி மொழியாக ஹிந்தி மட்டும் ஆகின்ற கட்டம் வந்துவிடுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள் (அந்தக் கட்டத்தை விரைவில் அடைய வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள்). அந்த நிலையில் ஹிந்தி பேசாத ஓர் இளைஞன் வேலை கிடைத்த பிறகு

மத்திய தலைமைச் செயலகத்திற்குள் நுழைகிறார். அவர் என்ன காண்பார்? பெயர்ப்பலகையில் ஹிந்தி எழுதப்பட்டிருக்கும். அவருக்கு ஹிந்தி தெரியாது.

அவருக்கு ஹிந்தி தெரிந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கூறியிருக்கிறீர்கள். ஆனால் அலுவலகத்தில் உட்கார்ந்துள்ள அனைவரும் கோப்புகளில் ஹிந்தி மொழியில் எழுதுவார்கள். அந்த ஹிந்தி பேசாத இளைஞர் எங்கிருந்து பயிற்சி பெறுவார்? கண்களைக் கட்டிக் காட்டில் விடப்பட்ட நிலையில் அவர் (அந்த அலுவலகத்தில்) இருப்பார்.

எனவே, (ஆங்கிலம், ஹிந்தி என்ற) இரண்டு மொழித் திட்டம் அங்கு அமலில் இருந்தாலொழிய, புதிதாக வேலைக்குச் சேருகின்ற ஒருவர் ஹிந்தி மொழியைப் படித்தவராக இல்லை என்றால், அவரால் வழக்கமான வேலைகளைச் செய்யவே முடியாது. ஹிந்தி மட்டும் ஆட்சி மொழியாக இருந்தால், புதிதாக வேலையில் சேருகின்ற வருக்கு ஹிந்தி தெரிந்திருப்பது முற்றிலும் அவசியமாக இருக்கும்.

ஆகவே, வேலைக்குச் சேருகின்ற ஆரம்பக் கட்டத்தில் ஹிந்தி தெரிந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கூறுவது அர்த்தமற்றது. ஏனென்றால் அவர் அங்கு என்னவாக இருப்பார்? அவர் அங்கு (வேலைக்குச்) செல்கிறார். அங்கு உபயோகிக்கப் படுகின்ற மொழி அவர் அறிந்ததாக இருக்க வேண்டும். துரதிர்ஷ்டவசமாக, அது ஆங்கில மொழியாகத்தான் இருக்கும். மேலும் சுப்பிரமணியம் அவர்கள் கூறுவது:

எழுத்து வடிவம்

கூடுதலாக, எழுத்து வடிவம் பற்றியும் ஒரு பிரச்சினை இருக்கிறது. பொது எழுத்து வடிவம் ஒன்று இருக்க வேண்டும். எல்லா மொழிகளுக்கும் பொது எழுத்து வடிவம் இருந்தால், மொழிகளைப் படிப்பது மிகவும் சுலபமாகிவிடும். பொது எழுத்து வடிவம்

எதுவாக இருக்க வேண்டும் என்பது நன்கு விரிவாக விவாதிக்கப்பட வேண்டிய ஒரு விஷயம். எல்லா இந்திய மொழிகளுக்கும் தேநாகரி எழுத்து வடிவத்தைப் பின்பற்றலாம் என்று சிலர் யோசனை கூறுகிறார்கள்.

தேவநாகரி, பாரசீகம் என்ற இரு எழுத்து வடிவங்களையும் பயன்படுத்தலாம் என்று காந்திஜி கூறினார். ஆனால் இந்தியப் பிரிவினைக்குப் பிறகு, பாரசீக எழுத்து வடிவம் பொருத்தமற்றதாகி விட்டது.

ரோமானிய எழுத்து வடிவத்தை எல்லா இந்திய மொழிகளும் பின்பற்றலாம் என்று நான் நீண்டகாலமாகவே யோசனை கூறி வருகிறேன். இவ்வாறு செய்தால் ஹிந்தி மொழிக்குத் தேவநாகரி எழுத்து வடிவமும், ரோமானிய எழுத்து வடிவமும் இருக்கும்.

ஆக, ஒவ்வொரு மொழிக்கும் இரண்டு எழுத்து வடிவங்கள் ஒன்று அதன் பாரம்பரியமான எழுத்து வடிவம். மற்றொன்று ரோமானிய எழுத்து வடிவம் இருக்கும். ஒரு குறிப்பிட்ட மொழியைப் பேசுபவர்கள் அந்த மொழியை அதன் பாரம்பரியமான எழுத்து வடிவில் கற்றுக் கொள்ளலாம். அவர்களுக்கு அந்த மொழியின் ரோமானிய எழுத்து வடிவமும் பரிச்சயமாகும்.

மற்ற மொழிகளைச் சேர்ந்தவர்கள் அந்த மொழியை ரோமானிய எழுத்து வடிவத்தில் கற்பார்கள். தங்களது சொந்த மொழியைக் கற்கின்ற போதே ரோமானிய எழுத்து வடிவத்தை அவர்கள் பயின்றிருப்பார்கள்.

கணிப்பொறி என்று கூறப்படும் கம்ப்யூட்டர் காலத்தில்உலக அளவில் தகவல் தொடர்பு முறையை உருவாக்குகின்ற காலத்தில் ரோமானிய எழுத்து வடிவம் போன்ற ஒரு பொது எழுத்து வடிவம் மிகவும் பயனளிக்கும் என்று சுப்பிரமணியம் தனது கருத்தை முன் வைத்தார்.

அரசியல் நிர்ணய சபையில் தேசிய மொழி பிரச்சினை குறித்த விவாதம் 14.09.49 அன்று காயிதே மில்லத் கூறியதாவது:

காயிதே மில்லத் நேற்று இச்சபையில் பிரதம மந்திரி அவர்கள் மிக முக்கியமானதொரு உரையை நிகழ்த்தினார். அச்சமயம் மூன்று அம்சங்களே அவர் வலியுறுத்தினார். முதலாவதாக, இப்பிரச்சினை குறித்து மஹாத்மா காந்தியின் கருத்துக்களை அவர் மேற்கோள் காட்டினார். அவரை ஆதாரமாக எடுத்துச் சொன்னார். இரண்டாவதாக, நாம் பின்நோக்கிச் செல்லக்கூடாது என்றார். வெகுதூரம் பின்நோக்கிப் பார்ப்பது நமது எதிர்கால முன்னற்றத்தைப் பாதிக்கும் என்று எடுத்துச் சொன்னார். மூன்றாவதாக, உலகம் இன்று மிகவும் சுருங்கிக் கொண்டு வருகிறது என்பதை நாம் உணர வேண்டும் என்று சொன்னார். மணிக்கு மணி நம்மை எப்படி உலகம் சுற்றி வளைத்துக் கொண்டு வருகிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும் என அறிவுரை கூறினார். மேற்கூறிய மூன்று அம்சங்களையும் மனதில் கொண்டு இப்பிரச்சினையை நாம் ஆராய முற்பட்டால், பிரச்சினையை இலகுவில் தீர்த்துவிட இயலும் என்பதுதான் எனது கருத்தாகும்.

நாட்டின் தேசிய மொழியாகத் தேர்ந்தெடுக்கப்படக் கூடிய மொழி ஒரு இந்திய மொழியாகத்தான் இருக்க வேண்டும் என்பது ஏற்கனவே ஒப்புக் கொள்ளப்பட்ட விஷயம். அத்துடன் நாட்டிலுள்ள மக்களில் அதிகப்படியானவர்கள் பேசக்கூடிய மொழியாகவும், அது இருக்க வேண்டும் என்பதும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. நமது தேசிய வாழ்வில் தற்கால போக்குகளையும் நவீன கருத்துக்களையும் ஏற்றுக்கொள்ளும் விதத்திலும் அவற்றை நன்கு பிரதிபலிக்கும் வகையிலும் அந்த மொழி இருக்க வேண்டும் என்பதும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த அம்சங்களைக் குறித்து கருத்து முரண்பாடு இல்லை என்றுதான் நான் கருதுகிறேன்.

அப்படியானால், அப்படிப்பட்ட மொழி எது? எல்லா அம்சங்களிலும் திருப்திதரும் மொழி எது? இதுதான் இன்றைய பிரச்சினை, விவாதம். இது குறித்து, மஹாத்மா காந்தியை நான் மேற்கோள் காட்டுவதை விட வேறு எதுவும் சிறப்பாகக் கூறி விடமுடியாது. 1947ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 18ம் தேதி அவர் எழுதியுள்ள கட்டுரை ஒன்றில் அவர் இவ்வாறு கூறியிருக்கிறார்.

"டில்லியில் என்னை தினசரி ஹிந்துக்களும் சந்திக்கிறார்கள். முஸ்லிம்களும் சந்திக்கிறார்கள். ஹிந்துக்கள் அதிக எண்ணிக்கையில் வருகிறார்கள். இவர்கள் பேசுகிற மொழியில் ஒரு சில சமஸ்கிருத வார்த்தைகளும் இருக்கின்றன. அரபி, பார்ஸி வார்த்தைகளும் அதிக அளவில் இல்லை. இந்த மக்களுக்கு அல்லது அவர்களில் பெரும்பான்மையினருக்கு, தேவநாகரி லிபி தெரியாது. அவர்கள் எனக்கு எழுதும் பொழுது, அவர்களுக்குத் தெரிந்த ஆங்கிலத்தில்தான் எழுதுகிறார்கள். ஒரு அந்நிய மொழியில் எழுதுவதற்காக அவர்களை நான் கடிந்து கொள்ளும் பொழுது, அவர்கள் உர்தூ லிபியில்தான் எழுதுகிறார்கள். நமது நாட்டின் தேசீய மொழியாக ஹிந்திதான் இருக்க வேண்டும் என்றும் அது தேவநாகரி லிபியில்தான் எழுதப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டால், மேலே நான் குறிப்பிட்ட ஹிந்துக்களுடைய நிலை என்ன? கதி என்ன?"

இது மஹாத்மா காந்தி எழுப்பிய கேள்வி. அதிக நாட்களுக்கு முன்பல்ல. 1947ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் எழுப்பிய வினா. டில்லியையும் அதை சுற்றிலுமுள்ள பகுதிகளைத்தான் அவர் இங்கு குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார். அதே கட்டுரையில் அவர் மேலும் குறிப்பிடுகிறார். அவர் வார்த்தைகளை அப்படியே நான் இங்கு படிக்கிறேன்.

"இந்தியாவிலுள்ள கிராமங்களில் வாழும் கோடிக்கணக்கான மக்களுக்கு புத்தகங்களை வாசிக்கத்

தெரியாது. ஆனால், அவர்கள் பேசுகிற மொழி ஹிந்துஸ்தானி. இதை முஸ்லிம்கள் உர்தூ லிபியில் எழுதுகிறார்கள். ஹிந்துக்கள் தேவநாகரி லிபியில் எழுதுகிறார்கள். எனவே, என்னையும் உங்களையும் போன்ற மக்களின் கடமை என்னவென்றால், அந்த இரண்டு லிபிகளையும் கற்றுக் கொள்வதுதான்."

மஹாத்மா காந்தியின் கருத்து இதுதான். பெரும்பாலான மக்கள் பேசுகிறமொழி ஹிந்துஸ்தானி என்று அவர் மிகவும் தெளிவாக கூறியிருக்கிறார். அதற்கான மக்கள் பயன்படுத்தும் லிபிகள் தேவநாகரியும் உர்தூவும் என்றும் அவர் வலியுறுத்தியிருக்கிறார். எனவே, இந்தியாவினுடைய தேசிய மொழிக்கு உர்தூவையும், தேவநாகரியையும் லிபிகளாக ஏற்றுக்கொள்ளும்படி எனது நண்பர்களுடன் சேர்ந்து நானும் இச்சபையை வேண்டிக்கொள்கிறேன்.

ஹிந்துஸ்தானி ஒரு அந்நிய மொழியல்ல. இது நீங்கள் எல்லோரும் அறிந்ததுதான். இது முழுக்க, முழுக்க ஒரு சுதேச மொழி. இந்நாட்டில்தான் இது பிறந்து வளர்ந்தது. இம்மொழியைப் பற்றிய மற்றொரு சிறப்பான அம்சம் என்னவென்றால் நவீனகால தேவைகளுக்கேற்ற தருணத்தில் இது பிறந்தது. சூழ்நிலைகளுக்கு ஏற்ப இது தன்னை வளர்த்துக் கொண்டது. தற்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் ஏற்றமொழி இதுதான் என்று நான் கூறுகிறேன். ஏற்கனவே நான் சுட்டிக்காட்டியபடி, இந்நாட்டிலுள்ள பெரும்பான்மையான மக்கள் பேசக்கூடிய மொழியும் இந்த ஹிந்துதானிதான்.

முன் காலங்களில் வழக்கில் இருந்த விஷயங்கள் பற்றிப் பேசப்பட்டது. மிகப் பழமையான காலங்களிலுள்ள நடைமுறைதான் பின்பற்றப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டால், அது குறித்து தர்க்க ரீதியாக ஒழுங்கு முறையைக் கையாள வேண்டும் என நான் சொல்ல விரும்புகிறேன். பழமையை ஏற்றுக்கொள்ள

நாம் ஏன் விரும்புகிறோம்? நமது நண்பர்களில் சிலர், ஒரு மொழி இந்திய மொழியாக மட்டும் இருந்தால் போதாது, இந்நாட்டினுடைய மிகவும் பழமையான மொழியாகவும் அது இருக்க வேண்டும். அப்படிப்பட்ட மொழியைத்தான் நமது தேசிய மொழியாக ஏற்றுக் கொள்ள முடியும் எனக் கூறினார்கள்.

இந்த வாதம் ஏற்றுக் கொள்ளப்படுமானால் நான் ஒரு உண்மையை இச்சபை முன்பு தைரியமாகக் கூற விரும்புகிறேன்.

“இந்த நாட்டு மண்ணில் பேசப்பட்ட மொழிகளில் மிகவும் பழமையானதும் ஆரம்ப காலத்தில் இருந்து பேசப்பட்டு வரும் மொழியாக இருப்பதும் தமிழ்தான். அதாவது, திராவிட மொழிகளே இந்நாட்டின் புராதன மொழி என நான் துணிந்து கூறுகிறேன். இந்நாட்டு மண்ணில் பேசப்பட்ட முதல் மொழி திராவிட மொழியே என்ற எனது கூற்றை எந்த வரலாற்றாசிரியராலும் மறுக்க முடியாது. எந்த புதை பொருள் ஆராய்ச்சியாளராலும் எதிர்க்க முடியாது. உயர்தரமான இலக்கிய வளங்களும், நயங்களும் நிறைந்த மொழி தமிழ். இது மிகவும் புராதனமான மொழி. இது எனது தாய்மொழி என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அம்மொழியை நான் நேசிக்கிறேன். அம்மொழியைப் பற்றி நான் பெருமைப் படுகிறேன்.”

என்றாலும் ஒரு உண்மையை நானோ அல்லது இதர தமிழர்களோ மறந்துவிடவில்லை. சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில் இந்நாட்டின் புராதன மொழியாக தமிழ் இருந்தபோதிலும் இந்நாட்டிலுள்ள பெரும்பான்மை மக்களால் இது பேசப்பட வில்லையாதலால், இம் மொழியைத்தான் நமது தேசிய மொழியாக்க வேண்டும் என நாங்கள் வற்புறுத்திக் கொண்டிருக்கவில்லை, நாங்கள் நிலைமையைப் புரிந்து கொண்டுதான் இருக்கிறோம். ஆனால், பழமைக்குத்தான் செல்ல வேண்டுமென்றால், புராதனமானதைத்தான் தேர்ந்தெடுக்க

வேண்டுமென்றால், இந்நாட்டின் தேசீய மொழியாகத் தமிழைத்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆனால், அம்மொழியைப் பேசுபவர்கள் அக் கோரிக்கையை வலியுறுத்திக் கொண்டிருக்கவில்லை.

பழமையை நாம் மறந்து விடுவதற்கில்லைதான். அதன் செல்வாக்கிற்குட்பட்டுத் தான் நாம் இருந்து வருகிறோம். தாண்டன்ஜி அவர்கள் விளக்கிக் கூறியதைப்போல, பழமை யிலிருந்து நாம் முழுவதுமாக விடுப்பட்டுவிட முடியாதுதான். பழமைச் சங்கிலியால் நாம் பிணைக்கப்பட்டிருந்தாலும், அந்த பிணைப்பு அசைவற்றதாக, உயிரற்றதாக இருக்கக் கூடாது. அது விட்டுக் கொடுக்கக் கூடியதாக இருக்க வேண்டும். நெளிவு சுழிவுகளுக்கு இடமளிப்பதாக இருக்க வேண்டும், இதைத்தான் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எல்லாமே வேர் பாகமாக அமைந்து விட்டால், மரம் முழுமை பெறுமா? வேர்களும் இருக்க வேண்டும். கிளைகளும் இருக்க வேண்டும். மலர்களும் இருக்க வேண்டும். கனிகளும் இருக்க வேண்டும். எனவே தற்கால சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு நாம் ஒரு முடிவுக்கு வர வேண்டும்.

அறிஞர் அண்ணாவின் இருமொழிக் கொள்கை

திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிறுவனரான பேரறிஞர் அண்ணா அவர்கள் இருமொழிக் கொள்கை திட்டத்தை முன்மொழிந்து தமிழக சட்டப்பேரவையில் சட்டமாக இயற்றியுள்ளார். அதாவது, தமிழ்நாட்டின் ஆட்சிமொழி தமிழாகவும், பிற மாநிலங்களுடனும், மைய அரசுடனும் தொடர்புமொழி ஆங்கிலம் என்றும் சட்டப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இவரது இருமொழிக் கொள்கை அறிவுப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்தியாவில் உள்ள அனைத்து மொழியினரும் வெளித்தொடர்புக்கு ஆங்கிலத்தையும், தங்களது மாநில ஆட்சி மொழியாக அவரவரது தாய்மொழியினை ஆட்சி மொழியாக கொள்வது

சிறப்பாகும். இந்த மொழிக் கொள்கையை "All are equal before equality of National Languages" அதாவது, அனைவரது தாய்மொழிகளும் சமத்துவம் என்ற கோட்பாட்டின், கொள்கையின் அடிப்படையில் அடங்கிவிடுகிறது.

இந்தியா போன்ற பல்வேறு சாதி, மத, இன, மொழி அடிப்படையில் அமைந்த ஒரு நாட்டில் அனைத்தையும் சமமாக நடத்த வேண்டியது அவசியமாகும். இதில் பெரும்பான்மை, சிறுபான்மை என்ற வாதம் எடுபடாது. இந்திய மக்கள் தொகை 120 கோடி என்றால் அதாவது 2001 மக்கட்தொகை கணக்கின்படி இந்தி பேசும் மக்களின் தொகை 42 கோடி ஆகும். அதாவது, மத்தியபிரதேசம், உத்திரபிரதேசம், ராஜஸ்தான், பீகார், இமாலய பிரதேசம் ஆகிய பகுதிகளில் மட்டும் 6 கோடி மக்கள் பிற மொழிகளை பேசுகின்றனர்.

ஒட்டுமொத்த ஆய்வில், 120 கோடி இந்திய மக்களில் பெரும்பான்மையோர் பிற மொழிகளை பேசுகின்றனர், எழுதுகின்றனர். எனவே, ஹிந்தியை தேசிய மொழியாக, அலுவல் மொழியாக செயல்படுத்தக் கூடாது. ஆங்கிலம்தான் மத்திய, மாநில தொடர்புக்கு பயன்படுத்தப்பட வேண்டும்.

அண்ணாவின் இருமொழிக் கொள்கைப்படி ஆராய்ந்தால், ஹிந்தி படிப்பவனும், தமிழ் படிப்பவனும், ஏனைய தாய்மொழியாளர்களும் ஆங்கிலம் என்ற ஒரு தொடர்பு மொழியை படித்தால் போதும். அவ்வாறு இல்லாமல் ஹிந்தி படிப்பவன் ஆங்கிலமும், பிறர் அதிகமாக இரண்டு மொழிகளையும் கற்க வேண்டிய அவசியம் இல்லை. உண்மையில் ஆங்கிலம் இந்திய மொழிகளில் ஒன்றாகவே கருதப்பட்டு வருகிறது. ஆங்கிலத்தை அகற்றக் கூடிய வளர்ச்சி அறிவியலிலும், தொழில்நுட்பத்திலும் இந்திய மொழிகளில் எந்த மொழிக்கும் அந்தத் தகுதியும், திறமையும் வார்த்தெடுக்கப் படவில்லை.

உலக பல்கலைக் கழகங்களில், ஆய்வு நிறுவனங்களில் இந்திய பல்கலைக் கழகங்கள், ஆய்வு நிறுவனங்கள் ஒன்றுகூட இடம் பிடிக்கவில்லை. இன்னும் உலகத்தர வரிசையில் இந்தியக் கல்வி தரங்கெட்டதாக உள்ளது. இந்நிலையில் அதிக மொழிகளை கற்பது என்பது காலத்தையும், சக்தியையும் வீணாக விரயமாக்கும் செயலாகும்.

ஒவ்வொரு நாளும் உலகத்தில் ஏதோ ஒரு அரிய புத்தகம், கண்டுபிடிப்பு வெளிவந்துகொண்டு இருக்கிறது. அவை யாவும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு விடுகின்றன அல்லது ஆங்கிலத்திலேயே வெளியிடப்படுகின்றன. இந்நிலையில் அவற்றையெல்லாம் இந்திய மொழிகளில் மொழிப்பெயர்ப்பது என்பது கொக்குத்தலையில் வெண்ணெய் வைத்து பிடிப்பது ஆகும். மொழிப் பெயர்ப்பு செய்வதற்குரிய அறிவாற்றல் பெரும்பாலோரிடம் இல்லை. உண்மையான கருத்தும், செய்தியும் மொழிப்பெயர்ப்பில் கிடைப்பது இல்லை. எடுத்துக்காட்டாக, ஹிந்தி மொழி சரியான வளர்ச்சி அடையாத மொழி என்பதை இங்கு நிரூபிக்கலாம்.

அதாவது, புதுடெல்லியில் உள்ள நாடாளுமன்றத்தின் மேலவையை அதாவது ஆங்கில நாட்டிலுள்ள (House of Lords) பிரபுக்கள் சபையை, ராஜ்ய சபா என்றும், அதைப்போல் (House of Commons) என்ற கீழ் அவையை லோக்சபா என்றும் இந்தியில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. இவ்விரண்டு அவைகளையும் சேர்த்து ஆங்கில நாட்டில் (Parliament) பாராளுமன்றம் என்பர்.

அவர்கள் உலகை ஆண்டதால், அதற்கு பாராளுமன்றம் என்று அழைக்க வேண்டும் என்று இராஜாஜி கூறினார். நாம் உலகை ஆளவில்லை என்பதால் நம் இந்தியாவில் அவ்விரண்டையும் சேர்த்து நாடாளுமன்றம் என்கின்றனர்.

இங்கு முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது என்ன வென்றால், மேல் சபையும், கீழ் சபையும்

சேர்த்து கூறுவதற்கு ஹிந்தி மொழியில் 'சொல் இல்லை' எனவே ஆங்கில சொல் 'பார்லிமெண்ட்' என்பதையே கூறுகின்றனர். இந்த சிறிய மொழிப் பெயர்ப்புக்கே ஹிந்தியில் வார்த்தை இல்லை என்றால் ஏனைய அறிவியல், தொழில்நுட்ப துறைகளில் எப்படி ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்க்க முடியும் என்பதை ஹிந்திமொழி வெறியர்கள் உணர வேண்டும். ஆங்கில சொற்களை அப்படியே பயன் படுத்துவதற்கு பதிலாக, ஆங்கில மொழியையே இந்திய மாநில நடுவண் அரசின் தொடர்பு மொழியாக ஏற்பதில், செயல்படுத்துவதில் என்ன தவறு இருக்கிறது என்பதை அறிவுபூர்வமாக சிந்திக்க வேண்டும்.

இன்றைய இந்திய அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு தளங்களை அமைத்துக் கொடுத்தது ஆங்கில ஆட்சி ஆகும். 1853ல்தான் முதன்முதலில் இந்திய நாட்டின் முழுமைக்கும் ஒரு பொதுவான இராணுவப்படை உருவாக்கப்பட்டது. அன்றைய காலகட்டத்தில் இந்திய மக்களின் தொகை 20 கோடி ஆகும். இதில் இந்திய இராணுவ வீரர்கள் கொண்ட படை 2 இலட்சம் ஆகும். ஆங்கிலேயர் இருந்த படை 40,000 ஆகும். இந்தியா இராணுவம் முழுவதையும் ஏறத்தாழ 7,000 ஆங்கில அதிகாரிகள் இருந்து கொண்டு இந்தியாவை ஆண்டனர். 1857ல் இன்றைய ஒருங்கிணைந்த இந்தியாவை ஆங்கிலேயர்கள் ஏற்படுத்தினர். இதுவே ஆங்கில ஆட்சியில் ஏற்பட்ட மாபெரும் சாதனையாகும்.

இந்து, ஹிந்தி என்ற முழக்கத்தில் உள்ள வெறுமையை ஒவ்வொரு தமிழனும் உணர வேண்டும். இந்து சனாதன எந்த நூல்களிலும் இந்து என்ற சொல் கிடையாது. இந்த சொல்லை பாரசீக வரலாற்று ஆசிரியர் 7,8ம் நூற்றாண்டுகளில் பதிவு செய்தார்.

அதாவது, சிந்து நதிக்கு அப்பாலிருந்த இஸ்லாமியரல்லாத மக்களை குறிப்பதற்கு சிந்து, சிந்தி,

இந்து என்றனர். அதனால்தான் மாமுனி பெரியவர் சங்கராச்சாரியார் இந்து மதம் என்பதற்கு பதிலாக சனாதன மதம் அதாவது ஆரிய வேத, இதிகாசங்கள், புரணங்கள், சடங்குகள், சம்பிரதாயங்கள், விழாக்கள் ஆகியவற்றில் நம்பிக்கை கொண்டோர் என்ற பொருள்பட பயன்படுத்தினர்.

ஆங்கிலேயர்கள் இந்து மதத்திற்கும் இந்தியா என்ற நாட்டைக் குறிக்கும் சொல்லிற்கும் வேறுபடுத்த வேண்டி நம் நாட்டை இந்தியா என்றும், மதத்தை இந்து என்றும் வேறுபடுத்தி பயன்படுத்தினர். இது அவர்கள் செய்த தொண்டாகும்.

இன்று இந்து மதத்தை அடப்படையாக கொண்டு இந்து சனாதனிகள் சமஸ்கிருத மொழியை அனைவரும் கற்க வேண்டும் என்றும் ஹிந்தி மொழியை தேசிய மொழியாக, ஆட்சி மொழியாக அறிவிக்க வேண்டும் என்று அனைத்து ஹிந்தி மொழி பேசும் தலைவர்களும், மக்கள் பிரதிநிதிகளும் வாதிட்டு வருகின்றனர். இது இந்திய ஒற்றுமையை சீர்குலைக்கும் செயலாகும். கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிரிடையானது. மக்களாட்சிக்கு பகையானது.

இந்துமதவாதிகள் சமத்துவத்தை ஏற்றுக் கொள்ளாதவர்கள். ஆண்டான் அடிமை தத்துவத்தை செயல்படுத்த துடிப்பவர்கள். சோசலிசத்தை எதிர்ப்பவர்கள். சோசலிச கொள்கையை ஆதரித்தால் அதை சூத்திரர்களின் மனப்பாங்கு (Sudra Tendency) என்று இழித்துரைப்பர்.

ஆக, தமிழ் மொழியை தமிழ்நாட்டின் ஆட்சி மொழியாகவும், பிற மாநிலங்களுடனும், மைய அரசுடனும் தொடர்பு மொழியாக ஆங்கிலத்தை இந்திய மொழிகளில் ஒன்றாகக் கருதி செயல்படுத்துவதே அனைவருக்கும் ஏற்புடையது மட்டுமல்ல, இந்திய ஒற்றுமைக்கும் உகந்ததாகும்.

அயல்நாட்டில் ஒருவரைச் சந்தித்தால், அவரை 'நீங்கள் எந்த நாடு?' என்று கேட்போம். அவர் உடனே தன் நாட்டின் பெயரைக் கூறுவார். நம்மை எந்த நாட்டவர் என்று வினவினால், நாம் இந்தியா நாட்டைச் சார்ந்தவர் 'இந்தியன்' என்று கூறுவோம். ஆனால், இந்தியாவிற்குள் ஒருவரைப் பார்த்து நீங்கள் யார்? என்று வினவினால், அவர் தன்னை 'இந்தியன்' என்று கூறினால் அவனை நாம் பைத்தியக்காரன் என்று நினைப்போம். ஏனென்றால் இந்தியாவில் உள்ள அனைவருமே ஒட்டுமொத்தத்தில் இந்தியர்களே ஆவர்.

ஆகவே, யார் என்ற வினாவிற்கு எந்த மொழியைச் சார்ந்த மாநிலத்திலிருந்து வருகிறார் என்பது பொருளாகும். ஆக, யார் நீங்கள் என்றால், தமிழன், தெலுங்கர், கன்னடர், மலையாளி, வங்காளி, குஜராத்தி, மராத்தியர், காஷ்மீரி என்று தங்கள் தாய்மொழியைச் சார்ந்த மாநிலத்தை குறிப்பிட்டு அறிமுகப்படுத்திக் கொள்வர். எனவே, இந்தியாவிற்குள் ஒவ்வொருவனுக்கும் அவனது தாய்மொழி அடிப்படையில் உள்ள மாநிலங்களே முகவரியாக உள்ளது என்பதே நடைமுறை உண்மையாகும்.

இந்து மதத்தில் ஒருவன் தன்னை 'இந்து' என்று கூறிக் கொண்டால், பிறர் இவனது உண்மையான அடையாளம் தெரியாமல் குழம்பிப் போய்விடுவர். ஒருவன் இந்து மதத்தில் இருந்தாலும் அவன் தனது சாதியின் பெயரைக் கட்டாயம் கூற வேண்டும். அதுதான் அவனது உண்மையான சமூக முகவரியாக உள்ளது.

இந்தியன் என்றாலோ, இந்து என்றாலோ ஒருவனது சமூகத்தின் உண்மையான நிலைப்பாட்டை குறிப்பிடுவதாகாது. அதைப்போல் ஒருவன் தன்னை திராவிடன் என்று கூறிக்கொண்டால், அவனது உண்மையான முகவரியை, சமூக அடையாளத்தை தெளிவாக குறிப்பிடுவதாக அமையாது. திராவிடன்

என்றால், தமிழர், தெலுங்கர், கன்னடர், மலையாளர் ஆகியோரைப் பொதுவாக குறிப்பிடும் சொல்லாகும். தெளிவாகக் கூற வேண்டுமானால் அவனவன் தன் தாய்மொழியைத் தெளிவாக குறிப்பிட வேண்டும். அப்பொழுதுதான் அவன் யார் என்பதைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியும்.

முடிவுரை

கால்டுவெல் இருநூற்றாண்டு நிறைவு விழாவில் ஒவ்வொரு தமிழனும் எடுத்துக்கொள்ள வேண்டிய உறுதிமொழி என்னவென்றால், அவரிடம் குடிகொண்டிருந்த 18 மொழி பற்றிய அறிவு, விடாமுயற்சி, சமுதாய சேவை, தியாகத்தன்மை இவற்றையெல்லாம்விட ஒப்பிலக்கண ஆய்வு ஆற்றல், நுண்ணறிவு ஆகும்.

முல்லை பெரியார் அணையைக் கட்டிய தியாகச் செம்மல் பென்னிகுயிக் போன்ற மனிதனை தமிழினம் இனி காண முடியுமா என்பதை முயற்சித்துப் பார்க்க வேண்டும். வீரமாமுனிவர் போன்ற மேனாட்டு தமிழ் அறிஞரைப் போன்று ஏதாவது தமிழ்மொழியைக் கொண்டு சாதிக்க முடியுமா? என்பதை சிந்தித்து உணர வேண்டும்.

கால்டுவெல் தமிழ்மொழி வரலாற்றில் ஒரு திருப்பு முனை, ஒரு புதிய அத்தியாயம், ஒரு புதிய சகாப்தம். இதுவே அவரது இருநூாற்றண்டு நிறைவு விழா நினைவுபடுத்தும் படிப்பினை ஆகும்.

"இந்திய நாகரிகம் என்பது ஆரிய அல்லது ஹிந்து நாகரிகமல்ல. மாறாக, ஆரியர்கள் வருவதற்கு முன்பிருந்த மொகஞ்சதரோ ஹரப்பா நாகரிகமும், திராவிட நாகரிகமும் ஆரியமொகலாய நாகரிகங்களும், இணைந்ததுதான் இந்திய நாகரிகம்."இந்திய வரலாறு இ,எம்.எஸ்.நம்பூதிரிபாட், ப.3

அண்மையில் நடுவண் அரசின் அமைச்சரான நிரஞ்சன் ஜோதி என்ற அம்மையார், இந்திய மக்களைப் பார்த்து இராமர் பிள்ளைகளுக்கு வாக்களியுங்கள், அது இல்லாத வேசிப் பிள்ளைகளுக்கு வாக்களிக்காதீர்கள் என்று கூறி பெரும் சிக்கலில் மாட்டியுள்ளார்.

அதாவது, இராமரை ஆதரிப்போரே சட்டப்பூர்வமான குழந்தைகள் என்றும், அவ்வாறு இல்லாதோர், அதிகாரப் பூர்வமில்லாத சட்டத்திற்கு புறம்பான பிள்ளைகள் ஆவர். (Illegitimate Sons) இதிலிருந்து நாம் அறிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், எந்த சமூக, பொருளாதார, சீர்திருத்த கொள்கையோ, தத்துவமோ, திட்டமோ இல்லாமல் இன்றைய மைய அரசு மக்களின் பிரச்சனைகளை திசை திருப்ப பல்வேறு தலைவர்கள் இவ்வாறு பேசி வருகின்றனர். இந்தி, வடமொழி வெறியும், மதவெறியும், சாதி வெறியும், இன வெறியும், பணக்கார வெறியும் இந்தியாவை ரஷ்யாவைப்போல் உடைத்துவிடுமோ என்று அச்சப்பட வேண்டியுள்ளது.

1931ல் இலண்டனில் உள்ள ஆல்பர்ட் என்ற மஹாலில் பிரிட்டிஸ் நாட்டின் தலைமை அமைச்சர் வின்ஸ்டன் சர்ச்சில் ஒரு வாதத்தை முன் வைத்தார். அதாவது, இந்தியாவிற்கு நாம் செய்யும் கடமை என்னவாக இருக்கிறது என்றால் இந்திய ஆட்சிப் பொறுப்பை காங்கிரஸ் கட்சியில் முக்கிய ஆளுநர்களாக இருக்கும் பிராமணர்களிடம் ஒப்படைக்கும் செயலாக உள்ளது. இது மிகக் கொடியதும், துயரமிக்க செயலாகும். இது வெகு விரைவில் இந்தியா காட்டுமிராண்டித் தனத்திற்கும், மைய வரலாற்று காலத்தில் நிலவிய (Middle Ages) அடிப்படை தேவையின்றி தவிக்கும் மக்களை கொண்ட நிலைக்கு நம் செயல் கொண்டு செல்கிறது என்றார். இதை உண்மை ஆக்குவது போல் நிகழ்வுகள் நடந்து வருகின்றன.

சாதி, மத, இன வெறியர்கள் மைய ஆட்சி அதிகாரத்தை பயன்படுத்தி மக்கள் ஜனநாயகத்திற்கு

எதிரிடையாக செயல்படுகின்றனர். பல்வேறு மொழி, இனங்களைக் கொண்ட இந்தியாவில் தேசியமொழி, தேசிய மதம், தேசிய சாதி, தேசிய நூல் என்று எந்த ஒன்றையும் அறிவிப்பது ஜனநாயக கொள்கைக்கும், சமய சார்பின்மைக்கும் முற்றிலும் எதிரிடையான செயலாகும்.

இச்செயலை மிகக் குறுகிய கும்பல் அதாவது இந்துமத சனாதனிகளும், பெரும் பணக்கார தொழில் அதிபர்களும் ஒன்று சேர்ந்து புதிய பொருளாதாரத்தை தங்களது வாழ்விற்கும், வளத் திற்கும் பயன்படுத்தி வருகின்றனர். இதனால் பெரும்பாலான மக்கள் வறுமையிலும், ஏழ்மையிலும், வேலையின்மையிலும் உழன்று வருகின்றனர். இதற்கு தீர்வு காணாமல் சாதி மத கலவரங்களைத் தூண்டிவிட்டு பொருளாதாரப் பிரச்சனைகளிலிருந்து பொதுமக்களின் கவனத்தைத் தேவையற்ற பிரச்சனைகளின் மேல் கவனம் செலுத்தி வருகின்றனர். இதை மேனாள் ஆங்கில நாட்டின் தலைமை அமைச்சர் மிகத் தெளிவாக இந்தியாவின் ஆளும் வர்க்கம் ஆங்கிலேயரிடமிருந்து அதிகாரத்தைக் கைப்பற்றினால் என்ன செய்வார்கள் என்பதை முன் கூட்டியே தெரிந்தே *1931*ல் பேசி இருக்கிறார்.

In 1931, speaking at the Albert Hall on, "Our duty to India", Winston Churchill argued that, "To abandon India, to the rule of the Brahmins (who in is his opinion dominated the Congress Party) would be an act of cruel and wickat negligence. India will fall back quite rapidly through the centuries into the karbanism and privations of the Middle Ages". - Ramachandra Goha, in India After Gandhi, Reader's Digest, August, 2014, P5.

அதாவது, வின்ஸ்டன் சர்ச்சில் கூறியதைத்தான், தந்தை பெரியார் இங்கு கூறியுள்ளார். அதாவது, இன்றைய காலகட்டத்தில் இந்து சனாதனிகளும், அம்பானிஅதானி போன்ற பனியாக்களும் சேர்ந்து இந்தியாவை ஆண்டு வருகின்றனர். இவர்கள் வகுத்ததே இந்திய சமூக பொருளாதாரமாகும். எனவேதான்

அவர்களுடைய மொழியான இந்தியை மற்றவர்கள் மீது திணிக்க முயல்கின்றனர். அவர்களது நீதி நூல்களை தேசிய நூலாக அறிவிக்க துடிக்கின்றனர். சமய சார்பின்மை கொள்கையை குழிதோண்டி புதைத்து வருகின்றனர். இதை எதிர்த்து போராடி எவ்வாறு வெற்றிவாகை சூட வேண்டும் என்பதை திராவிடர்கள், தமிழர்கள் சிந்தித்து செயல்பட வேண்டும். இதற்கு ராபர்ட் கால்டுவெல் போன்ற பன்னாட்டு மொழி ஆய்வாளர்களின் படைப்புகள் மிகவும் உறுதுணையாக இருக்கும். அதைக் கைப்பற்றிக் கொண்டு மேலே செல்ல வேண்டியது ஒவ்வொரு தமிழனின் இன்றைய முக்கிய கடமையாகும்.

இதுவே, கால்டுவெல் இரு நூற்றாண்டு விழா நிறைவு கொண்டாட்டத்தில் கற்றுக் கொண்டு கடைப்பிடிக்க வேண்டிய முதன்மைப் பாடமாகும்.

Dr. Caldwell Bi-Centenary Celebration

(1814-2014)

Arignar Peravai

Dr. Caldwell's Life and Work: A Turning Point in the History of Tamil Language

By

Prof. Dr. V. Sivaprakasam*

*****

Introduction

Dr. Cardwell's Life and Work is not only Worthy of emulation but a bulwark for the protagonist of the regional languages' official sovereignty and supremacy among the comity of Regional Languages based nation-states of India. His monumental work entitled, "A Comparative Grammar of the Dravidian or South Indian family of languages" has unearthed the inter-relation between the South Indian Languages such as Tamil, Telugu, Kannatam, Malayalam and Tulu, besides other Indian Languages spoken by the people from Kanyakumari to Kashmir and Afganistan. As a missionary, he knows 18 languages from Greek to Tamil. That is the reason why he was able to compare and contrast the origin and growth of grammars of different languages, while he wrote comparative grammar of the Dravidian Languages, which accorded him the title, "The Father of the book on Dravidian Languages." Now, it has became a lode star of the linguists researchers, Sociologist, Philologist and Historians.

After the advent of the word "Dravidian" in his book, the political and Social history of India has undergone tremendous changes, particularly in Tamil Nadu.

How was Dr. Caldwell Inspired?

Dr. Caldwell himself has written about this in his diary as: "Whilst studying in Glasgow, I imbibed that love of comparative philosophy which has ever since grown with my growth. I was led in this direction by the natural bent of my own mind but my interest in the subject took shape and deepened through the influence of the lectures of Sir. Daniel Sandford, our Professor of Greek, enthusiastic

Scholar who is his acquaintance with comparative philology, a subject then studied chiefly in Germany, was far in advance of most of the scholars of his own country and time. I remember then forming the resolution that if I ever found myself amongst strange races speaking strange languages I should Endeavour so to study those languages as to qualify myself to write something about them that should be useful to the world. This early formed resolution was the seed out of which eventually my Comparative grammar of the Dravidian Languages grew."

The greatness of Tamil among the Dravidian and Indian Languages

No doubt, before the arrival of Aryans, throughout India all kinds of Dravidian Languages were spoken and written, including Brahui in Afganistan and Munda in the sub-continent. Even though Sanskrit is closely related with Greek, Latin and Persian Languages both in grammar and words, the Dravidian Languages of South India are not basically related with Sanskrit Language.

While most of the, of late, North Indian Languages are based on Sanskrit, Persian and Arabic Languages, the South Indian Languages are not related with Sanskrit Language. Perhaps Malayalam, Kannadam, Telugu are more mixed with Sanskrit words. But, fundamentally Tamil Language without the Sanskrit and words could be spoken and written in the most chastised form, unlike other Dravidian Languages.

This is how Dr. Caldwell established the fact that the Tamil Grammar is basically and fundamentally different from that of Sanskrit. The former grammar namely, Tholkappiam is based on logic and reason and which forms the basis for the independence and sovereignty of the Tamil Language from the influence of other world languages, particularly from Sanskrit. This is borne out from his own statement:

"This classification of nouns though not so imaginative as that of the Indo-European and Semitic tongues, is decidedly more philosophical; for the difference between rational beings and beings of things which are destitute of reason is more momentous and essential, than any difference that exists between the sexes.... The peculiar Dravidian law of gender which has now been described would appear to be a result of progressive intellectual and grammatical cultivation." (C.G220)

Again to quote Dr. Caldwell's deep analytical skill in the comparative study of Dravidian Languages as,

"It is true it would be now difficult for Telugu to dispense with its Sanskrit; more so for Canaries and most of all for Malayalam, those languages having borrowed from Sanskrit so largely, and being so habituated to look up to it for help, that it would be scarcely possible for them now to assert their independence. Tamil, however, the most highly cultivated in intra of all Dravidian idioms, can dispense with its Sanskrit altogether, if need be, and not only stand alone but flourish without its aid." –C.G. Int.45)

A Good Samaritan

As a Christian Missionary he strived very hard to convert the original inhabitance into the Christianity in the area namely; Idayankudi where he lived, he brought about a sea-change in the way of life of the people, socially, economically and culturally. This action attracted opposition from the ruling class of Hindus particularly from Brahmins. This could be stated from the London Times:

"In 1838 he (Caldwell) found the native converts sneered at by the governing race as "rice Christians" and disdained by the Brahmins and educated Hindus as a new low caste begotten of ignorance and hunger. Not long before his death, the Director of Public Instruction in Madras declared that it the native Christians maintain the present rate of educational progress they will before long engross the leading positions in professional life in Southern India." –W.W.Hunter,-London Times, 19th October, 1891)

Conclusion

Dr. Caldwell came to India, Tamil Nadu, particularly to Tirunelveli-Idaiyankudi to serve the people and convert them into Christianity through the spread of education and Bible teachings. He succeeded in his mission. His contribution to Tamil Language is formidable and everlasting so he is remembered by all Tamils, Dravidians and scholars all over the world on this bi-centenary celebration. To conclude,

"A true servant of God, a profound scholar, a man of persistent and whole-hearted devotion to the one great purpose of his life, he strove to raise and benefit in the highest and fullest sense the whole mass of the people in whose midst he spend more than half a century

of his noble life. Their bodily, mental, spiritual and social welfare were all alike the objects of his unceasing solicitude and effort. The large village of Idayanguide, with its magnificent Church, its regular streets, commodious and comfortable houses, hospitals and schools and many other appliances for the welfare and elevation of the people abundantly illustrates the many-sided character of his great life-work. Few missionaries who came out to India surpassed him in scholarship, in success in the work of winning souls or in breath and saintliness of character. He was familiar with eighteen languages and has left behind him as abiding moments of his learning a comparative grammar of the Dravidian languages and a History of Tinnevelly besides other literary productions of less importance."

-The Centenary History of the C

Reference Notes: (A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages by Caldwell)

Section - I:

1. Indo – European Affinities, P.452-465,

2. Six Rules to find Dravidian words in Sanskrit – lexicons

3. Sanskrit Affinities, P.466-67

4. Indo-European Affinities, P.491-495

Section-II:

1. Semitic Affinities, P.491-495

2. Dravidian & Hebrew, P.492-495

Section-III:

1. Scythian Affinities, P.496-509, More closer to Scythian Affinities

சமஸ்கிருதத் துணை வேண்டாத்
திராவிடத் தனித்தன்மை

-டாக்டர் கால்டுவெல்

திராவிட மொழிகள் வட இந்திய மொழிகளிலிருந்து பற்பல இயல்புகளில் வேறுபடுகின்றன. அவ்வாறிருந்தும், அத்திராவிட மொழிகள், வட இந்திய மொழிகளைப் போலவே, சமற்கிருதத்திலிருந்து பிறந்தனவாகச் சமற்கிருதப் பண்டிதர்களால் கருதப்பட்டன. தாங்கள் அறிந்த எப்பொருளுக்கும் பார்ப்பன மூலம் கற்பிக்கும் இயல்பினர் அப் பண்டிதர்கள். அவர்கள் கூறும் அம்முடிவை, முதன்முதலில் வந்த ஐரோப்பிய அறிஞர்களும் அவ்வாறே ஏற்றுக் கொண்டனர். தங்கள் கருத்தை ஈர்த்த ஒவ்வொரு திராவிட மொழியும் சமற்கிருதச் சொற்களை ஓரளவு பெற்றிருப்பதை அவர்கள் காணாதிருக்க முடியாது. அவற்றுள் சில, இவை எம்மொழிச் சொற்கள் என்பதை அரும்பாடுபட்டே அறிந்துகொள்ள வேண்டிய நிலையில் பெரிதும் சிதைவுண்டிருக்கும். எனினும் சில சிறிதும் சிதைந்து மாறுபாடுற்றிரா என்பது உண்மை. ஆனால், அம்மொழி ஒவ்வொன்றும் சமற்கிருதம் அல்லாத பிறமொழிச் சொற்களையும், சொல்லுருவங்களையும் அளவின்றிப் பெற்றிருப்பதையும் அவர்கள் தெளிவாகக் காண்பர் என்றாலும், அச்சொற்களே அம்மொழி வடிவில் பெரும் பகுதியை உருவாக்குகின்றன. அச்சொற்களிலேயே அம்மொழியின் உயிர்நாடி நிற்கிறது என்ற உண்மையை உணர்ந்திருக்க மாட்டார்கள். அவ்வறியாமையின் பயனாய், அம்மொழிகளில் காணலாகும் அச் சமற்கிருதப் புறத்தன்மைகளுக்குக் காணமுடியாத யாதோ ஒரு சில மூலத்திலிருந்து தோன்றிய வேற்று மொழிக் கலவையாம் என்ற பெயர் சூட்டி அமைதியுற்றனர். உண்மையில் சமற்கிருத மொழிச் சிதைவுகளாய கௌரிய இனத்தைச் சேர்ந்த வங்காளம் போலும் மொழிகளிலும்,

சமற்கிருதத்திற்குப் புறம்பான சில சொற்களும் சொல்லுருவங்களும் இடம் பெற்றுள்ளன. அப் பண்டிதர்கள் கருத்துப்படி, திராவிட மொழிகளுக்கும் அக் கௌரிய மொழிகளுக்குமிடையில் மதிப்பிடத்தக்க வேறுபாடு எதுவும் இல்லையாதல் வேண்டும்.

இவ்வாறு, திராவிட மொழியில் காணலாகும் சமற்கிருதப் புறத்தன்மைகளை, வேற்று மொழிக் கலவைகளாக மதித்து ஒதுக்குவது, உண்மை நிலையிலிருந்து உருண்டோடி வீழ்வதாகும். மேலும், திராவிடம் சமற்கிருதத்திலிருந்து பிறந்தது என்ற கருத்து, முந்திய தலைமுறையினராய மொழிநூல் வல்லுநர்க்கு ஏற்புடையதாய் விளங்கினும், இக்காலை அறவே அடிப்படையற்றுப் போன கட்டுக்கதையாகிவிட்டது. மேலே கூறிய பண்டிதர்கள் சமற்கிருத மொழியை ஆழக் கற்று, வட இந்திய மொழிகளை விளங்க அறிந்தவரே எனினும் அவர்கள் திராவிட மொழிகளை அறவே கண்டறியாதவராவர், அல்லது, ஒரு சிறிதே அறிந்தவராவர். ஒப்பியல் மொழிநூல் விதிமுறைகளில் ஒரு சிறு பயிற்சியும் பெறாத எவரும், திராவிட மொழிகளின் இலக்கண விதிகளையும் சொற்களையும் நன்கு கற்றுத் தேர்ந்து, அவற்றைச் சமற்கிருத இலக்கண முறைகளோடும் ஒப்புநோக்க அறியாத எவரும், திராவிட இலக்கண அமைப்பு முறையும், சொல்லாக்க வடிவங்களும், இன்றியமையாச் சிறப்பு வாய்ந்த அவற்றின் எண்ணற்ற வேர்ச் சொற்களும், எத்தகைய சொல்லாக்க, சொற்சிதைவு முறைகளினாலேயாயினும், சமற்கிருதத்திலிருந்து தோன்றியனவாகும் என்று கூற உரிமையுடையவராகார்.

நன்றி: -உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு - கோவை சிறப்பு மலர், 2004, பக்.34. (திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் - தமிழாக்கம்: புலவர் கா.கோவிந்தன்)

ஆசிரியரைப்பற்றி...

பேராசிரியர். முனைவர். வெ. சிவப்பிரகாசம், குடந்தை அரசினர் ஆடவர் கல்லூரியில் பி.ஏ., பொருளியலில் 1968–இல் பட்டம் பெற்றார். இக்கல்லூரி தென்னிந்தியாவின் கேம்பிரிட்ஜ் என்று புகழ் பெற்றது. இங்கு உலகப்புகழ் பெற்ற கணிதமேதை இராமானுஜன் பயின்றார். ஆங்கில மொழியில் வல்லுநரும், மிகச்சிறந்த ஆங்கில பேச்சாளருமான, வெள்ளி நாக்கு என்று புகழப்பெற்ற, ரைட் ஹானரபுள் வி.எஸ்.ஸ்ரீனிவாச சாஸ்திரி இக்கல்லூரியில் பயின்றவர். தமிழறிஞர் தியாகராஜ செட்டியாரும், தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாத அய்யரும் இக்கல்லூரியின் பணியாற்றிய பெருமையுடையது. அதைப் போலவே நீதிக்கட்சி தமிழகத்தை ஆண்டபொழுது இடஒதுக்கீட்டு ஆணைப் பிறப்பிப்பதற்கு காரணமான முத்தையா முதலியார் இக்கல்லூரியில் படித்தவர். ஆக, மிகப்புகழ் பெற்ற பல்துறை அறிஞர்கள் இக்கல்லூயில் தோன்றினர் என்ற காரணத்தால் இக்கல்லூரி ஆங்கில நாட்டிலுள்ள கேம்பிரிட்ஜ் பல்கலை கழகத்திற்கு இணையாக புகழப்பட்டது. அங்குதான் நமது இந்திய நாட்டின் முதல் தலைமை அமைச்சர் பண்டித ஜவஹர்லால் நேரு பயின்றார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இப்பெருமை மிக்க கல்லூரியில் பி.ஏ., பட்டம் பெற்ற பின்னர், இந்நூலாசிரியர் சென்னை மாநிலக் கல்லூரியில் முதுகலையில் பொருளியலில் பட்டம் பெற்றார். பின்னர், இதே கல்லூரியில் 28 ஆண்டுகள் பொருளியல் துறையில் பேராசிரியராக பணியாற்றிய பெருமைக்குரியவர்.

அதன் பின்னர் சென்னைப் பல்கலை கழகத்தில் எம்.ஃபில்., பட்டமும், பின்னர், பல்கலைக்கழக மானியக் குழுவின் பணஉதவியுடன் ஓராண்டு ஆசிரியர் பணியில் விடுமுறை பெற்று, ஆய்வை முடித்து டாக்டர் பட்டத்தை 1997–ல் பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் பெற்றார். இவரது டாக்டர் ஆய்வேடு தமிழ்நாட்டில் விவசாய சீர்திருத்தத்தில் கோயில் நிலங்கள் என்ற தலைப்பில் தமிழ்நாட்டில் முதல்முதலாக கோயில் நிலங்களைப் பற்றி மிக விரிவாக சமர்ப்பிக்கப்பட்டது. இந்நூல் (Temple Lands and the Agrarian Reforms in Tamilnadu during the Dravidian Rule, 2009) சென்னைப் பல்கலைக்கழகத்தில் திராவிட இயக்க ஆய்வு மையத்தால் வெளியிடப்பட்டது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கல்வி நிறுவனத்தால் (USEFI) நடத்தப்பட்ட பொருளாதார இயலில் மிக முன்னேறிய கோட்பாட்டில் புத்தாக்கப் பயிற்சி பட்டறையில் பயிற்சி பெற்றார். அதன்பின் ஆந்திர மாநிலம் ஹைதராபாத் நகரில் செயல்பட்டு வரும் அமெரிக்க ஆய்வு மையத்தில், அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கையும் அதன் பிற நாடுகளின் தொடர்பும் என்ற புத்தாக்கப் பயிற்சியில் பங்கு பெற்றார். இவர், பல்வேறு ஆசிரியர் தொழிற்சங்கங்களிலும், பிற சமூக அமைப்பு களிலும், பல்வேறு பதவிகளை, பொறுப்புகளை ஏற்று பணியாற்றி உள்ளார். இவர் அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி போன்ற நாடுகளுக்கு ஆய்வு கட்டுரைகள் சமர்ப்பிக்க சென்றுள்ளார். இவர் எம்.ஃபில்., பி.எச்.டி. போன்ற ஆய்வாளர்களுக்கு நெறியாளராக பணியாற்றி உள்ளார். தஞ்சை வல்லத்தில் உள்ள டாக்டர். கலைஞர் கருணாநிதி அரசியல் அறிவியல் ஆய்வு மையத்தில் இயக்குநராகவும், அதன்பின்னர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் திராவிட இயக்க ஆய்வு மையத்தில் ஆய்வு பேராசிரியராக பணியாற்றி உள்ளார். இந்திய சமூக சிந்தனை என்ற ஆங்கில ஆய்வு காலாண்டு இதழின் ஆசிரியராக அகில இந்திய அளவில் பணியாற்றி வருகிறார்.

சன் டி.வி., கலைஞர் டி.வி., ஜெயா டி.வி., கேப்டன் டி.வி., வின் டி.வி., இமயம் டி.வி., மெகா டி.வி., போன்ற தொலைகாட்சிகளில் சமூக, பொருளாதார வல்லுநராக பல்வேறு கலந்துரையாடலில் பங்கு பெற்றார். பெற்று வருகிறார். இவர் எழுதிய 'பார்ப்பனரும்-மண்டலும்', 'பட்டினி இந்தியாவில் பாபர் மசூதியும்-இராமர் கோயிலும்', 'அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம்', 'வஞ்சிக்கப்படுகிறது தமிழகம்: சேது-சமுத்திர கால்வாய் திட்டம்' 'The Dravidian Movement in a Nutshell' போன்ற நூல்கள் புகழ் பெற்றவையாகும். இன்னும் பற்பல சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டு தலைப்புகளில் ஏராளமான கட்டுரைகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதி வருகிறார். தற்சமயம் 'தமிழ்த் திருமகன் கால்டுவெல் தமிழ்மொழி வரலாற்றில் ஒரு திருப்புமுனை' என்ற நூலை எழுதியுள்ளார். பல்வேறு சிறப்புகளுக்கு உரியவர் என்பதை பறைசாற்றும் வகையில் அனைத்தையும் சுருக்கம் கருதி இங்கு விரிவாக எடுத்துரைக்க இயலாது. இவரது அடிப்படைக் கொள்கைகள், ஜனநாயகம், சோசலிசம், சமய சார்பின்மை ஆகும். மொத்தத்தில் இந்த ஆசிரியர் ஒரு சமூகநீதி எழுத்தாளர் ஆவார்.

பேராசிரியர். முனைவர். வெ. சிவப்பிரகாசம், குடந்தை அரசினர் ஆடவர் கல்லூரியில் பி.ஏ., பொருளியலில் 1968-இல் பட்டம் பெற்றார். இக்கல்லூரி தென்னிந்தியாவின் கேம்பிரிட்ஜ் என்று புகழ் பெற்றது. இங்கு உலகப்புகழ் பெற்ற கணிதமேதை இராமானுஜன் பயின்றார். ஆங்கில மொழியில் வல்லுநரும், மிகச்சிறந்த ஆங்கில பேச்சாளருமான, வெள்ளி நாக்கு என்று புகழப்பெற்ற, ரைட் ஹானரபுள் வி.எஸ்.ஸ்ரீனிவாச சாஸ்திரி இக்கல்லூரியில் பயின்றவர். தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாத அய்யரும் இக்கல்லூரியின் பணியாற்றிய பெருமையுடையது. ஆக, மிகப்புகழ் பெற்ற பல்துறை அறிஞர்கள் இக்கல்லூயில் தோன்றினர் என்ற காரணத்தால் இக்கல்லூரி ஆங்கில நாட்டிலுள்ள கேம்பிரிட்ஜ் பல்கலை கழகத்திற்கு இணையாக புகழப்பட்டது. இப்பெருமை மிக்க கல்லூரியில் பி.ஏ., பட்டம் பெற்ற பின்னர், இந்நூலாசிரியர் சென்னை மாநிலக் கல்லூரியில் முதுகலையில் 1970-ல் பொருளியலில் பட்டம் பெற்றார். பின்னர், இதே கல்லூரியில் 28 ஆண்டுகள் பொருளியல் துறையில் பேராசிரியராக பணியாற்றிய பெருமைக்குரியவர்.

கலாம் பதிப்பகம்